
கல்கி
KALKI
.9.1968
40


நாகரிகத்தின் புதிய தோரணை!
MAFATLAL GROUP
இதோ, இருமுகம் படைத்த ஒரு ஷர்ட்: அறிவுச் சுடர் தெரிக்கும் மதிப்புக்குரிய தோற்றத்துடன் வளைய வரலாம் அலுவலகத்திலே. அந்தி வேளைகளிலோ எப்போது அணிந்தாலும் குளுமை. உடை நாகரிகத்துடன் இப்புதுமைக் கருத்தை இணைத்தது எது? மஃபத்லால் க்ரூப் படைக்கும் அற்புதத் துணி வகைகளே. எத்தருணத்திற்கும் ஏற்ற துணிகள் எந்த இடத்திலும் அணியலாம், எந்த விதத்திலும் உபயோகிக்கலாம் எப்போதுமே சிறப்பாக விளங்கும் அது.
மபத்லால் க்ரூப்
பாப்ளின்களும் ஷர்ட்டிங்குகளும்
காட்டன், 'டெரீன்'/ காட்டன் 2×2 'டெரீன்'/ காட்டன் பிரின்டெட், டெபிலேஸ்டு, மபிளேஸ்டு & ஸ்ட்ரெட்ச் ரகங்கள்
M 369 TM
நியு ஷராக், (ஷராக்) அகமதாபாத் · நியு ஷராக, நடியாத · ஸ்டாண்டர்ட், பம்பாய் · ஸ்டாண்டர்ட், (நியு சைனு) பம்பாய் · ஸ்டாண்டர்ட், தேவாஸ் · ஸாஸூன், பம்பாய் · ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய் · ஸூரத் காட்டன், ஸூரத் · மபத்லால் பைன, நவ்ஸாரி · மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்

கல்கி

பொருளடக்கம்




கன்னியாகுமரி - சூரிய அஸ்தமனம்

— படம்: கே. எஸ். வி. ராஜன்

கீலக ஆவணி 17 : செப்டம்பர் 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


எவ்வளவு நசுங்கினால் என்ன, இது பிதுரார்ஜித மாச்சே!
கூட்டுச் சேராமை
நேரு-மாடல்
மிகவும் அவசரம்!
தொழிற் பிரச்னை
அணு ஆயுதப் பரவல் தடுப்பு
மொழிப் பிரச்னை
விவசாயம்
அஸ்ஸாம்
அந்நியக் கடன்
அயல் நாட்டுக் கொள்கை
தீன்மூர்த்திக்கு வீடு மாற்றம்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 28 ★ இதழ் 5

நம்பிக்கை சிதைந்தது!

'சமாதானமும், மானுட கௌரவமும், சுதந்திரமும் வளருவதற்கான வித்து செக்கோஸ்லோவேகிய இயக்கத்தில் உள்ளது' என்று சென்ற இதழில் நம்பிக்கையுடன் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறு எழுதிய மை காயுமுன்னரே நம்பிக்கையை அடியோடு சிதிலமாக்கும் செய்தி வந்துவிட்டது! செக் நாட்டில் கம்யூனிஸத்தின் இரும்புப் பிடி தளர்த்தப்படுவதைப் பொறுக்காமல் சோவியத் ருஷியா அந்நாட்டின் மீது படையெடுத்து விட்டது! ஹங்கேரியில் சுதந்திரக் குரல் எழுப்பப்பட்டவுடன் ருஷியா அதன் மீது பாய்ந்து அதன் வாயை ஒடுக்கியதை உலகம் மறக்கு முன்னரே, அந்தக் கோரக் கதை மீண்டும் நடத்தப்பட்டுள்ளது.

செக் தலைவர்களும் ருஷியத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்பாடு கண்டது உலகுக்கே மிகப் பெரிய விஷயமாகத் தோன்றியது. ஆயினும் இப்பேச்சு வார்த்தைகளில் தாங்கள் கண்ட வெற்றியைப் பற்றி டூப்செயும் மற்ற செக் தலைவர்களும் பெரிதுபடுத்தவில்லை. டூப்செயும் அவரது சகாக்களும் காட்டிய விவேகத்தையும் ராஜதந்திரத்தையும் சர்வதேசப் பத்திரிகை உலகம் பாராட்டியது. ஆயினும் பத்திரிகை உலகம் ருஷியாவின் தோல்வியை வலுவாக அழுத்திக் காட்டியதாலேயே, செக் தலைவர்களுடைய ராஜ தந்திரத்தின் பயன் பாதிக்கப்பட்டு விட்டதோ என்று தோன்றுகிறது. தனது தோல்வி குத்திக் காட்டப்பட்டதாலேயே ருஷியா ஆத்திரமுற்று ஒப்பந்தத்துக்கு மாறாகப் பலப் பரீட்சை செய்ய முற்பட்டு விட்டதோ என்று தோன்றுகிறது.

இது மேற்கத்திய ஜனநாயக நாடுகளுக்குச் சோதனை காலம் எனலாம். அவை ருஷியாவும் அதன் சகாக்களும் காட்டும் உறுதிக்கு எதிராக ஒன்றுகூடி, சுதந்திரம் என்ற நல்ல நோக்கத்தில் தமக்குள்ள உறுதிப்பாட்டைக் காட்ட வேண்டும்.

செக் நாட்டை ஒடுக்குவதற்காக ருஷியா செய்யும் முயற்சியை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யச் செக் கம்யூனிஸ்ட் கட்சி திட சங்கற்பம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. செக்கின் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றால் அது அஹிம்சை வழிக்கே வெற்றியாகும். இதில் இடர்ப்பாடுகள் ஏராளம். ஆயினும் இவ்வாறு முயற்சி செய்வதே உலகத்துக்கும், கம்யூனிஸத்துக்கும் கூடத் தார்மிக ரீதியில் ஒரு மகத்தான லாபமாகும்.

மாறாக, அடிப்படைச் சுதந்திரங்களை மறுத்தால்தான் கம்யூனிஸம் வாழ முடியும் என்று ஏற்பட்டால் கம்யூனிஸம் தன்னைத் தானே கண்டித்துக் கொண்டதாக ஆகும்.

ருஷிய நடவடிக்கையை பிரான்ஸ், இத்தாலி ஆகிய தேசத்துக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் கண்டித்திருப்பது முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட்களோ முடிவெடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். என்னே பரிதாபம்!

ருஷியாவுக்குள்ளேயே மக்களுக்குச் சுதந்திர வேட்கை பிறந்திருக்கக் கூடும்: அதிலிருந்து தற்காப்புப் பெற விரும்பியே ருஷிய சர்க்கார், ஒரு சமிக்ஞையாக — ராஜதந்திர நடவடிக்கையாக — செக் மீது படையெடுத்திருக்கக் கூடும்.

மேற்கத்திய நாடுகளுக்குச் சுதந்திர வாழ்வை வளர்ப்பதில் என்ன சக்தி இருக்கிறது என்பதற்குப் பரீட்சையாக அமைந்திருக்கிறது ருஷியப் படையெடுப்பு. 'மேல்நாடுகளுக்குச் சக்தி இருப்பதாக நினைப்பது ஒரு மாயை தானா? அதை எந்த நாடும் நம்பிச் சார்ந்திருக்க முடியாதா?' என்ற கேள்விகள் இன்று எழுகின்றன! இந்தத் துரதிருஷ்டமான முடிவுக்கு அவசரப்பட்டு வந்து விடாதிருப்போமாக. செக் படையெடுப்புக் காரணமாகவே அண்டையிலுள்ள கம்யூனிஸ ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளில் ஆத்திரமேற்பட்டு செக்கில் மேற்கொள்ளப்பட்

காமகோடியின் கருணைமொழி

நான் நான் என்று எதை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அதுதான் — அந்த அறிவுதான் — சுவாமி. சுவாமி என்கிற அந்தப் பிரகாசம் உன்னிடம் இல்லை என்றால் உன்னால் சுவாமியைப் பற்றி நினைக்கவே முடியாது. இதுதான் வேதத்தின் முடிவில் சொல்வது. அந்தத் தத்துவத்தைத் தேடித் தேடித் தூரப் போய்க் கொண்டிருக்கிறோம். ஆனால் தேடும் சக்தியை எது கொடுக்கிறதோ அது உன் உள்ளேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறது. தொடுவானத்தைப் பிடிப்பதற்காகப் போய்க் கொண்டேயிருந்தால் அதுவும் அப்பால் போய்க் கொண்டேயிருக்கும். நாம் தேடுகிற சுவாமியும் அப்படியே. நீ இருக்கிற இடமேதான் இந்தத் தொடுவானம்.



டது போன்ற சீர்திருத்தங்களை அந்நாடுகளும் பின்பற்ற முன்வரலாம். இவ்வாறு நிகழ்ந்தால் ருஷியப் படையெடுப்பு வியர்த்தமே ஆகும்.

ஐ. நா. பந்தோபஸ்து சபையில் ருஷியாவைக் கண்டிக்கும் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் இந்தியப் பிரதிநிதி கலந்து கொள்ள வேண்டாம் என்று இந்திராகாந்தியின் சர்க்கார் கட்டளை பிறப்பித்தது வெட்கக்கேடாகும். வெட்கக்கேடு என்பதோடு இது நின்று விட்டால்கூடப் பரவாயில்லை. அதற்கும் மேலாக, இது நம் தேச கௌரவத்தையே குலைக்கும் குற்றம் என்று கூடச் சொல்லலாம். ருஷிய சர்க்கார் மகா பாதகமான ஒரு குற்றத்தைச் செய்துள்ளது. அதைக் 'கண்டிக்கிறோம்' என்ற வார்த்தையைத் தீர்மானத்தில் பிரயோகிப்பதற்கு இந்திராகாந்தி ஏன் பயந்து நடுங்க வேண்டும் ? செக் நாட்டின் மீது படையெடுத்துள்ள வார்ஸா ஒப்பந்த நாடுகளில் 'இந்தியா ஒன்றல்லவே ! கண்டனம் தெரிவிப்பதற்கு நியாயமுள்ள ஒரு குற்றம் நிகழ்ந்து அதில் நமது வாக்கும் கோரப்படும் சந்தர்ப்பம் எழுந்த போது கண்டிக்காமலிருப்பது குற்றத்திலேயே மானசிகமாகப் பங்கு எடுத்துக் கொள்வதற்குச் சமானமாகும். 'ருஷியாவைக் கண்டிப்பதால் செக்கோஸ்லோவேகியாவுக்கு என்ன லாபம்?' என்று கேட்கிறார் பிரதமர். 'உலகமெல்லாம் கண்டிக்கும்போது இந்தியா கண்டன வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததால் செக்கோஸ்லோவேகியாவுக்கு என்ன லாபம்?' என்றுதான் திரும்பக் கேட்கத் தோன்றுகிறது. இந்திரா காந்தி தாமே நேரடியாகவோ, நமது ருஷிய தூதுவர் மூலமோ ருஷியப் படையெடுப்பு வாபஸாகவும், செக் தலைவர்கள் விடுதலையாகவும் முயன்றால்தான் அவரது பெயரும், நமது நாட்டின் கௌரவமும் புத்துயிர் பெறும். ஹங்கேரியில் சுதந்திர இயக்கம் ஒடுக்கப்பட்டபோது, 'வழவழ குழகுழ' என்று நடந்து கொண்டு, நமது 'நடு நிலைமை'க்காக உலகத்தால் பரிகசிக்கப்பட்டோம். மீண்டும் அதே போல் செய்வது அவமானகரம். இது எவ்வளவு அவமானம் என்பதற்கு ஸ்ரீ அசோக மேத்தாவின் ராஜிநாமாவே அளவுகோல்.

ஓவியர் மணியம் நிதி

பொன்னியின் செல்வனைத் தாங்கி வரும் கல்கி இதழ்களைப் பல குடும்பங்கள் இரு கரங்களையும் நீட்டி வரவேற்கின்றன என்றால் வேறு சில குடும்பங்கள் வாரா வாரம் நாலு அல்லது ஆறு கரங்களைக்கூட நீட்டி வரவேற்கின்றன!

ஆம், சண்டை சச்சரவின்றிப் பொன்னியின் செல்வனைப் படிப்பதற்காக இன்று பல குடும்பங்கள் இரண்டு, மூன்று கல்கி இதழ்களை வாங்குகின்றன!

இப்படிப் பேரார்வத்தோடு பொன்னியின் செல்வனைப் படிப்பவர்கள் கூடவே ஓவியர் மணியம் அவர்களைக் குறித்தும் நினைத்துப் பார்ப்பது இயல்பே.

பேராசிரியரின் அமர கதாபாத்திரங்களுக்கு அழியா உருவம் கொடுத்து, பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் மன மேடையில் உலாவ விட்டவர் மணியம். இந்திய ஓவிய, சிற்பக் கலைகளின் வீச்சினையும் ஆழத்தினையும் நன்கு உணர்ந்தவர். ''மணியத்தினுடைய படங்களைத் தாங்கி வரும் இந்தப் புத்தகம் யோக்கியர்களையும் (இப் புத்தகத்தைத்) திருடத் தூண்டும்'' என்று ராஜாஜி அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

இவ்விதம் புகழ் பெற்ற ஓவியர் மணியம் இன்று உடல்நலமின்றி வருந்திக்கொண்டிருக்கிறார் என்பதால் அவருக்கு ஒரு நிதி திரட்டி அளிக்கத் தீர்மானித்தோம். கல்கி காரியாலயத்தின் சார்பில் ரூ. 5000 கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். இது தவிர அவரது எண்ணற்ற ரசிகர்களும் இந்த நிதிக்குத் தங்களால் இயன்ற நன்கொடையை வழங்க விரும்புவார்கள் என்று கருதுகிறோம். நிதி உதவ நினைப்போர் இந்த டிசம்பர் மாத இறுதிக்குள் அதனை மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை—10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம். 'ஓவியர் மணியம் நிதி' என்று தவறாமல் குறிப்பிடக் கோருகிறோம். அவர்களின் பெயர்கள் கல்கியில் பிரசுரமாகும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

கஜானாவுக்கு வருமானம் பெறுவதற்காக ராஜ்ய அரசாங்கங்களே லாட்டரி நடத்துமானால், அதன்பின் தனி மனிதர்கள் சூதாடுவதை தடுப்பதற்கும், சூதாட்டக்காரர்களுக்குத் தண்டனை விதிக்குமாறு மாஜிஸ்திரேட்களைக் கேட்பதற்கும் சர்க்காருக்குத் தார்மிக உரிமை ஏது? சூதாட்ட மனப்பான்மைக்கு ஊக்கம் தருவதிலுள்ள அதருமத்தையும், அதன் விஸ்தாரமான தீய விளைவுகளையும் பற்றி அதிகம் எழுதி அச்செழுத்துக்கான மையத்தையும், அச்சடிப்பதற்கான சக்தியையும் விரயம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

சர்க்கார் லைசென்ஸ் தந்து அநுமதித்துள்ள குதிரைப் பந்தயங்களுக்கு வரி வசூலிக்கப்படுகிறது. இதுவே அதருமம் என்று கருதப்பட்டிருக்கிறது. இம்மாதிரி வருவாய் பெறுவதைத் தவிர்ப்பதற்கு (அல்லது குறைப்பதற்கு) சட்டப்படி பரிகாரம் தேடியதுமுண்டு. வருமானத்துக்காக இவ்விதமான வரிகள் விதிக்கப்படவில்லை என்றும், தீமையைக் குறைப்பதற்கே விதிக்கப்படுவதாகவும் சர்க்கார் கூறினாலும், நாளாவட்டத்தில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு என்னவெல்லாம் செய்யலாமோ அதைச் செய்து தீமையை அதிகப்படுத்துவதாகவே முடியும் என்று சிலர் சரியாக எண்ணினர். அடிப்படையில் மக்களுக்குத் தீமையான ஒன்றின் மீது வரி போடும்போது, அந்த வரியுடன் பட்ஜெட் சம்பந்தப்படுத்தப் பெறும்போது, இந்தப் பிரச்னை எழவே செய்யும். கள்ளுக்கடைகளுக்கு லைசென்ஸ் தந்து வரி வாங்குவதும் இதைச் சேர்ந்ததே.

எந்த அரசாங்கமேனும் தீமையான ஒன்றிலிருந்து கிடைக்கிற வருமானத்துடன் நிருவாகத்தை இணைத்தால் அது தவறேயாகும். ஒரு தீமையைக் குறைக்கவோ, அறவே அகற்றவோ விரும்புகையில், அந்தத் தீமையிலிருந்தே வருமானம் தேடுவது நல்லாட்சியல்ல.

தர்ம அடிப்படையில் முடிவு தெளிவானாலும், சட்ட அடிப்படை எப்படி இருக்கிறது பார்ப்போம். ராஜ்ய சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லைகள் உண்டு. அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வதே சட்ட அடிப்படையைத் தெரிந்து கொள்வதற்குத் தொடக்கம். இந்திய அரசியல் சாஸனம், ராஜ்ய சர்க்கார்களுக்கு என்றே குறிப்பிட்டுச் சில அதிகாரங்களை வழங்கியுள்ளது. இதோடு அவ்வரசாங்கங்களின் ஆணை இட்டவட்டமாகக் கட்டுப்படுத்தப் பெறுகிறது. இதற்கு அதிகப்படியாக (Residuary) அதிகாரம் ஏதும் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கிடையாது. நிர்வாகத் துறையிலும் சரி, சட்டமியற்றுவதிலும் சரி, சாஸனம் தந்துள்ள அதிகாரங்களுக்கு மேல் புது அதிகாரங்கள் எடுத்துக் கொள்ள ராஜ்யங்களுக்கு உரிமை இல்லை. இன்றைய இந்திய அரசியல் சாஸனப்படி அதிகப்படியான அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்குத்தான் உண்டு; ராஜ்ய சர்க்கார்களுக்குக் கிடையாது. சாஸனத்தின் 162வது ஷரத்தைப் பார்த்தோமாயின் ராஜ்ய அரசாங்கத்தின் ஆணை எல்லையைக் கூறும் பட்டியலான ஏழாவது ஷெட்யூலில் கூறியுள்ள இனங்களுக்கு அப்பால் செல்ல ராஜ்ய சர்க்கார்களுக்கு அதிகாரம் இல்லை என்று தெரியும்.

ஒரு ரூபாய் — அல்லது அதற்கு அதிகம் பெறுமானமுள்ள அதிருஷ்டச் சீட்டில் பணம் போட்டால் பெரிய பரிசு பெறலாம் என்று சகல மக்களுக்கும் சபலம் காட்டிச் சர்க்காருக்குப் பணம் சேர்ப்பதற்கு எந்த ராஜ்ய சர்க்காரும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.

சட்டத்துக்கு விரோதமாகச் செல்கிற எண்ணமின்றி, சட்டம் தெரியாமல் கவனக் குறைவாகவே லாட்டரி நடத்தப்படுகிறது என்று வைத்துக் கொண்டாலுங்கூட, அதிகாரத்தைச் சட்ட வரம்பு மீறிப் பிரயோகிப்பதில் ஒரு தொடக்கம் ஏற்பட்டு விட்டால் அதற்கு ஒரு முடிவு இராது. மனிதனுக்குள்ளே பதுங்கியிருக்கும் சூதாட்ட மனப்பான்மையைப் பயன்படுத்தி எளிதில் பணம் பெறுவதில் தனக்கு உரிமை யிருப்பதாக நாளாவட்டத்தில் சர்க்கார் நன்றாகவே நிலைப்படுத்திக் கொள்ளும். உழைக்காமல் சம்பாதிக்கிற ஆசை அனைவருக்கும் உள் மனத்தில் உண்டு. உழைக்காமல் சம்பாதிக்கிற எண்ணத்தில் மக்களை ஊக்குவது மிக மோசமான ஆட்சியாகும். சர்க்கார் தற்கொலை செய்து கொள்ள நினைத்தாலன்றி இதைவிட மோசமான எதையும் செய்வதற்கில்லை. மக்களின் மனோபாவத்தை இது நிரந்தரமாகப் பாழாக்கும். எல்லா ராஜ்யங்களும் சேர்ந்ததுதான் இந்தியா. எனவே, ராஜ்ய சர்க்கார்கள் யாவும் அதிருஷ்டச் சீட்டுத் திட்டத்தில் இறங்கினால் தேசமே பாழானதாகும். இந்தியாவின் எதிர்காலத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமாயின் அதற்காகச் செய்ய வேண்டிய முதல் காரியம், மக்களிடம் கடும் உழைப்புணர்வை ஏற்படுத்துவதேயாகும். அதற்கு நேர்மாறாகச் செய்வது சற்றும் அநுமதிக்கத் தக்கதல்ல.

தேசத்தின் தலைமையான நீதி பீடத்துக்கு இந்த விவகாரத்தை எடுத்துச் சென்று, அதன் தீர்ப்பைப் பெறலாம். ஸுப்ரீம் கோர்ட் இவ்விஷயத்தை ஆலோசித்து, முடிவைத் தெரிவிக்கலாம். இவ்வாறு விஷயத்தை ஸுப்ரீம் கோர்ட்டுக்கு விடுமாறு ராஷ்டிரபதியைக் கேட்டுக் கொள்ளலாம்.

அதிருஷ்டச் சீட்டின் விலை குறைவுதான். ஆனால் இதனால் பெறுகிற மொத்த வருமானம் சிறியதாக இருக்காது. இவ்விதத்தில் பெரிய வருமானம் பெற ராஜ்யங்களுக்கு அதிகாரம் தரவேண்டும் என்று இந்திய சாஸனத்தை வகுத்த அரசியல் நிர்ணய சபையில் யாரேனும் பிரேரணை செய்திருந்தால், அந்தச் சட்ட மன்றம் முழுதுமே அதை எதிர்த்திருக்கும். பாரத தேசம் தனது ராஜ்யங்கள் இவ்வாறு பணம் சேர்த்து பட்ஜெட்டை ஈடுகட்ட அநுமதித்தால் அது அரசாட்சிக் கலையில் ஒரு விசித்திரமான புதுமையாக இருப்பது மட்டுமின்றி, எல்லையில்லாத வெட்கக்கேடாகவும் இருக்கும்.

இங்கு கூறியிருப்பதைவிட அழுத்தமாக லாட்டரிச் சீட்டுத் திட்டத்தின் சட்ட விரோதமான தன்மையை வலியுறுத்துவதற்கான சட்ட ஞானம் எனக்கில்லை. எவ்வளவு விரைவில் இயலுமோ, அவ்வளவில் ஸுப்ரீம் கோர்ட்டின் முடிவைப் பெறுவதற்காக, இந்தப் பிரச்னையை நீதிபீடத்துக்கு விடுமாறு ராஷ்டிரபதி தூண்டப்படுவாரென நம்புகிறேன்.

ooo

பணம் மிச்சம் பிடிப்பதற்காக வாக்கை மீறியிருப்போம். சத்தியப் பிரமாணமாகத் தந்த வாக்கின் புனிதத் தன்மையை உணருவோம். முக்கியமாக, அந்த வாக்கை நம்பி எதிர்த்தரப்பினர் உண்மையுடன் ஒழுகிய பின்னர், நாம் வாக்கை முறிக்கக் கூடாது என்பதை உணருவோம். நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த பெரியோர்களும், நமது அரசியல் சாஸனத்தை வகுத்தவர்களும் தந்த வாக்கை நம்பியே சம்ஸ்தான மன்னர்கள் தமது ஆட்சியதிகாரத்தை விட்டனர் என்பதை நினைவு கொள்வோம்.

சந்தேகாஸ்பதமான விஷயங்களை சுப்ரீம் கோர்ட்டின் முடிவுக்கு விடுவது நியாயம். ஆனால் வாக்குறுதியும், சத்தியப் பிரமாணமும் சந்தேகாஸ்பதமான விஷயமே அல்ல. ஐம்பது கோடி மக்களின் தரும உணர்வே இதில் முடிவெடுக்க வேண்டும். ஐம்பது கோடி மக்களின் தரும உணர்வு என்ன முடிவெடுக்கும் என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. நம் மக்களின் தரும உணர்வில்தான் இதிகாசங்கள் உருவாயின. சக்கரவர்த்தித் திருமகன் முடி துறந்து, அரண்மனை துறந்து வனம்


சென்றது தன் தந்தையின் வாக்கைக் காப்பாற்றத்தான். கோபம்கொண்ட லக்ஷ்மணன், ஒரு கிழவன் தன் இளம் மனைவியிடம் மதியிழந்து தந்த வாக்குறுதி ராமனைக் கட்டுப்படுத்தாது என்று வாதாடினான். மந்திரிகளில் ஒருவரும், மதிப்புப் பெற்ற தத்துவ நிபுணருமான ஜாபாலியும் தசரதனின் வாக்கு செல்லத்தக்கதல்ல என்றே வாதம் செய்தார். ஆனால் ராமன்மீதும் மற்றவர்கள் மீதும் இந்த வாதங்கள் பதியவே இல்லை.

முன்னாள் மன்னர்களுக்கு மானியத்தை நிறுத்துவது வருமான ஏற்றத் தாழ்வை நீக்கும் சோஷலிஸப் பிரச்னை அல்ல. முன்னாள் மன்னர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை இந்திய சர்க்கார் முறிக்கலாமா என்பதே பிரச்னை. மன்னர்களுக்கு ஒரு வருடாந்தரத் தொகை அளிக்கப்படும் என்று உடன்படிக்கையில் வாக்குத் தந்ததை நம்பியே அவர்கள் ராஜ்யாதிகாரத்தை முற்றிலும் விட்டுக் கொடுத்து, தமது ராஜ்யங்களை ஆளும் அதிகாரத்தை யூனியன் சர்க்காருக்குத் தந்தனர். சர்தார் வல்லபபாய் படேல் வற்புறுத்தியதன் மீது சர்க்கார் மன்னர்களுக்குத் தந்த வாக்குறுதி அரசியல் சாஸனத்திலும் ஓர் அங்கமாக்கப்பட்டது.

வாக்குத் தந்தவர்களை ஒப்பந்தம் **மேலும் கட்டுப்படுத்த வேண்டும்** என்றே அது சாஸனத்தின் அங்கமாக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு ஒப்பந்தமானது சாஸன ஷரத்தாகியபடியாலேயே, சாஸனத் திருத்தம் என்கிற பெயரில், பார்லிமெண்டின் அதிகாரம் என்ற மேக மூட்டத்தைப் பரப்பி, ஒப்பந்தத்தை முறிக்கப் பார்க்கிறார்கள். சில அம்சங்களில் சாஸனத்தைத் திருத்த பார்லிமெண்ட் உரிமை கோரலாம். ஆனாலும் ஒரு கெட்ட விஷயத்தை நல்லதாகக் காட்டப் பார்லிமெண்டாலும் முடியாது. பார்லிமெண்டில் நிறைய வாக்குகள் பெற்றுவிடுவதால், தவறான ஒரு செயல் சரியாகிவிடாது. ராஜ மானிய நிறுத்தம் வெறும் பண விஷயமல்ல. அது இந்தியாவின் கீர்த்தியையும் நேர்மையையுமே பாதிக்கும்.

எனவே, இது சாஸனத்தை மாற்றுகிற பிரச்னை அல்ல. வாக்குறுதியும், உடன்படிக்கையும் வெறும் காகிதத் துண்டுதானா என்பதே பிரச்னை. யுத்தத்தில் இறங்கியுள்ள எந்த நாடும் பெல்ஜியத்தின் வழியாகப் படையெடுத்துச் செல்லக் கூடாது என்று முன்பு ஓர் உடன்படிக்கை இருந்தது. அதை மீறினார் ஜெர்மனி அதிபர் கெய்ஸர் வில்ஹெல்ம். நாம் பெல்ஜியத்தின் வழியாகப் படை அனுப்புவதற்கு ஒரு காகிதத் துண்டு குறுக்கே நிற்க முடியாது என்றார் கெய்ஸர். இதை நர்ஸ் எடித் காவெல் எதிர்த்தாள். அவளுக்கு ஜெர்மானியர் மரண தண்டனை விதித்தனர். அவளுக்கு மரியாதை செலுத்துமுகமாக லண்டனில் சிலை எடுக்கப்பட்டிருக்கிறது. நர்ஸ் எடித் காவெல்லின் உதாரணத்திலிருந்து இந்திரா காந்தி தெளிவு பெற வேண்டும். ஆன்மிகப் புகழ் வாய்ந்த நாடு பாரதம். அப்புகழைச் சிதைக்கும் ரீதியில் இந்திரா காந்தி ஏதும் செய்யலாகாது.

செய்திப் படங்கள்



சென்னை, தியாகராயநகர் கிருஷ்ணகான சபையில் அறுபதாண்டு நிறைந்த செம்மங்குடி அவர்களுக்கு ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் தலைமையில் பாராட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்துக்குப் பிறகு ஸ்ரீ செம்மங்குடி இன்னிசை வழங்கினார்.



அமெரிக்க தகவல் அதிகாரி திரு எட்டி டியர்ஃபீல்டு சென்னையிலிருந்து பதவி உயர்வு பெற்றுச் செல்வதையொட்டி அவருக்குக் கல்வி காரியாலயத்தில் கல்வி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் பிரிவுபசார தேநீர் விருந்தளித்தார். கல்வி துணை ஆசிரியர் திரு வி. ராஜேந்திரன் டியர்ஃபீல்டு தம்பதியினருக்கு வாழ்த்துரை வழங்குகிறார்.



ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானைத் தரிசிக்க வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு எஸ். தொண்டமான் அவர்களையும், அவரது துணைவியார் அவர்களையும் கோவில் தர்மகர்த்தாவும் செட்டிநாடு கார்ப்பொரேஷன் மானேஜருமான திரு ஆர். எம். பழனியப்ப செட்டியார் மலர் மாலை அணிவித்து வரவேற்கிறார்.



கல்கத்தா சர்வகலாசாலை மாணவர்களுக்காக, பாரதி தமிழ்ச் சங்கத்தில் தமிழ் வகுப்பை கல்கத்தா சர்வகலாசாலை துணை வேந்தர் டாக்டர் எஸ். என். ஸேன் அவர்கள் 'ஆரம்பித்து வைத்தார்.

பொன்னியின் செல்வன்

பூர்வ கதை

காஞ்சி நகரத்திலிருந்து சோழவள நாட்டுக்கு வாலிப வீரன் ஒருவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் பெயர் வல்லவரையன் வந்தியத் தேவன். ஒரு காலத்தில் தமிழகத்தில் வலிமை பெற்ற அரசர்களாயிருந்த வாணர் குலத்தை அவன் சேர்ந்தவன். தற்போது காஞ்சியில் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலரின் அபிமானத்தைப் பெற்ற அந்தரங்க வேலைக்காரன். அச்சமயம் தஞ்சையில் தங்கியிருந்த சுந்தர சோழ மகாராஜாவுக்கு ஆதித்த கரிகாலரிடமிருந்து ஓலை எடுத்துக் கொண்டு அவன் சென்றான்.

வழியில் வீர நாராயண புரத்துக்கருகில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவருடைய பழக்கம் அவனுக்கு ஏற்பட்டது. அந்த வைஷ்ணவரிடம் சில காரணங்களினால் வந்தியத்தேவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

கடம்பூர் செங்கண்ணன் சம்புவரையர் என்பவரின் மதிள் சூழ்ந்த பெரிய மாளிகையில் வந்தியத் தேவன் அன்றிரவு தங்கினான். சம்புவரையரின் புதல்வன் கந்தன் மாறவேள் வந்தியத்தேவனுடைய அருமை நண்பன்.

கடம்பூர் மாளிகைக்கு அன்றிரவு இன்னும் பல பிரபல விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் பழுவூர்ச் சிற்றரசரான பழுவேட்டரையர். சோழ சாம்ராஜ்யத்தில் அச்சமயம் மிக உன்னதமான பதவிகளை வகித்து வந்தவர். ஐம்பத்தைந்து வயதுக்குமேல் அவர் ஓர் இளம் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டிருந்தார். தாம் போகுமிடமெல்லாம் மூடு பல்லக்கில் தம்முடைய இளம் மனைவியையும் அழைத்துப் போவது அவரது வழக்கம். அன்றிரவு கடம்பூர் மாளிகைக்கு வரும்போதும் அவரைத் தொடர்ந்து மூடுபல்லக்கு வந்தது. பழுவேட்டரையரின் பெண்ணாசையைக் குறித்து நாட்டிலுள்ள ஜனங்கள் பரிகாசமாகப் பேசுவதுபோல் கடம்பூர்மாளிகைக்கு அன்று வந்திருந்த விருந்தாளிகளும் பேசிக் கொண்டார்கள்.

பல்லக்கில் இருந்த பெண்மணியிடம் ஓர் ஓலையைக் கொடுக்க வேண்டும் என்று வீர வைணவ ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம் கேட்டுக் கொண்டான். வந்தியத்தேவன் அதைக் கோபத்துடன் மறுத்து விட்டான்.

அன்றிரவு கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து, வேலனாட்டம் முதலிய ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றுக்குப் பின்னர், நள்ளிரவில் ஓர் அந்தரங்கக் கூட்டமும் நடந்தது. சோழ சாம்ராஜ்யத்தின் முக்கிய அதிகாரிகள் பலரும் பிரபல தலைவர்களும் அதில் கலந்து கொண்டனர். வந்தியத்தேவன் மேல் மாடியில் மறைவான இடத்திலிருந்து அக்கூட்டத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தான். ஒரு பெரிய அரசியல் சதி அங்கு நடைபெறுவதை அறிந்தான். சுந்தரசோழ மகாராஜாவின் உடல்நிலை மோசமாயிருந்தபடியால் அவருக்கு அடுத்தபடி பட்டத்துக்கு உரியவர் யார் என்பதைப் பற்றி அந்தக் கூட்டத்தில் பேச்சு நடந்தது.

சுந்தர சோழரின் மூத்த குமாரர் ஆதித்த கரிகாலர்தான் நியாயமாகப் பட்டத்துக்கு உரியவர் என்று வந்தியத்தேவன் கருதியிருந்தான்.

ஆனால் அன்றிரவு அங்கு கூடியிருந்தவர்கள் காலஞ்சென்ற கண்டராதித்தரின் புதல்வரான இளவரசர் மதுராந்தக தேவருக்கே சிம்மாசனம் உரியது என்று முடிவு செய்தார்கள்.

சிவபக்த சிகாமணியான கண்டராதித்தர் சுந்தர சோழரின் பெரிய தகப்பனார். கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தக தேவரும் இளமையிலேயே இந்த இகலோக வாழ்வை





வெறுத்துத் துறவு மார்க்கத்தில் மனத்தைச் செலுத்தி யிருந்தார் என்று நாட்டில் வதந்தி பரவியிருந்தது.

பழுவேட்டரையர் தம்முடனே மூடுபல்லக்கிலே அழைத்து வந்தது அவருடைய இளம் மனைவியல்லவென்றும், இளவரசர் மதுராந்தக தேவர்தான் என்றும், அச்சதிக் கூட்டத்தின் முடிவில் வெளியாயிற்று. கடம்பூர் மாளிகையில் இரவு மூன்றும் ஜாமத்தில் ''வாழ்க மதுராந்தக உத்தம சோழர்!'' என்னும் வீர முழக்கம் எழுந்தது.

இவற்றை யெல்லாம் கடம்பூர் மாளிகையின் வெளிச் சுற்று மதிள் மேல் ஒளிந்திருந்து ஆழ்வார்க்கடியானும் கவனித்துக் கொண்டிருந்தான்.





ஒன்பதாம் அத்தியாயம் ◆ வழிநடைப் பேச்சு

பாலாற்றுக்கு வடக்கேயுள்ள வரண்ட பிரதேசங்களிலேயே வந்தியத்தேவன் அதுகாறும் தன் வாழ்நாளைக் கழித்தவன். ஆகையால் ஆற்று வெள்ளத்தில் நீந்துவதற்கு அவனுக்குத் தெரியாமல் இருந்தது. ஒரு சமயம் வடபெண்ணைக் கரையில் எல்லைக் காவல் புரிந்து வந்தபோது, குளிப்பதற்காக ஆற்றில் இறங்கினான். ஒரு பெரிய நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டான். அந்தப் பொல்லாத விஷமச் சுழல் அவனைச் சுற்றிச் சுற்றி வரச் செய்து வதைத்தது. அதே சமயத்தில் கீழேயும் இழுத்துக் கொண்டிருந்தது. சீக்கிரத்தில் வந்தியத்தேவனுடைய பலத்தையெல்லாம் அந்தச் சுழல் உறிஞ்சி விட்டது. ''இனிப் பிழைக்க முடியாது; சுழலில் மூழ்கிச் சாக வேண்டியதுதான்!'' என்று வந்தியத்தேவன் நிராசை அடைந்த சமயத்தில் தெய்வாதீனமாக நதிச் சுழலிலிருந்து வெளிப்பட்டான். வெள்ளம் அவனை அடித்துக் கொண்டு போய்க் கரையில் ஒதுக்கிக் காப்பாற்றியது!

அன்றிரவு வந்தியத்தேவன் மீண்டும் சென்று படுத்தபோது அவனுக்கு நதியின் சுழலில் அகப்பட்டுத் திண்டாடியது போன்ற அதே உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு பெரிய இராஜாங்கச் சதிச் சுழலில் தன்னுடைய விருப்பமில்லாமலே விழுந்து அகப்பட்டுக் கொண்டதாகத் தோன்றியது. அந்த நதிச் சுழலிலிருந்து தப்பியதுபோல் இந்தச் சதிச் சுழலிலிருந்தும் தப்ப முடியுமா? கடவுள் தன்னை மறுமுறையும் காப்பாற்றுவாரா?

அன்று அவன் கடம்பூர் மாளிகையில் நடந்த நள்ளிரவுக் கூட்டத்திலிருந்து அறிந்து கொண்ட விஷயங்கள் அவனைத் திக்குமுக்காடச் செய்து விட்டன. சோழ மகா சாம்ராஜ்யத்துக்கு வெளிப் பகைவர்களால் ஏற்பட்டிருந்த தொல்லைகள் நீங்கிச் சில வருஷங்கள்தான் ஆகியிருந்தன. இளவரசர் ஆதித்த கரிகாலர் மகாவீரர்; போர்க் கலையில் நிபுணர்; ராஜதந்திரத்தில் சாணக்கியர். தம்முடைய அறிவாற்றல்களையும் சோழ நாட்டுப் படைகளின் போர்த் திறனையும் பூரணமாகப் பயன்படுத்தி இரட்டை மண்டலத்துக் கிருஷ்ண மன்னனின் ஆதிக்கத்தைத் தொண்டை மண்டலத்திலிருந்து அடியோடு தொலைத்தார். வெளிப் பகை ஒருவாறு ஒழிந்தது. இந்த நிலைமையில் உட்கலகமும் சதியும் தலை தூக்க ஆரம்பித்திருக்கின்றன.

வெளிப்பகையைக் காட்டிலும் அபாய கரமான இந்த உட்பகையின் விளைவு என்ன ஆகும்?

சோழ நாட்டின் புகழ் பெற்ற வீரர் களும் அமைச்சர்களும் தலைவர்களும் அதிகாரிகளும் அல்லவா இந்தப் பயங் கரமான முயற்சியில் ஈடுபட்டிருக் கிறார்கள்? பழுவேட்டரையரும் அவ ருடைய சகோதரரும் எப்பேர்ப்பட்ட வர்கள்! அவர்களுடைய சக்தி என்ன! செல்வாக்கு என்ன? இங்கே இன்று கூடியிருந்த மற்றவர்கள்தான் எவ் வளவு பெயரும் புகழும் செல்வாக்கும் பராக்கிரமமும் வாய்ந்தவர்கள்? இத் தகைய கூட்டம் இதுதான் முதற் கூட்டமா யிருக்குமா? பழுவேட்டரை யர் மூடு பல்லக்கில் மதுராந்தகரை வைத்து இவ்விதம் இன்னும் எத்தனை இடங்களுக்குக் கொண்டு போயிருக் கிறாரோ? அடாடா! முதிய வயதில் ஓர் இளம் பெண்ணை மணந்து கொண்டது இவருக்கு இந்தச் சதிகார முயற்சிக்கு எவ்வளவு சாதகமாகப் போய்விட்டது?

சோழ சிம்மாசனத்துக்கு உரியவர் இளவரசர் ஆதித்த கரிகாலர்தான் என்பது பற்றி இன்று வரை வந்தியத் தேவனுடைய மனத்தில் எவ்விதச் சந் தேகமும் உதிக்கவில்லை. போட்டி ஒன்று ஏற்படக்கூடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை. கண்டராதித்த னுடைய புதல்வர் மதுராந்தகரைப் பற்றி அவன் கேள்விப்பட்டதுண்டு. தந்தையைப் போலவே புதல்வரும் சிவபக்திச் செல்வர் என்று அறிந்த துண்டு. ஆனால் அவர் இராஜ்யத் துக்கு உரிமையுள்ளவர் என்றோ, அதற்காகப் போட்டியிடக் கூடியவர் என்றோ கேள்விப்பட்டதில்லை. அந்த எண்ணமே அவனுடைய மனத்தில் அது வரையில் தோன்றியதில்லை.

ஆனால் நியாயா நியாயங்கள் எப்படி? பட்டத்துக்கு உரியவர் உண்மையிலே யார்? ஆதித்த கரிகாலரா? மதுராந் தகரா? யோசிக்க யோசிக்க இருதரப் பிலும் நியாயம் இருப்பதாகவே தோன் றியது. போட்டி என்று உண்மையில் ஏற்பட்டால், இவர்களில் யார் வெற்றி பெறுவார்கள்? தன்னுடைய கடமை என்ன? ஆஹா! என்னென்னவோ மனக் கோட்டை கட்டிக் கொண்டு காஞ்சியிலிருந்து இந்த யாத்திரை கிளம்பினோமே? பட்டத்து இள வரசர் ஆதித்த கரிகாலருக்கு உகந்த படி நடந்து கொண்டு சோழப் பேரரசில் பெரிய பதவிகளை அடையலாம் என்று ஆசைப்பட்டோமே! காலா காலத்தில் வாணர் குலத்தின் பூர்வீக ராஜ்யத்தைக்கூடத் திரும்பப் பெற லாம் என்று நினைத்தோமே? இதற் கெல்லாம் சாதனமாக எந்தப் புளியங் கொம்பைப் பிடித்தோமோ, அதுவே முறிந்துவிடும் போலிருக்கிறதே?......

இத்தகைய சிந்தனைகளினால் வந்தியத் தேவன் இரண்டாம் முறை வந்து படுத்த பிறகு வெகு நேரம் தூக்கம் பிடிக்காமல் திண்டாடினான். கடைசி யாக, இரவு நாலாம் ஜாமத்தில் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் அவனுக்கு ஒரு வாறு தூக்கம் வந்தது.

மறுநாள் காலையில் உதய சூரிய னுடைய செங்கிரணங்கள் சுளீர் என்று அவன்பேரில் பட்டபோதுகூட வந்தியத்தேவன் எழுந்திருக்க வில்லை. கந்தமாறன் வந்து தட்டி எழுப்பிய போதுதான் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தான்.

"இராத்திரி நன்றாய்த் தூக்கம் வந்ததா?" என்று கந்தமாறன், விருந் தினரை உபசரிக்கும் முறைப்படி கேட்டான். பிறகு அவனாகவே, "மற்ற விருந்தினரெல்லாம் தூங்கச் சென்ற பிறகு நான் இங்கு வந்து பார்த்தேன். நீ நன்றாய்க் கும்பகர்ண சேவை செய்து கொண்டிருந்தாய்!" என்று சொன்னான்.

வந்தியத்தேவன் மனத்தில் பொங்கி எழுந்த நினைவுகளையெல்லாம் அடக் கிக் கொண்டு, "குரவைக் கூத்துப் பார்த்து விட்டு இங்கு வந்து படுத்தது தான் தெரியும். இப்போதுதான் எழுந் திருக்கிறேன். அடாடா! இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே! உதித்து ஒரு ஜாமம் இருக்கும் போலிருக்கிறதே! உடனே நான் கிளம்ப வேண்டும். கந்தமாறா! குதிரையை ஆயத்தம் பண்ணும்படி உன் வேலைக்காரர்களுக் குக் கட்டளையிடு!" என்றான்.

"அழகா யிருக்கிறது! அதற்குள்ளே நீ புறப்படுவதாவது? என்ன அவ சரம்? பத்து நாளாவது இங்கே தங்கி விட்டுத்தான் போக வேண்டும்" என்றான் கந்தமாறன்.

"இல்லை, அப்பனே! தஞ்சாவூரில் என் மாமனுக்கு உடம்பு செவ்வையாக இல்லை, பிழைப்பதே துர்லபம் என்று செய்தி வந்தது. ஆகையால் சீக்கிரத் தில் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும். உடனே புறப்பட வேண் டும்" என்று ஒரே போடாகப் போட் டான் வல்லவரையன்.

"அப்படியானால், திரும்பி வரும்போ தாவது இங்கே சில நாள் கட்டாயம் தாமதிக்க வேண்டும்."

''அதற்கென்ன, அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போது நான் புறப்படுவதற்கு விடை கொடு!''

''அவ்வளவு அவசரப்படாதே! காலை உணவு அருந்திவிட்டுப் புறப்படலாம். நானும் உன்னுடன் கொள்ளிட நதி வரையில் வருகிறேன்.''

''அது எப்படி முடியும்? யார், யாரோ, பெரிய பெரிய விருந்தாளிகள் உன் வீட்டுக்கு வந்திருக்கிறார்களே, அவர்களை விட்டுவிட்டு....''

''உன்னைவிடப் பெரிய விருந்தாளி எனக்கு யாரும் இல்லை!....'' என்று கூறிய கந்தன்மாறவேள் சட்டென்று நிறுத்திக் கொண்டான். ''வந்தவர்கள் பெரிய விருந்தாளிகள்தான். ஆனால் அவர்களைக் கவனித்துக் கொள்ள என் தந்தை இருக்கிறார். அரண்மனை அதிகாரிகளும் இருக்கிறார்கள். உன்னோடு நேற்று ராத்திரி கூட நான் அதிக நேரம் பேசவில்லை. வழி நடையிலாவது சிறிது நேரம் உன்னோடு சல்லாபம் செய்தால்தான் என் மனம் நிம்மதி அடையும். அவசியம் கொள்ளிடக்கரை வரையில் வந்தே தீருவேன்!'' என்றான்.

''எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. உன் இஷ்டம், உன் சௌகரியம்'' என்றான் வந்தியத்தேவன்.



ஒரு நாழிகை நேரத்துக்குப் பிறகு இரு நண்பர்களும் இரண்டு குதிரைகளில் ஏறிச் சம்புவரையர் மாளிகையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். குதிரைகள் மெதுவாகவே சென்றன. பிரயாணம் மிகவும் இன்பகரமாயிருந்தது. மேலக் காற்று சாலைப் புழுதியை வாரி அடிக்கடி அவர்கள்மேல் இறைத்ததைக்கூட அந்த நண்பர்கள் பொருட்படுத்தவில்லை. பழைய ஞாபகங்களைப் பற்றிய பேச்சில் அவ்வளவாக மனத்தைப் பறிகொடுத்திருந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வந்தியத்தேவன் கூறினான்:— ''கந்தமாறா! உன் வீட்டில் ஒரே ஒரு இரவுதான் தங்கினாலும் அது எனக்கு எவ்வளவோ பயனுள்ளதாயிருந்தது. ஆனால் ஒரே ஒரு ஏமாற்றம். உன் சகோதரியைப் பற்றி வடபெண்ணை நதிக் கரையில் என்னவெல்லாமோ வர்ணனை செய்து கொண்டிருந்தாய்! அவளை நன்றாய்ப் பார்க்கக்கூட முடியவில்லை. உன் அன்னைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அவள் எட்டிப் பார்த்தபோது அவள் முகத்தில் எட்டில் ஒரு பங்குதான் தெரிந்தது! நாணமும் மடமும் பெண்களுக்கு இருக்க வேண்டியதைவிட உன் தங்கையிடம் சற்று அதிகமாகவே யிருக்கிறது.''

கந்தமாறனுடைய வாயும் உதடுகளும் ஏதோ சொல்வதற்குத் துடித்தன. ஆனால் வார்த்தை ஒன்றும் உருவாகி வரவில்லை.

''ஆயினும் பாதகமில்லை. நீதான் நான் திரும்பி வரும்போது சில நாள் உன் வீட்டில் தங்க வேண்டும் என்று சொல்கிறாயே? அப்போது பார்த்துப் பேசிக் கொண்டால் போகிறது. அதற்குள் உன் தங்கையின் கூச்சமும் கொஞ்சம் நீங்கிவிடலாம் அல்லவா? கந்தமாறா! உன் சகோதரியின் பெயர் என்னவென்று சொன்னாய்?''

''மணிமேகலை!''

''அடடா! என்ன இனிமையான பெயர்! பெயரைப் போலவே அழகும் குணமும் இருந்துவிட்டால்....''

கந்தமாறன் குறுக்கிட்டு, தாபம் நிறைந்த குரலில், ''நண்பா! உன்னை ஒன்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என் தங்கையை நீ மறந்துவிடு. அவளைப் பற்றி நான் சொன்னதை யெல்லாம் மறந்துவிடு. அவள் பேச்சையே எடுக்காதே!'' என்றான்.

''இது என்ன, கந்தமாறா! ஒரே தலைகீழ் மாறுதலாயிருக்கிறதே! நேற்று இரவுகூட உன் வீட்டுக்கு நான் மருமகனாக வரப் போவதைப் பற்றி ஜாடையாகச் சொன்னாயே!''

''அவ்விதம் நான் சொன்னது உண்மைதான். ஆனால் பிறகு வேறு நிலைமை ஏற்பட்டுவிட்டது. என் பெற்றோர்கள் வேறு இடத்தில் என் சகோதரியைக் கலியாணம் செய்து கொடுக்க முடிவு செய்து விட்டார்கள். மணிமேகலையும் அதற்குச் சம்மதித்து விட்டாள்!''

வந்தியத்தேவன் மனத்துக்குள், ''மணிமேகலை வாழ்க!'' என்று சொல்லிக்

கொண்டான். மணிமேகலையை யாருக்குக் கொடுக்க நிச்சயித்திருப்பார்கள் என்று ஊகிப்பதிலும் அவனுக்குக் கஷ்டம் ஏற்படவில்லை. மூடு பல்லக்கிலிருந்து வெளிப்பட்ட இளவரசர் மதுராந்தகருக்குத்தான் நிச்சயித்திருப்பார்கள். மதுராந்தகருடைய கட்சிக்குப் பலம் தேட இப்படியெல்லாம் உறவுகளையும் ஏற்படுத்துகிறார்களாக்கும். பழுவேட்டரையர் பொல்லாத கெட்டிக்காரர்தான் !

"ஆஹா ! நேற்று ராத்திரி வந்திருந்த பணக்கார விருந்தாளிகளில் ஒருவரை மாப்பிள்ளையாகத் திட்டம் செய்தீர்களாக்கும்! கந்தமாறு ! இதில் எனக்கு வியப்பும் இல்லை; ஏமாற்றமும் இல்லை. ஒரு மாதிரி நான் எதிர்பார்த்ததுதான்...."

"எதிர்பார்த்தாயா? அது எப்படி?"

"என்னைப் போல் ஏழை அநாதைக்கு யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? ஊரும் வீடும் இல்லாதவனை எந்தப் பெண் மணந்து கொள்ள இணங்குவாள்? எப்போதோ என் குலத்தைச் சேர்ந்த முன்னோர்கள் அரசு செலுத்தினார்கள் என்றால், அது இப்போது என்னத்துக்கு ஆகும்?"

"நண்பா ! போதும், நிறுத்து. என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் அவ்வளவு கேவலப்படுத்தாதே ! நீ சொல்வது ஒன்றும் காரணமில்லை. வேறு மிக முக்கியமான காரணம் இருக்கிறது. அதை அறிந்தால் நீயே ஒப்புக் கொள்வாய். ஆனால் அதை நான் இப்போது வெளிப்படுத்துவதற்கில்லை. சமயம் வரும்போது நீயே தெரிந்து கொள்வாய் !"

"கந்தமாறு! இது என்ன ஒரே மர்மமாகவே இன்றைக்கு நீ பேசிக் கொண்டு வருகிறாயே?"

"அதற்காக என்னை மன்னித்துவிடு. உன்னிடம்கூட நான் மனம் விட்டுப் பேச முடியாதபடி அப்படி ஒரு பெரிய காரியந்தான். எது எப்படியானாலும் நம்முடைய சிநேகத்துக்கு எவ்விதப் பங்கமும் வராது என்பதை நம்பு. விஷயம் வெளியாக வேண்டிய சமயம் வரும்போது, ஓட்டமாக ஓடி வந்து உன்னிடந்தான் முதலில் சொல்வேன். அது வரையில் என்னிடம் நம்பிக்கை வைத்திரு.



உன்னை நான் ஒரு நாளும் கைவிட மாட்டேன் என்று நம்பு!...''

''இந்த வாக்குறுதிக்காக ரொம்ப வந்தனம். ஆனால் என்னைக் கைவிடும் படியான நிலைமை என்ன என்பது தான் தெரியவில்லை! அப்படி நான் இன்னொருவரை நம்பிப் பிழைக்கிறவ னும் அல்ல கந்தமாறா! என்னுடைய உடைவாளையும் கைவேலையுமே நான் நம்பியிருப்பவன்!''

''அந்த உடைவாளையும் வேலையும் உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் சீக்கிரத்தில் வரலாம். அப்போது நாம் இருவரும் ஒரே கட்சியில் நின்று தோளோடு தோள் சேர்ந்து போரிடு வோம். அதனால் உன்னுடைய நோக்க மும் கைகூடும்....''

''இது என்ன? ஏதாவது யுத்தம் சீக்கிரம் வரும் என்று எதிர்பார்க் கிறாயா? அல்லது ஈழநாட்டில் நடக் கும் யுத்தத்துக்குப் போகும் உத்தேசம் உனக்கு உண்டா?''

''ஈழத்துக்கா? ஈழத்தில் நடக்கும் அழகான யுத்தத்தைப் பற்றிக் கேட் டால் நீ ஆச்சரியப்பட்டுப் போவாய்! ஈழத்தில் உள்ள நம் வீரர்களுக்காகச் சோழ நாட்டிலிருந்து அரிசியும் மற்ற உணவுப் பொருள்களும் போக வேண்டு மாம்! வெட்கக்கேடு! நான் சொல் வது வேறு விஷயம். கொஞ்சம் பொறுமையாயிரு. சமயம் வரும் போது சொல்கிறேன். தயவுசெய்து இப்போது என் வாயைப் பிடுங்காதே!''

''சரி, சரி! உனக்கு விருப்பம் இல்லை யென்றால் ஒன்றும் சொல்ல வேண் டாம். வாயைக்கூடத் திறக்க வேண்



டாம். அதோ கொள்ளிடமும் தெரிகிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

உண்மையில் சற்றுத் தூரத்தில் கொள்ளிடப் பெருநதியின் வெள்ளம் தெரிந்தது. சில நிமிஷ நேரத்தில் நண்பர்கள் நதிக்கரையை அடைந்தார்கள்.

ஆடிப் புதுப் பிரவாகம் அந்த மாநதியில் கரை புரண்டு சென்றது. மறுகரை வெகுதூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. மறுகரையிலே உள்ள மரங்கள் சிறிய செடிகளைப் போலிருந்தன. செக்கச் சிவந்த பெருநீர் வெள்ளம் சுழிகளும், சுழல்களுமாக, வட்ட வடிவக் கோலங்கள் போட்டுக் கொண்டு கொம்மாளம் அடித்துக் கொண்டு, கரையை உடைக்கப் பிரயத்தனம் செய்து கொண்டு, 'ஹோ' என்று இரைந்து கொண்டு கீழ்க் கடலை நோக்கி அடித்து மோதிக் கொண்டு விரைந்து சென்ற காட்சியை வந்தியத்தேவன் பார்த்துப் பிரமித்து நின்றான்.

தோணித் துறையில் ஓடம் ஒன்று நின்றது. ஓடந் தள்ளுவோர் இருவர் கையில் நீண்ட கோல்களுடன் ஆயத்தமாயிருந்தனர். படகில் ஒரு மனிதர் ஏற்கெனவே ஏறியிருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய சிவபக்த சிகாமணி என்று தோன்றியது.

கரையில் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்து, ''சாமி! படகில் வரப் போகிறீர்களா?'' என்று படகோட்டிகளில் ஒருவன் கேட்டான்.

''ஆம்; இவர் வரப்போகிறார். கொஞ்சம் படகை நிறுத்து!'' என்றான் கந்தமாறன்.

இரு நண்பர்களும் குதிரை மீதிருந்து கீழே குதித்தார்கள்.

''யோசனை இல்லாமல் வந்துவிட்டேனே? இந்தக் குதிரையை என்ன செய்வது? படகில் ஏற்ற முடியுமா?'' என்று வந்தியத் தேவன் கேட்டான்.

''தேவையில்லை. நம்மைத் தொடர்ந்து இதோ இரண்டு ஆட்கள் வந்திருக்கிறார்கள். ஒருவன் உன் குதிரையை இங்கிருந்து கடம்பூருக்கு ஓட்டி வருவான். இன்னொருவன் உன்னுடன் படகில் ஏறி வந்து அக்கரையில் உனக்கு வேறு குதிரை சம்பாதித்துக் கொடுப்பான்!'' என்றான் கந்தமாறன்.

''ஆஹா! எவ்வளவு முன் யோசனை? நீ அல்லவா உண்மை நண்பன்?'' என்றான் வந்தியத்தேவன்.

''பாலாற்றையும் பெண்ணையாற்றையும் போலத்தான் கொள்ளிடத்தைப் பற்றி நீ நினைத்திருப்பாய். இதில் குதிரையைக் கொண்டு போக முடியாது என்று நீ எண்ணியிருக்க மாட்டாய்!''

''ஆமாம்; அவ்விதம் உங்கள் சோழ நாட்டு நதியைப் பற்றி அலட்சியமாய் நினைத்ததற்காக மன்னித்து விடு! அப்பப்பா! இது என்ன ஆறு? இது என்ன வெள்ளம்? சமுத்திரம் போல வல்லவா பொங்கி வருகிறது?''

இரு நண்பர்களும் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு விடைபெற்றுக் கொண்டார்கள்.

வந்தியத் தேவன் நதிக்கரை யோரமாகச் சென்று படகில் ஏறினான்.

கந்தமாறனுடன் வந்த ஆட்களில் ஒருவனும் ஏறிக் கொண்டான்.

படகு புறப்படுவதற்குச் சித்தமாயிருந்தது. ஓடக்காரர்கள் கோல் போட ஆரம்பித்தார்கள்.

திடீரென்று கொஞ்ச தூரத்திலிருந்து ''நிறுத்து! நிறுத்து! படகை நிறுத்து!'' என்று ஒரு குரல் கேட்டது.

ஓடக்காரர்கள் கோல் போடாமல் கொஞ்சம் தயங்கி நின்றார்கள்.

கூவிக்கொண்டு ஓடி வந்தவன் அதி விரைவில் கரைக்கருகில் வந்து சேர்ந்தான். முதற் பார்வையிலேயே அவன் யார் என்பது வந்தியத்தேவனுக்குத் தெரிந்து போயிற்று. அவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான்.

வருகிறவர் வைஷ்ணவர் என்று அறிந்ததும் படகிலிருந்த சைவர் ''விடு! படகை விடு! அந்தப் பாஷாண்டியுடன் நான் படகில் வர மாட்டேன். அவன் அடுத்த படகில் வரட்டும்!'' என்றார்.

ஆனால் வந்தியத்தேவன் ஓடக்காரர்களைப் பார்த்து, ''கொஞ்சம் பொறுங்கள். அவரும் வரட்டும்! படகில் நிறைய இடம் இருக்கிறதே! ஏற்றிக் கொண்டு போகலாம்!'' என்றான்.

ஆழ்வார்க்கடியானிடமிருந்து நேற்றிரவு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் விரும்பினான்.

பத்தாம் அத்தியாயம்

குடந்தை சோதிடர்

குடகு நாட்டில் பிறந்து வளர்ந்த பொன்னி நதி கன்னிப் பருவம் கடந்ததும் தன் மணாளனை சமுத்திர ராஜனிடம் சென்றடைய விரும்பினாள். காடும் மேடும் கடந்து பாறைகளையும் பள்ளங்களையும் தாண்டிக் கொண்டு


ஜி-11 அடங்கிய
சிந்தால்
உங்கள் மேனியைப்
பாதுகாப்பதில்
ஒப்பற்ற பவுடர்!
சிந்தால் டாய்லெட் பவுடரிலுள்ள ஒப்பற்ற ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோஃபீன்) உங்கள் உடம்பிலுள்ள ஆபத்தான கிருமிகளை அழிக்கும், வியர்வை நாற்றத்தைத் தடுக்கும்—நாளெல்லாம் உங்களை மணங் கமழ வைத்திருக்கும்.
CINTHOL
INTERPUB/GCI/15 TAM

இப்போது! அதிக லாபமடைய
கால்கேட் டென்டல் க்ரீம்

ஸூப்பர் சைஸ்





கால்கேட் மூலம், வாய் - நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

ஏனெனில்:
ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் வாய் நாற்றத்தையும், பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 80 சத விகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும், உணவு உட்கொண்ட உடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன!

அதன் விசேஷமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே...மற்றெந்தப் பற்பசையையும் விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்.

விரைந்து சென்றாள். சமுத்திர ராஜனை நெருங்க நெருங்க, நாயகனைக் காணப் போகிறோம் என்ற குதூகலத்தினால் அவள் உள்ளம் விம்மி உடல் பூரித்தது. இன்னும் சற்றுத் தூரம் சென்றாள். காதலனை அணைத்துக் கொள்ளக் கரங்கள் இரண்டு உண்டாயின. இரு கரங்களை விரித்தவாறு தாவிப் பாய்ந்து சென்றாள். ஆனால் உள்ளத்தில் பொங்கிய ஆர்வ மிகுதிக்கு இரு கரங்கள் போதுமென்று தோன்றவில்லை. அவளுடைய ஆசைக் கரங்கள் பத்து, இருபது, நூறு என்று வளர்ந்தன. அவ்வளவு கரங்களையும் ஆவலுடன் நீட்டிக் கொண்டு சமுத்திர ராஜனை அணுகினாள். இவ்விதம் ஆசைக் கணவனை அடைவதற்குச் சென்ற மணப் பெண்ணுக்குச் சோழ நாட்டுச் செவிலித் தாய்மார் செய்த அலங்காரங்கள்தான் என்ன? அடடா! எத்தனை அழகிய பச்சைப் புடவைகளை உடுத்தினார்கள்! எப்படியெல்லாம் வண்ண மலர்களைச் சூட்டினார்கள்? எவ்விதமெல்லாம் பரிமள சுந்தங்களைத் தூவினார்கள்! ஆஹா! இரு கரையிலும் வளர்ந்திருந்த புன்னை மரங்களும் கடம்ப மரங்களும் முத்து மலர்களையும் ரத்தினப் பூக்களையும் வாரிச் சொரிந்த அருமையை எவ்விதம் வர்ணிப்பது? தேவர்கள் பொழியும் பூமாரியும் இதற்கு இணையாகுமா?

பொன்னி நதியே! உன்னைப் பார்த்துக் களிப்படையாத கன்னிப் பெண்கள் யார்தான் இருக்க முடியும்? உன் மணக்கோல ஆடை அலங்காரங்களைக் கண்டு உள்ளம் பொங்காத மங்கையர் யார் இருக்க முடியும்?

கலியாணப் பெண்ணைச் சுற்றி ஊரிலுள்ள கன்னிப் பெண்கள் எல்லோரும் சூழ்ந்து கொள்வதுபோல் உன்னை நாடிப் பெண்கள் வந்து கூடுவதும் இயற்கையேயல்லவா!

பொன்னி தன் மணாளனைத் தழுவிக் கொள்ள ஆசையுடன் நீட்டும் பொற்கரங்களில் ஒன்றுக்கு அரிசிலாறு என்று பெயர். காவேரிக்குத் தென்புறத்தில் மிக நெருக்கத்தில் அரிசிலாறு என்னும் அழகிய நதி அமைந்திருக்கிறது. அப்படி ஒரு நதி இருப்பது சற்றுத் தூரத்திலிருந்து வருகிறவர்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டும். இரு புறமும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இனிய டக மரங்கள் அப்படி அந்நதியை மறைத்து விடுகின்றன. பிறந்தது முதல் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி அறியாத அரசகுலக் கன்னியென்றே அரிசிலாற்றைச் சொல்லலாம். அந்தக் கன்னி நதியின் அழகுக்கு இந்த உலகில் உவமையே கிடையாது.

நல்லது; அந்தப்புரம் என்னும் எண்ணத்தை மறந்துவிட்டு நேயர்கள் நம்முடன் அரிசிலாற்றை நெருங்கி வருவார்களாக! சோலையாக நெருங்கி வளர்ந்திருந்த மரங்களுக்கிடையே புகுந்து வருவார்களாக! அடடா! இது என்ன அருமையான காட்சி! அழகுக்கு அழகு செய்வது போலும் அமுதத்துக்கு இனிப்பு ஊட்டுவது போலும் அல்லவா இருக்கிறது!

சித்திர விசித்திரமாகச் செய்த அன்ன வடிவமான வண்ணப் படகில் வீற்றிருக்கும் இந்த வனிதாமணிகள் யார்? அவர்களில் நடுநாயகமாக நட்சத்திரங்களுக்கிடையில் பூரணச் சந்திரனைப் போல், ஏழுலகங்களையும் ஆளப் பிறந்த ராணியைப் போல் காந்தியுடன் விளங்கும் இந்த நாரீமணி யார்? அவளுக்கு அருகில் கையில் வீணையுடன் வீற்றிருக்கும் சாந்த சுந்தரி யார்? இனிய குரல்களில்



இசை பாடி, நதி வெள்ளத்துடன் கீத வெள்ளமும் கலந்து பெருகச் செய்து கொண்டு வரும் இந்தக் கந்தர்வப் பெண்கள் யார்? அவர்களில் ஒருத்தி மீனலோசனி. இன்னொருத்தி நீலலோசனி. ஒருத்தி தாமரை முகத்தாள்; இன்னொருத்தி கமல இதழ் நயனத்தாள். ஆஹா! வீணையை மீட்டுகிறாளே, அவளுடைய காந்தளை ஒத்த விரல்கள் வீணைத் தந்திகளில் அங்குமிங்கும் சஞ்சரிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

அவர்கள் இசைக்கும் கீதத்தின் இனிமையைத்தான் என்ன என்று சொல்லுவது? அதைக் கேட்பதற்காக நதியின் வெள்ளம் கூட அல்லவா தன் ஓசையை நிறுத்தியிருக்கிறது? நதிக் கரை மரங்களில் வாழும் கிளிகளும் குயில்களும் கூட வாய் திறவா மௌனத்தில் ஆழ்ந்திருக்கின்றனவே! மனிதர்களாய்ப் பிறந்தவர்கள், கேட்கும் செவி படைத்த பாக்கியசாலிகள் — அந்த அமுத கானத்

தைக் கேட்டுப் பரவசம் அடைவதில் வியப்பு என்ன?

படகில் வரும் அப்பெண்கள் என்ன பாடுகிறார்கள், கேட்கலாம்:

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

பூவர் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி!

இந்த அமுதத் தமிழ்ப் பாடல்களை எங்கேயோ கேட்டிருக்கிறோமல்லவா? ஆம். சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப் பாடல்கள் இவை. எனினும் இந்தப் பெண்கள் பாடும்போது முன் எப்போதுமில்லாத வனப்பும் கவர்ச்சியும் பெற்று விளங்குகின்றன. இவர்கள் பொன்னி நதியின் அருமைத் தோழிகள் போலும்! அதனால்தான் இவ்வளவு பரவசமாக உணர்ச்சி ததும்பப் பாடுகிறார்கள். அடடா! பாடலும் பண்ணும் பாவமும் எப்படிக் கலந்து இழைந்து குழைந்து இவர்களுடைய குரலிலிருந்து அமுத வெள்ளமாகப் பொழிகின்றன! பாட்டாவது, பண்ணாவது, கானமாவது, இசையாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. இது ஏதோ மாயக் கலை. பாடுகிறவர்கள், கேட்பவர்கள் எல்லாரையும் பித்துப் பிடிக்கச் செய்யும் மந்திர வித்தை!

படகு மிதந்து கொண்டே வந்து, மரங்கள் சிறிது இடைவெளி தந்த ஓடத் துறையில் ஒதுங்கி நிற்கிறது. இரண்டு பெண்கள் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருத்தி ஏழுலகத்துக்கும் ராணி எனத் தகும் கம்பீரத் தோற்றமுடைய பெண்மணி. இன்னொருத்தி வீணைத் தந்திகளில் விரல்களை ஓட்டி இன்னிசை எழுப்பிய நங்கை. இருவரும் அழகிகள் என்றாலும் ஒருவருடைய அழகுக்கும் இன்னொருவருடைய அழகுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. ஒருத்தி செந்தாமரை மலரின் கம்பீர சௌந்தரிய முடையவள். இன்னொருத்தி குமுத மலரின் இனிய அழகை உடையவள். ஒருத்தி பூரணச் சந்திரன்; இன்னொருத்தி காலைப் பிறை. ஒருத்தி ஆடும் மயில்; இன்னொருத்தி பாடும் குயில். ஒருத்தி இந்திராணி; இன்னொருத்தி மன்மதனின் காதலி. ஒருத்தி வேகவாகினியான கங்கா நதி; இன்னொருத்தி குழைந்து நெளிந்து செல்லும் காவேரி.

வாசகர்களை மேலும் சந்தேக ஆராய்ச்சி நிலையில் விட்டு வைக்காமல் இவர்கள் இருவரும் யார் என்று சொல்லி விடுகிறோம். கம்பீரத் தோற்றமுடைய மங்கைதான் சுந்தர சோழ மன்னரின் செல்வப் புதல்வி **குந்தவை**. சரித்திரத்தில் ராஜராஜன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மனின் சகோதரி. அரசிளங்குமரி என்றும் இளைய பிராட்டி என்றும் மக்களால் போற்றப் பட்ட மாதரசி. சோழ ராஜ்யத்தின் மகோந்நதத்திற்கு அடிகோலிய தமிழ்ப் பெருஞ் செல்வி. ராஜராஜனுடைய புதல்வன் ராஜேந்திரனை எடுத்து வளர்த்து, வீராதி வீரனையும், மன்னாதி மன்னனையும் ஆக்கிய தீரப் பெண்மணி.

இன்னொருத்தி குந்தவைப் பிராட்டியுடன் இருக்கும் பாக்கியத்தை நாடி வந்த கொடும்பாளூர் சிற்றரசரின் குலப் பெண். பிற்காலத்தில், சரித்திரத்திலேயே இணையில்லாத பாக்கியவதியாகப் போகிறவள். இன்று அடக்கமும் இனிமையும் சாந்தமும் உருவெடுத்து விளங்குகிறவள்.

இந்த இரு மங்கைமார்களும் படகிலிருந்து கரையில் இறங்கினார்கள். குந்தவை மற்றத் தோழிப் பெண்களைப் பார்த்து ''நீங்கள் இங்கேயே இருங்கள். ஒரு நாழிகை நேரத்தில் திரும்பி வந்து விடுகிறோம்'' என்றாள். அந்தத் தோழிப் பெண்கள் அனைவரும் தெய்வத் தமிழ் நாட்டில் பற்பல சிற்றரசர்களின் அரண்மனையில் பிறந்த அரச குமாரிகள். குந்தவை தேவிக்குத் தோழியாக இருப்பதைப் பெறற்கரும் பேறாகக் கருதிப் பழையாறை அரண்மனைக்கு வந்தவர்கள். இப்போது தங்களில் ஒருத்தியை மட்டும் அழைத்துக் கொண்டு குந்தவைப் பிராட்டி கரையில் இறங்கி, ''போய்விட்டு விரைவில் வருகிறேன்'' என்றதும் அவர்களுடைய கண்களில் ஏமாற்றமும் அசூயையும் தோன்றின.

கரையில் குதிரை பூட்டிய ரதம் ஒன்று சித்தமா யிருந்தது. ''**வானதி!** ரதத்தில் ஏறிக்கொள்!'' என்றாள் தன் தோழியைப் பார்த்து. வானதி ஏறியதும் தானும் ஏறிக் கொண்டாள். ரதம் வேகமாய்ச் சென்றது.

''அக்கா! நாம் எங்கே போகிறோம்? எனக்குச் சொல்லலாமா?'' என்று வானதி கேட்டாள்.

''சொல்லாமல் என்ன? குடந்தை ஜோதிடர் வீட்டுக்குப் போகிறோம்'' என்றாள் குந்தவை.

''ஜோதிடர் வீட்டுக்கு எதற்காகப் போகிறோம், அக்கா? என்னத்தைப் பற்றிக் கேட்பதற்காக?''

''வேறு எதற்கு? உன்னைப் பற்றிக் கேட்பதற்காகத்தான். சில மாத காலமாக நீ இப்படிப் பிரமை பிடித்தவள் போலும், உடல்மெலிந்தும் வருகிறாயா, உனக்கு எப்போது பிரமை நீங்கி உடம்பு தேறும் என்று கேட்பதற்காகத்தான்!''

''அக்கா! தங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு. எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. என்னைப் பற்றிக் கேட்பதற்காகப் போக வேண்டாம். திரும்பி விடுவோம்!''

''இல்லையடி அம்மா, இல்லை! உன்னைப் பற்றிக் கேட்பதற்காக இல்லை. என்னைப் பற்றிக் கேட்பதற்காகத்தான் போகிறேன்.''

''தங்களைப் பற்றி என்ன கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்? ஜோசியரிடம் கேட்டு என்ன தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்?''

''எனக்குக் கல்யாணம் ஆகுமா? அல்லது கடைசிவரையில் கன்னிப் பெண்ணாகவே இருந்து காலம் கழிப்பேனா என்று கேட்கப் போகிறேன்.''

''அக்கா! இதற்கு ஜோசியரிடம் போய்க் கேட்பானேன்? தங்களுடைய மனத்தையல்லவா கேட்க வேண்டும்! தாங்கள் தலையை அசைக்க வேண்டியது தான்! இமயமலையிலிருந்து குமரிமுனை வரையில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் போட்டி போட்டுக் கொண்டு ஓடிவர மாட்டார்களா? ஏன்? கடல் கடந்த தேசங்களிலே இருந்தெல்லாம் கூட வருவார்களே! தங்களைக் கைப்பிடிக்கும் பேறு எந்த வீர இராஜ குமாரனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ? அதைத் தாங்கள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்?''

''வானதி! நீ சொல்வதெல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு ஒரு தடை இருக்கிறது. எந்தத் தேசத்து அரச குமாரனையாவது மணம் புரிந்து கொண்டால் நான் அவனுடைய நாட்டுக்குப் போக வேண்டி வருமல்லவா? எனக்கு இந்தப் பொன்னி நதி பாயும் சோழ நாட்டிலிருந்து வேறு ஒரு நாட்டுக்குப் போகப் பிடிக்கவே யில்லையடி! வேறு நாட்டுக்குப் போவதில்லை என்று நான் சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.''


''அது ஒரு தடையாகாது. தங்களை மணம் புரிந்து கொள்ளும் எந்த ராஜ குமாரனும் தங்கள் காலில் விழுந்து கிடக்கும் அடிமையாகவே இருப்பான். இங்கேயே இருக்க வேண்டும் என்றால் இருந்துவிட்டுப் போகிறான்!''

''ஆகா! எலியைப் பிடித்து மடியில் வைத்துக் கட்டிக் கொள்வது போல் வேறு தேசத்து ராஜகுமாரனை நம் ஊரிலேயே கொண்டு வைத்துக்கொள்ளவா சொல்கிறாய்? அதனால் என்ன என்ன தொல்லைகள் எல்லாம் விளையும் தெரியுமா?''

''எப்படியும் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் ஒரு நாள் கலியாணம் செய்து கொண்டுதானே தீரவேண்டும்?''

''அப்படி ஒரு சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கவில்லையடி, வானதி! ஔவையாரைப் பார்! அவள் என்றும் கன்னி அழியாத கவிகவரியாகப் பல காலம் ஜீவித்திருக்கவில்லையா?''

''ஔவையார் இளம் பிராயத்திலேயே கடவுளின் வரத்தினால் கிழவியாகப் போனவள். தாங்கள் அதைப் போல் ஆகவில்லையே!''



''சரி, அப்படிக் கலியாணம் செய்து கொள்வது என்று ஏற்பட்டால் அநாதையான சோழ வீரன் ஒருவனையே நான் மணம் செய்து கொள்வேன். அத்தகையவனுக்கு ராஜ்யம் இராது. என்னை அழைத்துக் கொண்டு வேறொரு தேசத்துக்குப் போக வேண்டும் என்று சொல்ல மாட்டான்! இங்கேயே சோழ நாட்டிலேயே இருந்துவிடுவான்.''

''அக்கா! அப்படியானால் நீங்கள் இந்தச் சோழ நாட்டை விட்டுப் போக மாட்டீர்களே?''

''ஒரு நாளும் போக மாட்டேன். சொர்க்க லோகத்துக்கு என்னை அரசியாக்குவதாகச் சொன்னாலும் போக மாட்டேன்.''

''இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதியடைந்தது.''

''அது என்னடி?''

''நீங்கள் வேறு நாட்டுக்குப் போனால் நானும் உங்களுடன் வந்தே தீரவேண்

டும். தங்களை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. அதே சமயத்தில் இந்தச் சோழவள நாட்டை விட்டுப் போகவும் எனக்கு மனம் இல்லை.''

''கல்யாணம் ஆனால் நீ போய்த்தானே தீரவேண்டும்?''

''நான் கலியாணமே செய்துகொள்ளப் போவதில்லை அக்கா!''

''அடியே! எனக்குச் செய்த உபதேசமெல்லாம் எங்கே போயிற்று?''

''தங்களைப் போலவா நான்?''

''அடி கள்ளி! எனக்கு எல்லாம் தெரியும்! என் கண்ணில் மண்ணைத் தூவலாம் என்று பார்க்கிறாய்? உனக்குச் சோழ நாட்டில் அபிமானம் ஒன்றும் கிடையாது. நீ ஆசை வைத்திருக்கும் சோழ நாடு வாளும் வேலும் தாங்கி ஈழ நாட்டுக்கு யுத்தம் செய்ய அல்லவா போயிருக்கிறது? உன் அந்தரங்கம் எனக்குத் தெரியாது என்று நினைத்தாய்?''

''அக்கா! அக்கா! நான் அவ்வளவு மூடமதி உடையவளா? சூரியன் எங்கே? காலைப் பனித்துளி எங்கே? சூரியனுடைய நட்புக்குப் பனித்துளி ஆசைப்பட்டால் என்ன பயன்?''

''பனித்துளி சிறியதுதான்! சூரியன் பெரியது, பிரகாசமானதுதான்! ஆனாலும் பனித்துளி அப்படிப்பட்ட சூரியனைச் சிறைப்படுத்தித் தனக்குள் வைத்திருக்கிறதோ, இல்லையோ?''

வானதி உற்சாகமும் ஆர்வமும் நிறைந்த குரலில், ''அப்படியா சொல்கிறீர்கள்? பனித்துளிகூடச் சூரியனை அடையலாம் என்று சொல்கிறீர்களா?'' என்றாள். பிறகு திடீரென்று மனச் சோர்வு வந்து விட்டது. ''பனித்துளி ஆசைப்படுகிறது: சூரியனையும் சிறைப் பிடிக்கிறது. ஆனால் பலன் என்ன? சிறிது நேரத்துக்கெல்லாம் சரியான தண்டனை அடைகிறது. வெய்யிலில் உலர்ந்து இருந்த இடம் தெரியாமல் மறைகிறது!''

''அது தவறு வானதி! பனித்துளியின் ஆசையைக் கண்டு சூரியன் தன்னுடன் பனித்துளியை ஐக்கியப்படுத்திக்கொள்கிறான். தன் ஆசைக்குகந்த பனித்துளிப் பெண் பிற புருஷர் கண்ணில் படக்கூடாது என்று அவன் எண்ணம். இரவு வந்ததும் மறுபடியும் வெளியே விட்டு விடுகிறான். மறைந்த பனித்துளி மறுபடியும் வந்து உதிக்கிறது அல்லவா?''

''அக்கா! இதெல்லாம் என்னைத் தேற்றுவதற்காகச் சொல்கிறீர்கள்.''

''அப்படியானால் உன் மனத்தில் குறை இருக்கிறது என்று சொல்லு. இத்தனை நாள் இல்லவே இல்லை என்று சாதித்தாயே? அதனால்தான் குடந்தை ஜோசியரிடம் போகிறேன்.''

''என் மனத்தில் குறை இருந்தால் அதைப் பற்றிக் கேட்கச் சோதிடரிடம் போய் என்ன பயன்?'' என்று கூறி வானதி பெருமூச்செறிந்தான்.

* * *

குடந்தை ஜோதிடரின் வீடு அந்த நகரின் ஒரு மூலையில் காளி கோயிலுக்கு அருகில் ஒரு தனித்த இடத்தில் இருந்தது. குடந்தை நகருக்குள் புகாமலேயே நகரைச் சுற்றிக் கொண்டு ரதம் அந்த வீடு சென்று அடைந்தது. ரதசாரதி ரதத்தைத் தங்கு தடையின்றி அங்கே ஓட்டிக் கொண்டு போய்ச் சேர்த்ததைப் பார்த்தால், அவன் அதற்குமுன் பல முறை அங்கே ரதம் ஓட்டிக் கொண்டு சென்றிருக்க வேணும் என்று தோன்றியது.

வீட்டு வாசலில் ஜோதிடரும் அவருடைய சீடர் ஒருவரும் ஆயத்தமாகக் காத்திருந்தார்கள். ஜோதிடர் மிக்க பக்தி மரியாதையுடன் வந்தவர்களை வரவேற்று உபசரித்தார்.

'' பெருமாட்டி ! கலைமகளும் திருமகளும் ஒருருவாய் வந்த தாயே ! வரவேணும் ! வரவேணும் ! இந்த ஏழையின் குடிசை செய்த பாக்கியம், மறுமுறையும் தாங்கள் இக்குடிசையைத் தேடி வந்தீர்கள் !'' என்றார்.

''ஜோதிடரே ! இந்த வேளையில் தங்களைத் தேடிக் கொண்டு வேறு யாரும் இங்கு வரமாட்டார்கள் அல்லவா ?'' என்றாள் குந்தவை.

''வரமாட்டார்கள், தாயே ! இப்போதெல்லாம் என்னைத் தேடி அதிகம் பேர் வருவதே இல்லை. உலகத்தில் கஷ்டங்கள் அதிகமாகும் போதுதான் ஜோசியர்களைத் தேடி மக்கள் அதிகமாக வருவார்கள். இப்போது, தங்களுடைய திருத் தந்தை, — சுந்தரச் சோழக் கோமகனாரின் ஆட்சியில், — குடிகளுக்குக் கஷ்டம் என்பதே கிடையாது. எல்லாரும் சுகசௌக்கியங்களுடன் சகல சம்பத்துக்களையும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். என்னைத் தேடி ஏன் வருகிறார்கள்?'' என்றார் ஜோதிடர்.

''அப்படியானால், எனக்கு ஏதோ கஷ்டம் வந்திருப்பதினால்தான் உம்மைத் தேடி வந்திருக்கிறேன் என்று சொல்கிறீராக்கும்!''

''இல்லை, பெருமாட்டி ! இல்லவே இல்லை ! நவநிதியும் கொழிக்கும் பழையாறை மன்னரின் திருக் குமாரிக்குக்

கஷ்டம் வந்தது என்று எந்தக் குருடன் தான் சொல்லுவான்! உலகத்தில் மக்களுக்குக் கஷ்டமே இல்லாமற் போய்விட்டபடியால், இந்த ஏழை ஜோதிடனுக்கு மட்டும் கஷ்டம் வந்திருக்கிறது. இவனை யாரும் கவனிப்பாரில்லை. ஆகையால் இந்த ஏழையின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக அம்பிகையைப்போல் வந்திருக்கிறீர்கள். தாயே! குடிசைக்குள்ளே வந்தருள வேண்டும். இங்கேயே தங்களை நிறுத்தி வைத்திருப்பது நான் செய்யும் அபசாரம்!'' என்று ஜோசியர் சமத்காரமாகப் பேசினார்.

ரத சாரதியைப் பார்த்துக் குந்தவை, ''ரதத்தைக் கோயிலுக்குச் சமீபம் கொண்டு போய் ஆலமரத்தின் நிழலில் நிறுத்தி வை!'' என்றாள்.

பிறகு ஜோதிடர் வழிகாட்டி முன் செல்ல, குந்தவையும் வானதியும் அவ்வீட்டுக்குள்ளே சென்றார்கள்.

ஜோதிடர் தம் சீடனைப் பார்த்து, ''அப்பனே! வாசலில் ஜாக்கிரதையாக நின்று கொண்டிரு; தப்பித் தவறி யாராவது வந்தாலும் உள்ளே விடாதே!'' என்று எச்சரித்தார்.

அரச குமாரியை வரவேற்பதற்கு உகந்ததாகச் சோதிடரின் கூடம் அழகு செய்யப்பட்டிருந்தது. சுவரில் ஒரு மாடத்தில் அம்பிகையின் படம் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. அமருவதற்கு இரண்டு பீடங்கள் சித்தமாயிருந்தன. குத்து விளக்கு எரிந்தது. அங்குமிங்கும் கோலங்கள் பொலிந்தன. ராசிச் சக்கரங்கள் போட்ட பலகைகளும் ஓலைச் சுவடிகளும் சுற்றிலும் இறைந்து கிடந்தன.

பெண்மணிகள் இருவரும் பீடங்களில் அமர்ந்த பிறகு, சோதிடரும் உட்கார்ந்தார்.

''அம்மணி! வந்த காரியம் இன்னதென்பதைத் தயவுசெய்து சொல்லியருள வேணும்!'' என்றார்.

''ஜோசியரே! அதையும் தங்கள் ஜோசியத்திலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?'' என்றாள் குந்தவை.

''ஆகட்டும், தாயே!'' என்று கூறிச் சோதிடர் கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் ஏதோ மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார்.

பிறகு கண்களைத் திறந்து பார்த்து, ''கோமாட்டி! இந்தக் கன்னிப் பெண்ணின் ஜாதகம் பற்றிக் கேட்பதற்காகவே இன்று முக்கியமாக வந்திருக்கிறீர்கள். அவ்விதம் தேவி பராசக்தியின் அருள் சொல்கிறது. உண்மைதானா!'' என்றார்.

''ஆஹா! பிரமாதம்! உங்களுடைய சக்தியை என்னவென்று சொல்வது? ஆம், ஜோசியரே! இந்தப் பெண்ணைப் பற்றிக் கேட்கத்தான் வந்தேன். ஒரு வருஷத்துக்கு முன்பு இவள் பழையாறை அரண்மனைக்கு வந்தாள். வந்து எட்டு மாத காலம் மிகக் குதூகலமாய் இருந்து வந்தாள். என் தோழியருக்குள்ளே இவள்தான் சிரிப்பும் விளையாட்டும் கலகலப்புமாக இருந்து வந்தாள். நாலு மாதமாக இவளுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அடிக்கடி சோர்ந்து போகிறாள். பிரமை பிடித்தாற்போல் இருக்கிறாள். சிரிப்பையே மறந்து விட்டாள். உடம்புக்கு ஒன்றுமில்லை என்கிறாள். இவள் பெற்றோர்கள் நாளைக்கு வந்து கேட்



டால், என்ன மறுமொழி சொல்வது என்றே தெரியவில்லை....''

''தாயே! கொடும்பாளூர்ச் சோமகனின் செல்வப் புதல்விதானே இவர்? இவருடைய பெயர் **வானதி** தானே?'' என்றார் ஜோசியர்.

''ஆமாம்; உமக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே!''

''இந்த அரசிளங் குமரியின் ஜாதகம் கூட என்னிடம் இருக்கிறது. சேர்த்து வைத்திருக்கிறேன்! சற்றுப் பொறுக்க வேணும்!'' என்று சொல்லி விட்டு ஜோதிடர் பக்கத்திலிருந்த ஒரு பழைய பெட்டியைத் திறந்து சிறிது நேரம் புரட்டினார். பிறகு, அதிலிருந்து ஒரு ஜாதகக் குறிப்பை எடுத்துக் கவனமாய்ப் பார்த்தார். **(தொடரும்)**



பிரின்ஸ்
பிளேடு
இறகின்
மென்மைபோல்
முகக்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்

குற்றக் கூண்டில் நிற்பவனுக்குச் சாதகமாகவோ எதிராகவோ வழக்காட வேண்டியதுதான் வழக்கறிஞருடைய கடமை. அவன் உண்மையில் குற்றவாளியா இல்லையா என்று நிர்மாணிக்க வேண்டியது வக்கீலின் பொறுப்பல்ல; அதை நீதிபதி கவனித்துக் கொள்வார்.

இந்த அடிப்படையில் கொலைக் குற்றம் செய்த ஒருவனுக்காக வாதாடுகிறார் ரஜனிகாந்த். அவரது திறமை காரணமாகக் குற்றவாளி விடுதலை பெறுகிறான். இது அவரது ஜூனியர் கண்ணனின் மனத்தை உறுத்துகிறது. மகனைப் போல் வளர்ந்து வந்த ஜூனியருக்கும் ரஜனிகாந்துக்கும் இவ் விஷயத்தில் கருத்து வேற்றுமை வலுக்கிறது.

பின்னால் இதே குற்றவாளி அவன் செய்யாத ஒரு குற்றத்துக்காகக் கைதாக்கப்படும்போது கண்ணன் சர்க்கார் தரப்பு வக்கீலாக மாறி யிருக்கிறான். ரஜனிகாந்துடன் கோர்ட்டில் மோதுகிறான். ரஜனிகாந்த் இம்முறை தோல்வி அடைகிறார். குற்றவாளி உரிய தண்டனை பெறுகிறான். ரஜனிகாந்த் தோல்வியிலே வெற்றி காண்பதும் கண்ணன் வெற்றியிலே தோல்வி காண்பதும் கதையில் சுவையான இறுதிக் கட்டத் திருப்பங்கள். இயல்பாகவும் அமைந்து நாடகத்தின் தரத்தை உயர்த்துகின்றன.

வியட்நாம் வீடு நாடகத்தை எழுதி அண்மையில் பெரும் புகழ் பெற்ற சுந்தரத்தின் இரண்டாவது நாடகம் இது. யுனைடெட் அமெச்சூர் ஆர்டிஸ்ட்ஸ் குழுவினர் இந்த நாடகத்தை மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் அரங்கேற்றினர்.

கண்ணன் வந்தான்



டுவிஸ்ட் நடனத்துக்குத் தரப்படும் விளக்கம், சங்கு பிடிப்பது பற்றிய ஹாஸ்யம் எல்லாம் கலீர் சிரிப்பை எழுப்பின. நகைச்சுவைக்குக் குறைவே இல்லை. ஆனால் கூடவே உணர்ச்சி மயமான கட்டங்களும் போட்டி போட்டுக் கொண்டு சிறந்து விளங்கின. ரஜனியிடம் குற்றவாளி மோகன்தான், முன்பு ஒருநாள் நடந்ததை விவரிக்கும்போது ரஜனியின் வீட்டிலேயே இன்னொரு பக்கத்தில் கனவுபோல அந்நிகழ்ச்சி நடப்பதாகக் காண்பிப்பது புதிய உக்தி. பொருத்தமாயும் நன்றாகவும் இருந்தது.

நடிப்பிலே யாரும் சோடை போகவில்லை. ரஜனியாகத் தோன்றிய ஸ்ரீ ஒய். ஜீ. பி. பிரமாதப்படுத்தி விட்டார். ஜூனியர் கண்ணனாகத் தோன்றிய ஸ்ரீ ஏ. ஆர். சீனிவாசன் நன்கு ஈடு கொடுத்து நடித்தார். கண்ணன் அந்த வீட்டை விட்டுப் போனபிறகு ரஜனிகாந்த் தள்ளாடுவது, கேஸ் தோல்வியில் முடிந்து வீடு திரும்பியதும் மாடிப்படியில் ரஜனி உட்கார்ந்திருப்பது இவை நல்ல டைரக்ஷனுக்குச் சில எடுத்துக்காட்டுகள். வாத்திய கோஷ்டியை அடியோடு நீக்கி விட்டுப் பின்னணி இசையை டேப்ரிக்கார்டுகள் மூலமே சமாளித்து விட்டதும் புதுமையே. முதல் வழக்கின்போது கோர்ட்டில் நடக்கக் கூடியதை வீட்டிலேயே ஒத்திகை பார்ப்பதுபோல் முடித்து விட்டதில் நகைச்சுவைக்கு அதிக இடம் தர முடிந்தது. நல்ல யுக்தி.

கோர்ட் விவகாரங்களைப் பொறுத்தவரை திரு வி. பி. ராமன் அவர்களின் ஆலோசனை கிட்டியிருக்கிறது.

இந்த நல்ல நாடகம் மேலும் சிறந்து விளங்கச் சில யோசனைகளையும் கூற மனம் விழைகிறது. சரியானபடி உச்சரிக்கப்படாததால் நல்ல வசனம் சில இடங்களில் பாழாகி விடுகிறது. உதாரணமாக ரஜனி வழக்கில் வெற்றி பெற்றுத் திரும்பிய பிறகு மோகன் தான் அவரிடம், ''பட்டப்பகலில் மவுண்ட்ரோடில் கொலை செய்து விட்டால்கூட ரஜனிக்கு டெலிபோன் செய்துவிட்டு நிம்மதியா மாட்டினி சினிமா பார்க்கலாம்னு ஊரிலே பேசிக்கிறாங்க ஸார்!'' என்கிறான். இந்த வசனம் சரியானபடி பேசப்படாததால் ரசிகர்களிடம் எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் வேறு பல கட்டங்களில் திரு ஒய். ஜீ. எஸ். திறம்படவே ந டித்தார்.

ரஜனிகாந்த் அடிக்கடி ஆங்கிலம் கலந்து பேசுவது அவர் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் இயற்கையானதாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாடகம் பார்க்க வந்தவர்கள் இதனை நல்ல நாடக உத்தி என்பதாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆங்கிலத்தில்தான் வன்மையாகப் பேச இயலும் என்று எண்ணிய காலம் என்றோ மலை ஏறிவிட்டதே!

ரஜனிகாந்தைச் சுற்றியுள்ள குமாஸ்தாவும் பிறரும் அவரை ரஜனி என்றே அழைப்பதும் அவரை வைத்துக் கொண்டே ஹாஸ்யமாகப் பேசுவதும் அவரது கம்பீரமான குணசித்திரத்துக்கு ஊறு விளைவிக்கின்றன. ஆனால் வழக்கு நடப்பதுபோல் வீட்டில் ஒத்திகை பார்க்கும்போது அவரே அவசியம் கருதி அவர்களை அப்படி நடிக்கச் சொல்வதால் அது இயற்கையாக உள்ளது.

நாடகக் கதையின் முடிவு மிக நன்றாக இருந்தும் கடைசிக் காட்சி சப்பென்று போய்விட்டது. முடிவு அழுத்தமாக மனத்தில் பதியுமாதிரி இக்காட்சி வேறுவிதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

நடிகர்களை ஒரு தவறுகூடச் செய்ய அனுமதிக்காமல் நன்கு ஒத்திகை நடத்தி மெருகேற்றினால் ''கண்ணன் வந்தான்'' சமீபத்தில் அரங்கேறியுள்ள தமிழ் நாடகங்களுள் தலைசிறந்ததாக விளங்கும்.

மகாபாரதம்

ராஜாஜி

48. விராடனுடைய பிரமை

திரிகர்த்தாதிபதி சுசர்மனை ஜெயித்து விட்டு விராட ராஜன் தன் நகரத்துக்குத் திரும்பினான். ஊர் ஜனங்கள் அவனை ஜெய கோஷங்களுடன் எதிர்கொண்டு வரவேற்றார்கள். அரசன் அந்தப்புரத்தில் உத்தரனைக் காணாமல், ''உத்தரன் எங்கே?'' என்று கேட்க, அங்குள்ள ஸ்திரீகளும், மற்றவர்களும் 'அவன் கௌரவர்களை ஜெயிக்கப் போயிருக்கிறான்' என்று மிக உற்சாகத்துடன் சொன்னார்கள். தங்கள் ராஜகுமாரன் அழகிய உத்தரன் உலகத்தையே ஜெயித்து விடுவான் என்பது அவர்கள் நம்பிக்கை. ஆகையால், அதைப் பற்றி அவர்கள் கவலையில்லாமல் விராடனிடம் பேசினார்கள்.

அரசன் திடுக்கிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தான். முழு விவரம் தெரிந்தவுடன் மிகுந்த பயமும் அடைந்தான்.

''நபும்ஸகன் ஒருவனைத் துணையாகக் கொண்டு, ஆபத்தான காரியத்தில் பிரவேசித்து விட்டான் என் அருமைப் புத்திரன். இதற்குள் இறந்தே போயிருப்பான்; சந்தேகமில்லை'' என்று சொல்லித் துக்கத்தில் மூழ்கினான்.

பிறகு மந்திரிகளை அழைத்து, ''சேனையைத் திரட்டுங்கள். உத்தரன் உயிரோடு இருந்தால் சென்று அவனை எப்படியாவது காப்பாற்றிக் கொண்டு திரும்புங்கள்'' என்று உத்தரவிட்டான்.


மிக வேகமாக ஒரு படையை முதலில் அனுப்பி உத்தரன் கதியை அறிந்து வரவும் கட்டளையிட்டான்.

தரும புத்திரனான கங்க சந்நியாசி விராடனைத் தேற்றப் பார்த்தார். ''ராஜகுமாரனைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். பிருகன்னளை சாரதியாகப் போயிருக்கிறாள். அவளைப் பற்றி உமக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். அவளைச் சாரதியாகக் கொண்டு தேரில் நின்று யுத்தம் செய்பவன் எவனும் நிச்சயமாக வெற்றி பெறுவான். சுசர்மன் தோல்வியடைந்தான் என்கிற செய்தியும் இதற்குள் அங்கு எட்டியிருக்கும். கௌரவர்கள் திரும்பி ஓட்டம் பிடிப்பார்கள்'' என்று சொல்லித் தேற்றினார்.

இதற்குள் உத்தரனால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் வந்து சேர்ந்தார்கள். ''உத்தரன் ஜெயித்தான். கௌரவ சேனை சிதறடிக்கப்பட்டது. பசுக்கள் மீட்கப்பட்டன'' என்று தூதர்கள் சொன்னது விராடனுக்கு வியப்பாக இருந்தது. அவன் நம்பவேயில்லை.

''அரசனே! சந்தேகப்பட வேண்டாம். தூதர்கள் சொல்வது உண்மையாகவே இருக்க வேண்டும். பிருகன்னளை சாரதியாகப் போன பின் வெற்றியைப் பற்றிச் சந்தேகமே இல்லை. உம்முடைய குமாரன் ஜெயித்து விட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தேவேந்திரனுடைய சாரதியும், கிருஷ்ணனுடைய சாரதியும் யாருமே பிருகன்னளைக்குச் சமானமாகமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்'' என்று யுதிஷ்டிரன் அரசனுக்குச் சொன்னான்.

தூதர்கள் கொண்டு வந்த வெற்றிச் செய்தியைக் கேட்ட விராடன் மகிழ்ச்சிச் சாகரத்தில் மூழ்கினான். தூதர்



களுக்கு ரத்தினங்களும் ஆபரணங்களும் ஏராளமாக வெகுமதி யளித்தான்.

''ஊரை அலங்கரியுங்கள். நான் சுசர்மனை வென்றது பெரிதல்ல. ராஜ குமாரனுடைய வெற்றியே வெற்றி. எல்லா ஆலயங்களிலும் தேவார்ச்சனை செய்யக் கட்டளை அனுப்புங்கள். ராஜ வீதிகளில் கொடிகள் கட்டி மங்கள வாத்தியம் கோஷிக்கச் செய்யுங்கள். என் இளஞ் சிங்கத்தைத் தக்க முறை யில் எதிர் கொண்டு வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் செய்யுங்கள்'' என்றான்.

இவ்வாறு வெற்றியுடன் திரும்பி வரும் குமாரனை எதிர் கொண்டு அழைத்து வர மந்திரிகளையும் சேனையையும், கன்னிப் பெண்களையும் அனுப்பிவிட்டு, விராடன் அந்தப்புரம் சென்று, ''ஸைரந்திரி! பாச்சிகைகள் கொண்டு வா! கங்கரே! என் சந்தோஷத்தைப் பொறுக்க முடியவில்லை. விளையாடுவோம் வாரும்'' என்று கூறி அவனும் யுதிஷ்டிரனும் விளையாட உட்கார்ந்தார்கள். ஆடும்போது பேச்சும் நடந்தது. ''பார்த்திரா என் குமாரன் பூமிஞ்சயனுடைய சௌரியத்தை? புகழ் பெற்ற கௌரவ வீரர்களைத் துரத்தி யடித்தான்'' என்றான்.


''ஆம். உம் குமாரன் பாக்கியசாலி. அப்படி இல்லாவிட்டால் பிருகன்னளை அவனுக்குத் தேர் ஓட்ட அமைந்திருப் பாளா? ராஜ குமாரன் அதிர்ஷ்டசாலி என்பதில் சந்தேகமில்லை'' என்றான் யுதிஷ்டிரன்.

''என்ன நீர் நபும்ஸகனைப் பற்றியே திரும்ப உளறுகிறீர்? என் குமாரனுடைய ஜெயத்தைப் பற்றி நான் பேசும்போது இந்த அலியின் சாரத்யத்தை ஒரு பெரிய விஷயமாகச் சொல்கிறீரே!'' என்று விராடன் கோபமாகச் சொன்னான்.

''அப்படிச் சொல்லலாகாது. பிருகன்னளை சாதாரணமானவனல்ல. அவன் ஓட்டின தேர் ஒரு நாளும் தோற்காது. அவன் நடத்தும் தேரில் நின்றவன் எதையும் செய்து முடிப்பான்'' என்று திரும்பவும் கங்கர் சொல்ல அரசனுடைய கோபம் அதிகரித்தது.

''ஓய் பிராமணரே! இம்மாதிரிப் பேசாதேயும்!'' என்று சொல்லி விராடன் ஆட்டத்துக் காயை எடுத்து யுதிஷ்டிரன் முகத்தில் எறிந்து கையை ஓங்கி வீசிக் கன்னத்தில் ஓர் அடி அடித்தான். யுதிஷ்டிரன் முகத்தில் காயமுண்டாகி, ரத்தம் பெருக ஆரம்பித்தது.

உடனே பக்கத்தில் இருந்த ஸைரந்தரி தன் மெல்லிய உத்தரீயத்தைக் கொண்டு காயத்தைத் துடைத்தான்.



வஸ்திரம் நனைந்து போக அதை ஒரு பொற் கிண்ணத்தை எடுத்து அதில் பிழிந்தான். ''இது என்ன வேலை? ரத்தத்தை ஏன் கிண்ணத்தில் பிழிகிறாய்?'' என்று கேட்டான் இன்னும் கோபம் ஆறாத விராடன்.

''அரசனே! சந்நியாசியின் ரத்தம் கீழே விழலாகாது. விழுந்தால் அந்த ரத்தத்தில் எத்தனை பிந்துக்கள் உண்டோ அத்தனை வருஷங்கள் உம்முடைய ராஜ்யத்தில் மழை இல்லாமல் போகும். அதனால் அவ்வாறு கிண்ணத்தில் பிழிந்தேன். கங்கருடைய மேன்மை உமக்குத் தெரியாது'' என்றான்.

இதற்குள் வாயில் காப்போன் வந்து, ''உத்தரனும், சாரதி பிருகன்னளையும் வந்திருக்கிறார்கள். அரசனைப் பார்க்க விரும்பி வாயிலில் ராஜ குமாரன் நிற்கிறான்'' என்று சொன்னதும் விராடன் பரபரப்புடன் எழுந்து, ''வரச் சொல், வரச் சொல்'' என்றான்.

யுதிஷ்டிரன் மெதுவாகத் துவார பாலகனிடம் ''உத்தரன் ஒருவன் மட்டும் வரட்டும். பிருகன்னளை வரவேண்டாம்'' என்று இரகசியமாகச் சொல்லி அனுப்பினான். தன் முகத்தில் உண்டான காயத்தை அருச்சுனன் பார்த்தால் கோபம் தாங்க மாட்டான். காயம் யுத்தத்தில் பட்டதாக இருந்தால் லட்சியம் செய்யவே மாட்டான். ஆனால், மற்ற விதமாக ஒருவன் தரும புத்திரனுக்குச் செய்த அபவாதத்தைப் பொறுக்கவே மாட்டான். ஏதாவது விபரீதம் நேரிடும் என்று யுதிஷ்டிரன் இவ்வாறு செய்தான்.

உத்தரன் உள்ளே வந்ததும் விராடனை நமஸ்கரித்துக் கங்கரையும் வணங்கப் போனான். அப்போது அவர் முகத்தில் ரத்தப் பெருக்கைப் பார்த்துத் திகைத்தான். உத்தரனுக்குக் கங்கர் யுதிஷ்டிர மகாராஜா என்பது தெரியுமல்லவா?

''அரசனே! இந்த மகானை யார் உபத்திரவம் செய்தது?'' என்றான்.

விராடன் அப்போது மகனைப் பார்த்து, ''புத்திரனே! உன் வெற்றியைக் கேட்டு மகிழ்ந்து நான் உன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசியபோது, இந்தப் பிராமணர் உனக்குத் தேரோட்டிய நபும்ஸகனைப் புகழ்ந்து, உன் ஜெயத்தையும் வீரியத்தையும் குறைத்துப் பேசினார். அதை என்னால் பொறுக்க முடியவில்லை. இவர் அசூயைக்காரர்; அவரை நான் அடித்து விட்டேன். இதைப் பற்றி என்ன?'' என்றான்.

''ஐயோ! பெரும் பிழை செய்து விட்டீர்! உடனே அவர் காலில் விழுந்து வணங்கி க்ஷமிக்கும்படி கேட்டு அவர் மன்னிப்பை அடைய வேண்டும். இல்லாவிடில் நம்முடைய குலம் வேரோடு அழிந்து போகும்'' என்று உத்தரன் பயமும் வருத்தமும் மேலிட்டுத் தகப்பனைக் கேட்டுக் கொண்டான்.

விராடனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மனக் குழப்பமுற்று ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் நின்றான்.

உத்தரன் மறுபடியும் மிகவும் வருந்தி வேண்ட விராடன் யுதிஷ்டிரனை வணங்கிப் பொறுத்தருளக் கேட்டுக் கொண்டான்.

பிறகு, ''அப்பனே! நீயல்லவோ வீரன்! கௌரவ சேனையை எவ்வாறு வென்றாய்? பசுக்களை எவ்வாறு மீட்டாய்? எல்லாம் விவரமாய்ச் சொல்லக் கேட்டு நான் மகிழ்ச்சியடைய வேண்டும். நடந்ததை யெல்லாம் சொல்'' என்று விராடன் மகனை ஆலிங்கனம் செய்து உட்காரச் செய்து நடந்ததை யெல்லாம் சொல்லச் சொன்னான்.

உத்தரன், ''மகாராஜாவே! நான் எந்தச் சேனையையும் ஜயிக்கவில்லை. எந்தப் பசுக்களும் என்னால் மீட்கப்படவில்லை. எல்லாக் காரியத்தையும் ஒரு தேவகுமாரன் செய்தான். அவனே கௌரவப் படையைச் சிதறடித்தது. அந்த வீரனே பசுக்களை மீட்டது. நான் ஒன்றும் செய்யவில்லை'' என்றான்.

''அந்த வீரன் எங்கே? அவனைக் கூப்பிடு. என் மகனை யமன் வாயிலிருந்து காப்பாற்றித் தந்த அந்த வீரனை நான் என் கண்களால் பார்த்து மகிழ வேண்டும். என்னுடைய மகள் உத்தரையை அவனுக்குத் தருவேன். நான் அவனைப் பூஜிக்க வேண்டும். அவனை அழைத்து வா'' என்றான் அரசன்.

''அந்தத் தேவகுமாரன் மறைந்து விட்டான்! ஆனால் அவன் இன்றோ நாளையோ வருவான் என்று எண்ணுகிறேன்'' என்று சொன்னான் ராஜ குமாரன்.

இந்திரனுடைய மகனான அருச்சுனன் தேவகுமாரன் அல்லவா? அவன் மறுபடியும் பிருகன்னளை உருவத்தில் மறைந்து விட்டதும் உண்மையே அல்லவா?

ஃ ஃ ஃ

விராடனுடைய ராஜசபை கூடிற்று. அரசனும் அரசகுமாரனும் அடைந்த வெற்றிகளைப் பாராட்ட நகரத்துப் பிரமுகர்கள் எல்லாரும் வந்து கூடி ஆசனங்களில் அமர்ந்தார்கள். விராடனுடைய ஜயத்துக்குக் காரணமாகிய கங்கர், சமையல்கார வல்லன்,

பிருகன்னளை, தந்திரிபாலன், தாமக்கிரந்தி இவர்களும் சபைக்கு வந்தார்கள். ராஜகுமாரர்களுக்கென்று அமைக்கப்பட்ட சிம்மாசனங்களில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.

அரண்மனைக் குற்றேவலில் அமைக்கப்பட்ட இவர்கள் அரசன் சொல்லித்தான் இவ்வாறு சிம்மாசனங்களில் உட்காரத் துணிந்தார்கள் என்று அனைவரும் எண்ணினார்கள். ஆபத்தான காலத்தில் அரசனுக்கு அவர்கள் செய்த பேருதவியும் வீரச் செயல்களும் இதற்குக் காரணமாயிருக்கும். அந்த வீரர்களை அவ்வாறு கௌரவிப்பதும் சகஜம் என்று நினைத்தார்கள்.

விராடராஜன் சபையில் பிரவேசித்தான். சந்நியாசி கங்கரும் சமையல்காரனும் குதிரைக்காரனும் மாட்டுக்காரனும் ராஜகுமாரர்கள் உட்கார வேண்டிய ஆசனங்களில் சுகமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மறுபடியும் கோபாவேசமானான்.

கொஞ்ச நேரம் வாக்குவாதம் நடந்தது. பிறகு வேடிக்கை போதும் என்று பாண்டவர்கள் தாங்கள் யார் என்பதைச் சபைக்கு வெளிப்படுத்தினார்கள். அனைவரும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் பரவசம் அடைந்தார்கள்.

பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியும் இவ்வளவு நாள் தான் அறியாமல் தனக்குத் தொண்டு செய்து கொண்டு அரண்மனைச் சேவகர்களாக இருப்பதையும் தனக்கும் உத்தரனுக்கும் அவர்கள் செய்த பேருபகாரத்தையும் எண்ணி எண்ணி விராடன் மனம் பூரித்து, ''இதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?'' என்று கங்கரைப் பன்முறை ஆலிங்கனம் செய்தான்.

தன் ராஜ்யம் முழுவதையும் யுதிஷ்டிரனுக்குக் கொடுத்து மறுபடியும் அவனிடமிருந்து பெற்றுக் கொண்டான். தன் மகள் உத்தரையை அருச்சுனனுக்குக் கன்னிகாதானம் செய்தே தீர வேண்டுமென்றும் சொன்னான்.

அருச்சுனன், ''அது தகாது. உத்தரை என்னிடத்தில் நாட்டியமும், கானமும் கற்றவள். அவளுக்கு நான் ஆசாரியனும், தகப்பனும் போல் ஆவேன்'' என்று அவளைத் தன் மகன் அபிமன்யுவுக்கு விவாகம் செய்வித்து மருமகளாக்கிக் கொள்ள அங்கீகரித்தான்.

ஃ ஃ ஃ

இதன்பின் துராத்மாவும் வஞ்சகனுமான துரியோதனனிடமிருந்து தூதர்கள் வந்தார்கள்.

''குந்தி புத்திரரே! துரியோதன ராஜா உம்மிடம் எங்களை அனுப்பியிருக்கிறார். தனஞ்சயனுடைய அவசரச் செயலால் நீர் மறுபடியும் காட்டுக்குப் போக வேண்டியவர் ஆனீர். பதின்மூன்றும் வருஷம் முடிவடைவதற்குள் தெரிந்து கொள்ளப்பட்டான். ஆகையால் பிரதிக்ஞைப்படி மறுபடியும் பன்னிரண்டு வருஷங்கள் வனம் செல்ல வேண்டியது'' என்று யுதிஷ்டிரனிடம் சொன்னார்கள்.

தருமபுத்திரர் சிரித்து விட்டு, ''தூதர்களே! சீக்கிரமாகத் திரும்பிப் போய்த் துரியோதனனிடத்தில் சொல்லுங்கள். பிரதிக்ஞைப்படி பதின்மூன்றுவது ஆண்டு தீர்ந்ததா இல்லையா என்பதைக் கணிதம் படித்த பாட்டனார் பீஷ்மரையும், சோதிடம் அறிந்தவர்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொல்லுங்கள். பதின்மூன்றுவது வருஷம் பூர்த்தியான பின்னரே, தனஞ்சயனுடைய வில்லின் ஒலி சத்துருக்களை நடுங்கச் செய்தது!'' என்றார். **(தொடரும்)**

எழுத்தில் புதுமை

அம்மா வந்தாள்



திரு தி. ஜானகிராமன்

சமீப காலத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய புத்தகம் என்பதால் மட்டும் புதுமை அல்ல. பாத்திரப் படைப்பு, கதையின் மையக் கருத்து, உரையாடல் மூலமாகவே கதையைக் கூறிச் செல்கிற பாணி, கதாபாத்திரங்கள் முழு உணர்ச்சிகளையும் கொட்ட முடியாமல் திணறுகிற அமைப்பு — இப்படிப் பலவிதங்களிலும் இந்த நாவல் புதுமையான முயற்சியே.

எல்லோரும் கண்டு வணங்கும் வேதவித்தான அப்பா தண்டபாணி, கம்பீர அழகும், பெருமிதமும் நிறைந்து வழியும் அம்மா அலங்காரம், இவர்களுடைய ஐந்தாறு பிள்ளை பெண்கள். இது குடும்பம். எட்டாவது வயதிலேயே இவர்களில் மூன்றாவது பிள்ளை அப்பா அம்மாவின் விருப்பப்படி முந்நூறு மைல்களுக்கப்பால் காவிரிக் கரை கிராமம் ஒன்றில் வேதம் படிக்க அனுப்பப்படுகிறான். அவன்தான் அப்பு — இந்த நாவலின் நாயகன். பதினாறு ஆண்டுகள் கழிந்ததும் வேதாத்யயனம் முடிவடைந்து பட்டணம் திரும்புகிறான். கிராமத்துச் சூழ்நிலையையும் அவன் மனத்தைக் கவர்ந்த அன்றைய காவிரிக் கரையையும் அவன்பால், பெரு மதிப்பு வைத்திருந்த பாடசாலைத் தலைவியான அத்தையையும் அவனை உயிருக்குயிராய் நேசித்த ஆனால், அவனால் அப்போது விரும்பப்படாத விதவை இந்துவையும் விட்டுப் பிரிந்து வருகிறான். வந்த இடத்தில், குடும்ப நண்பனான சிவசு என்பவனுக்கும் தன் தாயாருக்கும் இடையே பல்லாண்டு காலமாக வேர்விட்டிருந்த உறவின் உருவம் தலைநீட்டுகிறது. தணல் புழுவாகவும், முன் மேல் சீலையாகவும், மனம் வெந்து கிழிந்து வெதும்பி நைகிறான். பழைய பாடசாலைத் தலைவி பவானி அத்தைக்கு உடம்பு சரியில்லை என்ற சாக்கை வைத்துக் கொண்டு காவிரிக் கரை கிராமத்துக்குத் திரும்பியவன் பட்டணத்தை நினைக்காமலேயே இருந்து விடுகிறான். திடீரென்று ஒரு நாள் அவனை ஈன்ற அம்மா அவனைத் தேடி வருகிறாள். வந்த இடத்தில் இந்துவைப் பார்த்ததும் 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றபடி அவனுக்கும் தன் பிள்ளைக்கும் இருக்கக்கூடிய இருக்கப் போகிற உறவு புரிந்து விடுகிறது! "நீ ரிஷியா விட்டே, உன் காலில் விழுந்து எல்லாத்தையும் போகக் கிண்டு விடலாம்னு நினைச்சேன். நீயும் அம்மா பிள்ளையாவே இருக்கே!" என்று நிலைமையை விமரிசனம் செய்துவிட்டு அலங்காரத்தம்மாள் காசிக்குப் போய் விடுகிறாள் தன் கர்மத்தைத் தொலைக்க!

அப்பு அம்மா காட்டிய வழியில் இந்துவோடு மறை வாழ்க்கையில் ஈடுபட்டவாறே வேத பாடசாலையைச் சாங்கோபாங்கமாக நிர்வகித்து வருகிறான் என்று வாசகர்களை ஊகிக்க விடுகிறார் ஆசிரியர் திரு ஜானகிராமன். இதைப் படிப்பவர்கள் சாதாரணமாக வேறு எந்தவிதமான முடிவுக்கும் வரமாட்டார்கள். இதைத் தவறு என்று சொன்னால் எல்லா நாவல்களுமே முடிவில் மிக உன்னதமான உணர்வுகளைத்தான் ஏற்படுத்தியாக வேண்டுமா? என்று வாதாடலாம்.

எல்லாவற்றையும் பட்டவர்த்தனமாகக் கொட்டித் தீர்க்காமல் சில விஷயங்களை வாசகர்களுக்குச் சொல்லாமலே உணர்த்தக் கலைத் திறன் நிரம்ப வேண்டும். இந்தக் கலைத் திறனை நன்கு கைவரப் பெற்றிருக்கும் தி. ஜானகிராமன் ஆண் — பெண் உறவு சம்பந்தமான பகுதிகளை எழுதும்போது அந்தக் கலைத் திறனைப் பறி கொடுத்து விட்டு நிற்பது ஏன் என்பது புதிர்.

ஆசிரியரின் சிருஷ்டியில் தண்டபாணி — அலங்காரம் — சிவசு இந்த நாவலின் முக்கிய பாத்திரங்கள். பழைய முக்கோணம்தான்! ஆனால் இந்த முக்கோணத்தைப் பிள்ளை அப்புவின் மனக் கண் மூலம் பார்க்க வைக்கும் புதிய



உத்தியைக் கையாளும் வேகத்தில், அப்புவின் (மனக்) கண்ணைத் திட்சண்ணியமாக்கிய அளவுக்கு முக்கோணத்தின் கோடுகளைப் பளிச் சென்று அவர் வரையவில்லை.

குடும்பத் தலைவியின் கற்புமீது லவலேச சந்தேகத்தைக் கற்பித்து அதையே 'ஆகாஸதற' என்று அமர்க்களப்படுத்தி ஒரு நாவல் முழுதும் ஓட்டிவிடுகிற நாவலாசிரியர்களை நிரம்ப நாம் கண்டிருக்கிறோம். அப்படி இருக்க, அலங்காரம் என்னும் பாத்திரத்திடம் 'பொசுக்க வேண்டிய' மனமறிந்த பாபத்தை ஏற்றிவிட்டுக் குடும்பத்திலுள்ளவர்கள், அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஏதுமே நடக்காதது போல் 'நாமுண்டு, நம் வேலை உண்டு' என்று இருப்பது போலச் சித்திரிக்கும் ஜானகிராமன், பாத்திரப் படைப்பிலும் மனித மனத் தத்துவத்தைக் காட்டுவதிலும் ஒரு புதுமையான சாதனையைத்தான் செய்திருக்கிறார்! ஆனால் படிப்பவர்களுக்கு நம்பிக்கை பிறக்க வேண்டுமே ?

> **''தன்பால் மனையாள் அயலான் கைக்கண்ட பின்னும்**
> **இன்பால் அடிசிற்(கு) இவர்கின்ற கைப்பேடி''**
>
> *(சிவகசிந்தாமணி)*

யான தண்டபாணிக்கு வேதம் படிக்க வந்த நீதிபதிகளை அதட்டிக் கேள்வி கேட்டு அவமானப்படுத்தும் அளவுக்குத் திராணி எப்படி வந்தது என்பது புலனாக வில்லை.

நாவல் முழுவதிலும் பல பாத்திரங்கள் மூலமாக வேதத்தின் பெருமை பேசப்படுகிறது! ''வேதத்தை ஏணியாக வைத்துக் கொண்டு ஏறி ஏறி அதன் முடிவில் நிற்கிற புருடனை — பகவானை — காணத்தானே இத்தனையையும் சகித்துக் கொண்டிருக்கிறோம்.

''வேதத்தை இழுக்காதே. வேதம் எங்கம்மா மாதிரி. அதுதான் எனக்கு ஈசுவரன். எனக்கும் அம்மா. எங்கம்மா மாதிரி அது ஒரு தெய்வம். எங்கம்மா மாதிரி அது புடம் போட்ட தங்கம், மாற்றுக் குறையாத தங்கம்...'' இத்தியாதி, இத்தியாதி.

ஃ ஃ ஃ

சிவசுவை நாம் முதல் முதலாகச் சந்திக்கும் போது ஆசிரியர் அவனை அறிமுகப்படுத்தும் அழகே அலாதி. ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த சிவசுவைு மீசை எடுத்துவிட்ட தம்பி கோபுவாக அப்பு நினைத்துப் பின்னர் திடுக்கிடும் இடம் பிரமாதமாக அமைந்திருக்கிறது. சிவசு அப்புவுக்குத் தரவிருந்த வெகுமானத்தை அலங்காரம் பிடிவாதமாகத் தடுப்பது அவளுக்குச் சிவசுவின் மீதுதான் ஆசை, அவனுடைய பணத்தின்மீது அல்ல என்பதை எடுத்துக்காட்டத்தான் போலும்!

''உன்னோடு அப்பாவும் காசிக்கு வரவில்லையா?'' என்று அம்மாவைக் கேட்கிறான் அப்பு.

''அப்பாவுக்கு ஏதுக்கடா காசி? அது ஞான சூரியன். கருணைமூர்த்தி. என்னைக் கருக்கிப் போடாமல் இருந்ததே இத்தனை நாளா! அதுவே பெரிசு. நான் மாத்திரம் தான் போகப் போறேன்'' என்ற அலங்காரத்தின் வார்த்தைகள் வெறும் அலங்கார வார்த்தைகள்தாம். அலங்காரம் பயந்தது போல் தண்டபாணிக்கு அவளைப் பொசுக்கவோ, நசுக்கவோ திராணி துளிக்கூடக் கிடையாது என்பது நமக்குத் தெரியும். அல்லது மன்னிக்கத்தான் அதிகத் திராணி வேண்டும் என்பது ஆசிரியரின் முடிவா? இருக்கலாம்.

தஞ்சை மாவட்டம் தேவங்குடியில் 1921ல் பிறந்து, பி.ஏ. எல்.டி. படித்துச் சில காலம் பள்ளி ஆசிரியராக இருந்த திரு தி. ஜானகிராமன் ஒரு பத்தாண்டு காலம் சென்னை வானொலி நிலையத்தில் கல்வி நிகழ்ச்சிப் பொறுப்பாளராகப் பணி புரிந்துவிட்டு இப்பொழுது புதுடில்லி ரேடியோவில் உதவித் தலைமைத் தயாரிப்பாளராக விளங்குகிறார். இவர் எழுதிய 'மோக முள்' நாவலும், 'நாலு வேலி நிலம்', 'வடிவேல் வாத்தியார்' நாடகங்களும் மிகப் பிரபலமானவை.

இந்த 'அம்மா வந்தாள்' நாவலைப் பற்றி ஆசிரியரை எழுதிக் கேட்டபொழுது அவர் தெரிவித்த சில கருத்துக்களை வாசகர்கள் முன்பு வைக்கிறேன்:

''அம்மா வந்தாளைப் பற்றி நான் ரகசியங்கள் ஏதும் சொல்ல இல்லை. நூல்தான் முக்கியம். எப்படி ஏன் எழுதப்பட்டது என்பது யாருக்குமே முக்கியமில்லை என்பது என் துணிபு. கலைப் படைப்பு என்ற ஒரு நோக்கோடு அதைப் பார்ப்பது நல்லது. பலர் அதைத் தூற்றிவிட்டார்கள். நான் 'பிரஷ்டன்' என்றும் சொல்லிவிட்டார்கள். நம்முடைய நாட்டில் கலை, பிரஷ்டர்களிடமிருந்து தான் பிறந்து வருகிறது என்று கூற விரும்புகிறேன்.

'அம்மா வந்தாள்' நான் கண்ட கேட்ட சில மனிதர்கள், வாழ்க்கைகள், பாத்திரங்கள் இவற்றிலிருந்து வடிக்கப்பட்ட ஒரு முயற்சி. மனத்துக்குள் ஏற்படும் விசித்திரமான அனுபவங்கள், பலவற்றைப் பார்த்து ஊறி வெகு காலமாக அனுபவித்த சில உணர்வுகள் கடைசியில் எப்படியோ உருவம் பெறுகின்றன. நாம் உருவம் கொடுப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அம்மா வந்தாளின் ஒவ்வொரு பாத்திரத்திலும் நான் பார்த்த ஏழெட்டுப் பாத்திரங்களின் சேஷ்டைகள் ஒருமித்து இருக்கின்றன. அந்த அம்மாள் நான் கண்ட ஐந்தாறு பெண்களின் கலவை. அகண்ட காவேரி, வேத பாடசாலை, சென்னையின் பெரிய மனிதர்கள், ஸம்ஸ்கிருதமும் வேதாந்தமும் படிப்பது, தஞ்சை மாவட்டத்துப் பெரிய மிராசுதார்களின் லௌகிக அடாவடிகள் இப்படி எத்தனையோ சேர்ந்து எப்படியோ ஓர் உருவமாக வந்தன.

மையக் கருத்தைப் பற்றி நான் என்ன சொல்ல வேண்டும்? இது நடக்குமா, நடக்காதா என்று விமரிசகர்கள் கூறுவார்கள். அவர்களைப் பற்றி நான் எப்போதுமே கவலைப் படுவதில்லை. இரண்டு மூன்று அளவுகோல்களை வைத்துக் கொண்டு படைப்பாளியின் விசித்திரமான அனுபவங்களை அளக்க முற்படுகிற பேதை விமரிசகன். அவனுக்குப் பலம் பழங்காலம். கலை அமைதி பற்றி ரசிகனுக்குத்தான் தெரியும். கலை உலகம் ஒரு மாய லோகம். அதையும் வாழ்க்கையின் புற உண்மைகளையும் ஒன்றெனக் குழப்பிக் கொள்ளக் கூடாது.''

—மகரம்

கிடைக்குமிடம்: வாசகர் வட்டம், தி.நகர் சென்னை—17. விலை. ரூ. 5


பந்தயங்கள் பலவிதம்



எதற்கெடுத்தாலும் பந்தயம் கட்டுவதென்பது ஆதிநாளிலிருந்தே பழக்கமாக இருந்திருக்கிறது. மலர் விற்கும் மங்கை ஒருத்தியைச் சீமாட்டியாக ஆறு மாதங்களில் மாற்றுகிறேன் எனப் பேராசிரியர் ஹிக்கின்ஸ் கட்டிய பந்தயமும் இப்பூவுலகை எண்பது நாட்களில் சுற்றி வர முடியும் என்று ஃபாக் கட்டிய பந்தயமும் இன்று இலக்கியத்திலும் திரை உலகிலும் அழியாத புகழ் பெற்றுள்ளன.

பந்தயங்கள் சர்வ சாதாரணமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. விசித்திரமான நம்ப முடியாத பந்தயங்களாகவும் இருக்கலாம். 1908ம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டிலுள்ள மிகப் பெரிய பணக்காரர்களுள் ஒருவரான லான்ஸ்டேல் பிரபு ஜே.பி. மார்கன் என்ற மற்றொரு பணக்காரரிடம் யாரும் அறியாமல் இரகசியமாக ஒரு மனிதன் உலகைச் சுற்றி வர முடியும் எனக் கூறி எட்டு லட்சம் ரூபாய்களைப் பந்தயமாகக் கட்டினார். இந்த இரு பணக்காரர்களின் நண்பரான பென்ஸிலி என்பவர் தாம் அவ்விதம் உலகைச் சுற்றி வருவதாகக் கூறி 1908ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளன்று லண்டன் நகரில் உள்ள டிரபால்கர் சதுக்கத்தை விட்டுப் புறப்பட்டுத் தமது விசித்திர யாத்திரையைத் தொடங்கினார். பந்தயத்தைத் தொடங்கு முன்னர் அவர் நாலரை பவுண்டு எடையுள்ள இரும்பு முகமூடி ஒன்றை அணிந்து கொண்டு ஒரு கை வண்டியில் பயணத்துக்கு வேண்டிய பல பொருட்களை எடுத்துக் கொண்டார். ஆறரை ஆண்டுகளுக்குப் பின்னர் முப்பதினாயிரம் மைல்களைக் கடந்து அவர் இத்தாலி நாட்டில் உள்ள ஜினோவா நகரை அடைந்ததும் முதல் உலகப் பெரும் போர் தொடங்கி விட்டது. அப்போது பந்தயத்தை வாபஸ் பெறுவதாக லான்ஸ்டேல் பிரபு அறிவிக்கவே, பென்ஸ்லி வேண்டா வெறுப்பாக இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

□ 1954ம் ஆண்டில் ஜப்பான் நாட்டில், 'கோல்ஃப் விளையாட்டுக்காரர் ஒருவர் ஜப்பானின் புகழ்பெற்ற ப்யூஜியாமா எரிமலையிலேயே தம்மால் 'கோல்ஃப்' ஆட முடியும் எனப் பந்தயம் கட்டினார். கோல்ஃப் ஆடியபடியே 12,395 அடி உயரமுள்ள ப்யூஜியாமாமலையின் சிகரத்தை அடைவதற்குள் அவர் 27 கோல்ஃப் பந்துகளைத் தொலைத்து விட்டார்!



□ ஆங்கில மொழியில் இன்று எல்லோரும் உபயோகப்படுத்தும் ஒரு சொல் ஒரு பந்தயத்தால் தோன்றியதுதான். டாலி என்ற அயர்லாந்து தேசத்தவன் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ஒரு புதிய ஆங்கிலச் சொல்லையே தன்னால் உருவாக்க முடியும் எனப் பந்தயம் கட்டினான். பந்தயம் கட்டிய சில மணி நேரத்துக்குள்ளேயே அவன் குவிஸ் (Quiz) என்ற சொல்லை மூலைக்கு மூலை டப்ளின் நகரச் சுவர்களின் மீது சாக்கட்டியால் எழுதிப் பிரபலப்படுத்தினான். அந்த வார்த்தைக்குப் 'புதிர், விடுகவி, பரிசோதனை' என்று பொருளும் கொடுத்தான்.

□ 1910ம் ஆண்டில் பாரிஸ் நகரில் வாழ்ந்த ஹொரேஸ் டி வெரே கோல் என்ற கோமாளி நகரில் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதியில், நடுத் தெருவில் அரை மணி நேரம் தன்னால் படுக்க முடியும் எனப் பத்தாயிரம் பிராங்குகள் பந்தயம் கட்டினான். அவனது பந்தயத்தை அவனது நண்பர்களும் ஒப்புக் கொண்டார்கள். மறுநாள் குறிப்பிட்ட இடத்தில் — பாலஸ் டி ஆபரா என்ற நாடக மன்றத்தின் முன்பு — மாலை ஐந்து மணி அளவில் அந்த நண்பர்கள் நின்றுகொண்டிருந்தனர். ஆயிரக் கணக்கான வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஊர்ந்து செல்லும் அவ்வேளையில் அவர்களால் கோலைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் வீதியின் நடுவில் ஒரு ஹைதர் காலத்து மோட்டார் வண்டி நின்று கொண்டிருந்தது. அதன் அடியில் நெடுஞ்சாண் கிடையாகப் படுத்தவாறே, காரோட்டி ஒருவன் அதனைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தான். அரை மணி நேரம் சென்ற பின் அவன் ஆபராவின் வாசலை நோக்கி நடந்து வந்தான். கோல் பந்தயத்தில் தோற்றுவிட்டு ஓடிப் போய்விட்டான் என்று நினைத்துக் கொண்டிருந்த அவனது நண்பர்கள் காரோட்டியைக் கண்டதும் திடுக்கிட்டுச் சிலையாக நின்று விட்டார்கள். ஆம்! அந்தக் காரோட்டி வேறு யாருமல்ல; பந்தயம் கட்டிய கோமாளியேதான்!



□ ஜனநாயக நாடுகளில் அவ்வப்போது நடைபெறும் பொதுத் தேர்தல்களில் யார் வெற்றி பெறுவார் எனப் பலர் பந்தயம் கட்டுவது உண்டு. அண்மையில் தென்காசியில் நடந்த பொதுத் தேர்தலில் ஒருவர் காங்கிரஸ் வேட்பாளர்தான் ஜெயிப்பார் எனக் கூறிப் பந்தயம் கட்டி இருபத்தைந்தாயிரம் ரூபாய்களை இழந்தது நினைவிருக்கலாம்.

1948ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஹாரி ட்ருமன் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டுத் தேர்தலில் நின்ற போது ஹார்வார்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் ட்ருமன் ஜயிக்க



மாட்டார் எனவும், ஜெயித்து விட்டால் தம்முடைய சட்டையை அதிலுள்ள பித்தான்கள் உள்படச் சாப்பிடுவதாகவும் பந்தயம் கட்டினார். ட்ருமன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவே அப்பேராசிரியர் தமது சட்டையை அமிலத்தில் நனைத்து வடிகட்டி, சுத்தம் செய்து, வெண்ணெய் தடவிய ரொட்டித் துண்டுகளிடையில் வைத்துத் தின்றார் !

☐ அமெரிக்காவில் 1936ம் ஆண்டில் இதே மாதிரி ஜனாதிபதி தேர்தல் பற்றிய பந்தயத்தில் தோற்ற பில் வில்லியம்ஸ் என்பவர் தாம் பந்தயம் கட்டியபடியே ஒரு பட்டாணியைச் சுமார் நூறு அடி உயரமுள்ள ஒரு குன்றின் உச்சிக்கு மூக்காலேயே உருட்டிச் சென்றார். அதற்கு முப்பது நாட்கள் பிடித்தன.

☐ 1932ம் ஆண்டில் ஜே. டி. ஸ்டாட்லர் என்ற அமெரிக்கர், காலின்ஸ் என்ற தமது நண்பரிடம் அவ்வாண்டு ஜார்ஜியானா மாநிலத்தில் புதிதாக எழுப்பப்பட்ட மாநில அரசாங்கக் கட்டடம் இன்னும் ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் பயன்படும் என்று ஐந்து டாலர்கள் பந்தயம் கட்டினார். அவர் கட்டிய பந்தயத்துக்குக் காலின்ஸூம் ஒப்புக் கொண்டார். பந்தயப் பணத்தை இருவரும் ஜார்ஜியானா நகரில் உள்ள பாங்க் ஒன்றில் கட்டினர். பந்தயப் பணத்தையும் அதற்குக் கிடைக்கும் கூட்டு வட்டித் தொகையையும் வென்றவரின் வாரிசுதாரருக்கு ஐந்நூறு ஆண்டுகள் கழித்து, அதாவது 2432–ம் ஆண்டில் பாங்கு கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

கி. பி. 2432ம் ஆண்டில் வென்றவரின் வாரிசுக்கு எவ்வளவு தொகை கிடைக்கும் தெரியுமா ?

2,084,495,605 டாலர்களும் 22 சென்ட்டுகளும் ! அதாவது கிட்டத்தட்ட 1600 கோடி ரூபாய்கள்!

—அ. இராமதுரை

வாசக அன்பர்களுக்கு :

விசித்திரமான பந்தயங்கள் சிலவற்றைப் பற்றிப் படித்தீர்கள். இவை போன்ற விநோதமான பந்தயம் எதிலேனும் நீங்கள் ஈடுபட்டதுண்டா? விவரம் எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் விநோதப் பந்தய விவரத்துக்குப் பரிசு உண்டு.

கட்டுரை அரைப் பக்கத்துக்கு அதிகமாக இருக்கக் கூடாது. பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கடிதப் போக்குவரத்து கிடையாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உறையின்மீது 'விநோதப் பந்தயம்' எனக் குறிப்பிடுவது அவசியம்.

முடிவு தேதி: செப்டம்பர் 14, 1968.

ஓர் அன்பளிப்பு

புதிய நேரடிச் சந்தாதாரர்களுக்கு 'பிரபல நட்சத்திரம்' என்னும் இந்தச் சிறுகதைத் தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்ததும் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே இந்த நல்வாய்ப்பை அன்பர்கள் பலர் பயன்படுத்திக் கொண்டனர். வேறு பல வாசகர்கள் இந்த ஜூலை — ஆகஸ்டு மாதங்களில்தான் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்றும் அதனால் சம்பளத்துக்காகவும் புத்தகங்களுக்காகவும் இம்மாதங்களில் ஏகமாகச் செலவாகிறதென்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். இன்னும் ஒரு மாத காலத்துக்கு இந்த விசேஷச் சலுகையை நீடித்தால் பிரபல நட்சத்திரம் சிறுகதைத் தொகுப்பைத் தாங்களும் பெற்று மகிழலாமே என்று ஆசையுடன் விண்ணப்பித்திருக்கிறார்கள்.



இவர்களது வேண்டுகோளுக்கிணங்க, இந்த விசேஷச் சலுகையை செப்டம்பர் முப்பதாம் தேதிவரை நீடித்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய நேரடிச் சந்தாதாரர்கள் மட்டுமின்றி, ஏற்கெனவே நமது காரியாலயத்தில் கல்கிக்குச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களும் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் பெற முடியும். அதற்கு அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குள் தங்கள் சந்தாவை ஒரு வருடத்துக்குப் புதுப்பித்துக் கொண்டால் போதும். பழைய சந்தா நேயர்கள் சந்தாவை அனுப்பும்போது சந்தா எண்ணைக் குறிப்பிட வேணும். புதிய சந்தாதாரர்கள் தாங்கள் ''புதிய சந்தா'' என்பதையும் தெரிவிக்க வேணும்.

ஓர் ஆண்டுச் சந்தாவை மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு நேரடியாக மேற்படி தேதிக்குள் அனுப்ப வேண்டுகிறோம். சந்தாத் தொகை அனுப்பும்போது ''கல்கி சந்தா - புத்தக அன்பளிப்புத் திட்டம்'' எனத் தவறாது குறிப்பிடவும்.

ஆண்டுச் சந்தா: **இந்தியா: ரூ. 20. வெளிநாடுகள்: ரூ. 40.**
இலங்கை: (இலங்கை நாணய மதிப்புப்படி) ரூ. 21.


யார் சொன்னது
லக்மே
டால்கம்
விலையுயர்ந்-
தது
என்று?
தூவித் தூவி
மகிழுங்கள்
மேனிமுழுதும்!
தூவித் தூவி மகிழுங்கள் ஆசை தீர. மகரந்த மாரி பொழியட்டும் மெய்குளிர. நாளெல்லாம் நேசக் கதை சொல்லும் நறுமணம். விரும்பிய மாத்திரத்தில் கைக் கெட்டும் விலைநயம். லக்மே டால்கம். உரிமை கொள்வீர்கள் உடலார. உபயோகித்து மகிழ்ச்சிச் சுழலிலே திளைக்க 'லக்மே கரமான' நறுமணவகைகள் நான்கு: லேவெண்டர், நிர்வாண், வெட்டிவேர், சந்தனம்.
Lakmé
TALC
Lakmé
லக்மே
டால்கம்




டிேனாபால்

வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது

துவைத்த துணிகளை அலசுவதற்கு முன் நீரில் சிறிதளவு டினோபால் சேர்த்தால், சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது— ஷர்ட்டுகள், புடவைகள், படுக்கை விரிப்புகள், டவல்கள் எல்லாம்!

இத்தனைக்கும் ஆகும் செலவுதான் என்ன? துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவே! துணிகளைப் பாழாக்காமல் சாஸ்திரீய முறையில் வெண்மை பளிச்சிடச் செய்வது டினோபால்.

டினோபாலின் மற்ற பேக்குகள்:



ஒரு வாளித் துணிக்கு ஒரு பேக்கெட்



புதிய எகானமி பேக்

சுஹ்ரித் கெய்கீ லிமிடெட், த. பெ. 965, பம்பாய் 1 பி.ஆர்.

® டினோபால் என்ற பெயர் ஜே. ஆர். கெய்கீ எஸ். ஏ. பால் ஸ்விட்ஜர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

Shilpi SG 1A/69 Tam.



''மதராஸில் இருந்து பார்த்தால் பனிமலைச் சிகரம் தெரிகிறது!''

''மதராஸின் ஜனத்தொகை மிகக் குறைவு - 1810தான்!''

''மதராஸில் சாம்பார் சாதம் ருசியாக இருந்தது!''

''இதெல்லாம் என்ன? யூ. பி. எஸ். ஸி. பரீட்சையில் கேள்விகளுக்கு யாராவது பிரகஸ்பதி அளித்த விநோத விடைகளா?'' என்று கேட்கிறீர்களா ? இல்லவே இல்லை.

புது உலகம் என்று அழைக்கப்படும் அமெரிக்காவில் ஆரிகன் மாநிலத்தில் ஒரு மதராஸ் இருக்கிறது. மாட்ரஸ் என்றுதான் அவர்கள் நம் மதராஸையும், அமெரிக்க மதராஸையும் உச்சரிக்கிறார்கள். ஸான் பிரான்ஸிஸ்கோ அருகே பாலோ ஆல்டோவில் நாங்கள் வசிக்கிறோம். எனக்குப் பொழுது போகாத நேரங்களில் அமெரிக்க தேசப் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஊர்களின் பெயர்களைப் பார்ப்பது வழக்கம். அப்பொழுது இந்த மதராஸ் என் கண்ணில் பட்டது. 'இங்கிருந்து 13,000 மைல்கள் தூரத்திலிருக்கும் மதராஸுக்கு நினைத்தவுடன் போக முடிகிறதா? அதனால் இங்கிருந்து சுமார் 575 மைல்கள் தூரத்தில் இருக்கும் மதராஸுக்காவது போகலாமே' என்று நினைத்தோம்.

இந்த மதராஸில் இருந்து பார்த்தால் மவுண்ட் ஜெபர்சன் பனிமலைச் சிகரம் தெரிகிறது. சிகரத்தின் உயரம் பதினோராயிரம் அடி. ஆனால் மதராஸில் நல்ல வெய்யில் காய்கிறது. ஜனத்தொகை 1810தான். இங்கே கால்நடைச் சந்தை விசேஷம்.

இங்கே இருப்பவர்களைப் பார்த்து இந்த ஊருக்கு மதராஸ் என்று எப்படிப் பெயர் வந்தது என்று கேட்டால் அவர்களுக்கு விடை தெரியவில்லை! நாங்கள் இந்தியாவில் உள்ள மதராஸிலிருந்து வருகிறோம் என்றால், ''உங்கள் தேசத்திலும் ஒரு மதராஸ் இருக்கிறதா?'' என்கிறார்கள். கடைசியாக ஒரு கடையில் விற்பனைக்கு வைத்திருந்த புத்தகங்களுள் ஒன்றிலிருந்து கீழ்க்கண்ட விவரம் கண்டுபிடித்தோம்:

முதலில் இந்த ஊரை அதன் உருவ அமைப்பினால் ''பேஸின்'' என்று அழைத்து வந்தார்கள். பின்னர் பால்மெய்ன் என்று அழைக்கலானார்கள். இங்கு தபால் நிலையம் ஆரம்பிக்கும்பொழுது தலைநகர் வாஷிங்டனிலிருந்து இப்பெயரை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று எழுதிவிட்டார்கள். ஏனென்றால், ஆரிகன் மாநிலத்திலேயே மற்றோர் நகரம் இப்பெயரில் இருந்தது. அப்பொழுது இங்கு தபாலாபீஸில் வேலை செய்து வந்தவருக்கு ஏனோ நம் மதராஸ் மனத்தில் நினைவு வந்தது. மதராஸ் என்னும் பெயரைத் தலைநகரமும் ஒப்புக் கொள்ளவே, 1902ம் ஆண்டு வேனிற்காலத்திலிருந்து இந்நகரம் மதராஸ் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

நாங்கள் தயார் செய்து எடுத்துப் போன சாம்பார் சாதத்தையும் தயிர் சாதத்தையும் மதராஸ் பூங்காவில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பினோம்! நம் மதராஸுக்கு வந்து அம்மா கையால் சாதம் சாப்பிட்ட திருப்தி ஏற்படாவிட்டாலும், நம் ஊரின் பெயருடைய நகரத்தைப் பார்த்தோம் என்ற திருப்தி மனத்தை நிறைத்தது. - ''மது''

22. கற்பனைத் தழும்பு

வார்டில் ஒரே பரபரப்பு. பத்தாம் எண் படுக்கை சீதம்மா, செல்லம்மாவின் படுக்கைக்கு ஓடி வந்தாள். மருந்துக் குப்பிகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்த நர்ஸ் ஓடி வந்தாள். டாக்டருக்கு ஆள் பறந்தது. ரேடியோ 'பட்'டென மூச்சை அடக்கிக் கொண்டது. ஆக்ஸிஜன் சிலிண்டர் உருண்டு வந்தது.

''அதோ, இந்த அம்மாவின் பிள்ளை போய்க் கொண்டிருக்கிறாரே, யாரேனும் போய்க் கூப்பிடுங்களேன் !'' என்றாள் சீதம்மா.

நிராசையின் அமைதியில் இலயித்தவாறே வசந்தன் நடந்து கொண்டிருந்தான். யாரோ படுவேகமாக, மூச்சுத் திணறலோடு அவனருகே ஓடி வருவது தெரிந்தது. தன்னைத் தொடரும் அந்த ஓட்டத்தைக் கண்டதுமே வசந்தனுக்குக் காரணமற்ற ஒரு விதிர்ப்பு ஏற்பட்டது. மனம் படபடத்து வியர்வை முத்துக்கள் அரும்பி விட்டன. ஓடி வந்த காக்கி உடையணிந்த ஆஸ்பத்திரிச் சிப்பந்தி, ''ஸார்.... ஸார்...! உங்கள் அம்மா மயக்கமாகி விழுந்துட்டாங்க....'' என்றான்.

கண்களில் பூச்சியாடின. எதிரே விரிந்து பரந்து தெரிந்த ஸானடோரியமே தட்டாமாலை சுற்றுவதுபோல் இருந்தது. வசந்தன் நடந்தானா, தடுமாறி ஓடினானா, விழுந்து எழுந்தானா ஒன்றும் புரியவில்லை. வேஷ்டி தடுக்கி விட்டது. ஒரு செருப்பு காலைவிட்டே கழன்று ஓடியது. அவன் பரக்கப் பரக்க ஓடி வந்து அன்னையருகே நின்றான். கட்டிலின் கீழ் கிடந்த இரத்த வெள்ளத்தில் அவனது வேஷ்டி நுனி நனைந்து புரண்டது. மயங்கிக் கிடந்த செல்லம்மாவின் உருவை அசைத்தான் அவன். 'குபீ'ரென மூளை தாக்குண்டு சிதறும் அதிர்ச்சி ஏற்பட்டது.

''அம்மா !'' சன்னமான அழைப்புக்குப் பதில் ஏதும் வரவில்லை.

''அம்....மா !'' அடுத்த அலறல் பிரும்மாண்டமான இடியைப் போல்



இனிக்கும் நினைவுகள்

கோமகள்

அந்தப் பிராந்தியத்தையே கிடுகிடுக்க வைத்தது. சகிக்க முடியாத இம்சையில் புரளும் குரலைப் போலவே அவன் உடலும் பதறித் துடித்தது. கண்கள் குளமாகி மிதந்தன. இதுவரை மனத்துள் பதுங்கிக் கிடந்த அத்தனை ஆவேசங்களும் நடுங்கி, அடங்கி, முடங்கி விட்டன. அவனது எதிர்ப்பும், உதாசீனமும் அவன் அன்னையை அவனிடமிருந்து பிரித்து விட்டனவா ? ஆசையாய், பவித்திரமாய் நெஞ்சில் போற்றிய அவ்வுரு அழிந்து விட்டதா? இரு கரங்களுக்குள்ளும் முகத்தைப்பதித்துக் கொண்டு வசந்தன் விம்மினன்.

யாரோ பரிவாக அவன் முகத்தை மூடியிருந்த கரங்களை நீக்கினர்கள். சிவந்து குழம்பிய கண்களோடு வசந்தன் எதிரே நோக்கினன். நடப்பதெல்லாம் உண்மைதான், மெய்தான்! எதிரே மலை போன்ற துணையாக, மீனுட்சிசுந்தரம் நின்றார். வயதிலும், ஆற்றலிலும், அறிவிலும் அநுபவப்பட்டு



நிதானப்பட்ட அவரது மௌனமான ஆறுதலே அவனது துயரை ஆற்றுவது போலிருந்தது. வாய் ஆறுதலல்ல அது. மன அந்தரங்கமான அறுதல் ! பாசத்தின் ஆதரவு கழன்று தகித்த நேரத்தில், அரவணைக்க வந்த இங்கிதமான, இதமான ஆதரவு. ஆனல் மரணத்துக்கு முன் இதெல்லாம் என்ன ஆறுதல்? எத்தனை விநாடி சமாளிப்புக்கு அவை இதம் அளித்து விடக்கூடும்?

'' வசந்தன்!'' மீனுட்சி சுந்தரம் தொடர்ந்தார் : '' நடந்து விட்ட ஒன்றை மாற்றிவிட முடியாது. அடுத்து நடக்க வேண்டியதை யோசிக்க வேண்டாமா? ஆஸ்பத்திரிச் சிப்பந்திகள் உங்களுக்காகத்தான் நிற்கிறர்கள். அவர்கள் கடமையைச் செய்ய வேண்டாமா?''

வசந்தன் புயலாக நடுங்கினன். ''எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திவாகரனுக்குப் போன் பண்ணினல் டாக்சி கொண்டு வருவான். அவன் சீக்கிரமாக வரவேண்டுமே, கிடங்குக்கு அனுப்புமுன்.''

மீனுட்சிசுந்தரத்தின் கைகள் அவன் தோள்களை ஆதரவாகத் தடவின. ''நானிருக்கிறேன், வசந்த்...! இதோ நான் வந்த கார் உள்ளது. இதில் நீங்கள் புறப்படலாம். நான் இங்கிருந்து டாக்ஸியில் வீட்டுக்குப் போய் வேறு காரில் உங்களைப் பின்தொடர்ந்து வந்து சேர்ந்து கொள்கிறேன்...''

மேற்கொண்டு ஆக வேண்டிய சகல காரியத்தையும் மீனுட்சிசுந்தரம் கவனித்தார்.

வெறுமையாகி விட்ட குடியிருந்த கோயிலைச் சுமந்த காரில், வெறும் பதுமையாக அமர்ந்து கிடந்த வசந்தன் மீனுட்சிசுந்தரத்தைப் பார்த்துத் தலையசைத்தான். மீனுட்சிசுந்தரத்தின் கார் சென்னை நகரை விட்டுத் தஞ்சை ஜில்லாவின் எங்கோ ஒரு மூலையிலிருந்த கிராமத்துக்குப் புறப்பட்டது.

அன்னையின் இறுதிக் கடன்களைச் செய்யும்போது மீனுட்சிசுந்தரம் குடும்பத்தோடு வந்து உதவியதையும், மற்றவர்களின் துயரத்தைத் தேற்றியதையும் வசந்தன் வேண்டுமானல் சாதாரணமாகக் கருதித் தள்ளிவிடலாம். ஆனல் அவனது அப்பா சீதாபதி, தங்கை கீதா, அவள் கணவன் யாவருமே மீனுட்சிசுந்தரத்தின் கோரிக்கைக்குச் சலபத்தில் தலை சாய்த்து விட்டனர். காலத்தாற் செய்த உதவி ஞாலத்தினும் பெரிதென்றாலும், அவன் வாழ்க்கையையே அதற்குப் பரிசாகக் கேட்பது போலிருந்தது. ஆனல் அந்தந்தச் சமயத்துக்கு ஓடி வந்து மீனுட்சிசுந்தரம் தரும் உதவியை அவனல் மறுக்க முடிந்ததா? அதையெல்லாம் உரிமையாக ஏற்றுவிட்டு இப்போது மட்டும் பராமுகமாக இருப்பதா? அவன் வாழ்க்கையிலேயே அவர் நடுவில் வந்து வலியப் புகுந்து பெருந்துணையாக அல்லவா ஆகிவிட்டார்!

சென்னை திரும்பியபின் எத்தனையோ நண்பர்கள் அவனைத் துக்கம் கேட்டனர்.

காலைப் புத்துணர்ச்சியை
மாலை வரை
நீடிக்கச்
செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

எத்தனையோ தெரிந்த 'பாஸ்'கள்கூட அவனை விசாரித்தார்கள். ஏன், சிலியா வின் தோழி பாரதிகூடக் கொஞ்ச நேரம் அவனது மனத்துக்கு இதமாக ஆறுதல் புகன்றாள். சிலியா மறந்தும் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. அது அவன் மனத்தை உறுத்தியது. எத்தனை பேர் எத்தனை கேட்டு என்ன? அத்தனையும் ஒரு சிலியாவின் சொல்லுக்கு இணையா குமா? அதை அவள் உணர்ந்திருக்க மாட்டாளா? இருந்தும் அது கிடைக்க வில்லையே, ஏன்? வளரும் சிந்தனைக்கு விருந்தாக நின்ற நாட்களை எண்ணி நெஞ்சின் கடைசித் துளி ஆசையை வைத்துக் கொண்டு அவன் காத்திருந் தான். அவன் மனம் சொரியும் கற் பனைகள் அந்தி சரியும்போது அவிந்து விடும். இதைச் சாக்கிட்டாவது அவள் என்னுடன் பேச வரக் கூடாதா என்ற ரகசிய மனஸ்தாபம்தான் மீதியாகும். ஓ. பி.யில் காண நேரும்போதும், அவ னது பார்வையின் பரிச்சயத்தையே உண ராதது போல் அவள் விலகிக்கொள் வாள். அவனது அன்பின் நெருக்கத் தையே உணராதது போல் குனிந்து விடுவாள். இந்தக் குழப்பத்தில் கடந்து விட்ட பொய்கள் மெய்யாகவும், நடந்து கொண்டு உள்ள மெய்கள் பொய்யாகவும் தோன்றி வாட்டும். அது தாள முடியாத வதைப்பாக இருக் கும். சோர்வோடு பின்வாங்கி விட்ட அவளது உணர்வு வீழ்ச்சியா, அல்லது வீழ்ச்சி என்று ஏற்காத வீம்பா?

தான் கூடுமிடமெல்லாம் நகை உதிர வைக்கும் வசந்தன் தன்னுள் முடங்கிப் போனான்.

ஆயினும், 'அன்னை அன்னை' என்று உயிருக்குயிராய்த் தாயைப் பாதுகாத்து வந்தானே வசந்தன்! அவளை இழந்த தால் அவன் நைந்து வாடியதென் னவோ உண்மை. ஆனால் கூடவே உயிரை விட்டுவிடவில்லையே! இப்படி எண்ணியதுமே, ஊற்றுக் கண்களில் நீர் குபுகுபுவெனக் கும்மியிடுவதுபோல் அவன் கண்கள் படபடத்துப் பனித் தன. ஆனாலும் இனி என்ன செய்வது என்று நிதானமாக, தெளிவாக அவனால் நினைத்துப் பார்க்க முடிந்தது. அவன் நினைத்திருந்த அளவு அந்த ஆறாத துய ரம் அவனை ஆட்டிப் படைத்து முறித்து விடவில்லை. நாட்களின் போக்கில் மன மறைவில் ஆறுதலாய்ப் படியும் ஒரு சீற்று அவனுக்கும் புரிந்தது. நிழல் கவிந்த பாவனை, இருள் சூழ்ந்த வேதனை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கலங் கித் தெளிந்தது. இப்படி ஒரு மனத் தெளிவுக்குக் கடற்கரை அவனுக்குப் பெரிதும் உதவியது.

அன்றும் அப்படித்தான். கடற்கரை யிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தவனை ஒட்டி வந்து நின்றது ஒரு கார். அதை வசந்தன் சட்டென இனம் புரிந்து கொண் டான். மீனாட்சிசுந்தரத்தின் கார் அது. காருக்குள் யார் முகம் அது? வசந்தன் இரண்டடி நகர்ந்து காரருகே குனிந் தான். முன் சீட்டில் டிரைவரும் பின் சீட்டில் குழலியும் உட்கார்ந்திருந் தனர். வசந்தனால் சட்டென்று எது வுமே பேச முடியவில்லை. குழலி எதற் காகக் காரை நிறுத்தினாள்? வசந்தனுக் குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது.

''காரில் ஏறிக் கொள்ளுங்கள். உங் களை ஹாஸ்டலில் 'டிராப்' பண்ணி விட்டுப் போகிறோம்...'' குழலியின் குரலைத் தொடர்ந்து பின் சீட்டின் கதவு திறக்கப்பட்டது. அவள் பரிவை மறுக் கும் தைரியம் இல்லாமல் வசந்தன் உள்ளே அமர்ந்து கொண்டான்.

கார் திரும்பி டவுனை நோக்கிப் பறந் தது. எதிர்பாராத சந்திப்பின் காரண மாக அவனால் எதுவும் பேசமுடியவில்லை. இருந்தாலும் ''நீங்கள் எங்கே இப்படி?'' என்று கேட்டு வைத்தான்.

''கான்வொகேஷனுக்கு வந்திருந் தேன்.''

''ஓ! கன்கிராஜுலேஷன்ஸ்!''

''தேங்க்ஸ்!'' என்ற மெல்லிய ஒலி கேட்டது.


குழலி ஒன்றும் அதிகமாகப் பேசி விடவில்லை. அவனும் அதிகம் எதுவும் கேட்கவில்லை. பி. ஏ. பட்டம் பெற்ற குதூகலம் அவளிடம் அளவாகவே, அடக்கமாகவே படிந்திருந்தது. சட் டென அவளைப் பார்க்கவேண்டும்போல் ஒருணர்வு அவனைத் தூண்டியது. தன் போக்கில் முகத்தை இலேசாகத் திருப் பியபோது, அந்த மங்கிய இருளில், சாலையூடே ஓடிவந்த மின்விளக்குக் கம் பங்கள் சமீபிக்கும்போது உண்டாகும் சிறு ஒளியில் அவள் ஒரு சிறுமியைப் போலத் தோன்றினாள். அவள் அப்படி அடக்கமாக அமர்ந்திருப்பதே பொருத்தமில்லாதது போலிருந்தது. டிராபிக் போலீசுக்காக நாற்சந்தி ஒன் றில் நிற்க நேர்ந்தபோது சாலையின் நடுவிலிருந்த நீல ஒளியில் குழலியின் முகம் மிக நன்றாகத் தெரிந்தது. வசந் தனுக்குச் சட்டென்று நினைவு வந்துவிட் டது. ''நீங்கள்... ஒரு முறை பூங்கா ரயில் நிலையத்தில் 'ஓடும் மீன் வண்டி' யில் ஏற வந்தீர்களில்லை?....'' என்று கேட்டான்.

அவள் தயக்கத்தோடு திரும்பினாள். தலைமட்டும் அசைந்தது.

''பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்தீர்களல்லவா?'' தன்னை அறியாது வேடிக்கையாக வசந்தன் வினவினான்.

அவள் முகத்தில் சிரிப்பின்ரேகை தெரிந்தது. அதற்கு அவள் பதில் கூறவில்லை என்றாலும், அவனது மொழிகள் அவளுக்கு மலர்ச்சியைக் கொடுத்ததென்னவோ உண்மைதான்.

அதற்கு மேல் வசந்தனால் பேச முடியவில்லை. இப்போதே அதிகம் பேசி விட்டோமோ என்று வருந்தினான். ஹாஸ்டல் அருகே கார் நின்றபோது கதவைத் திறந்து கொண்டு இறங்கியவாறே, ''ரொம்ப நன்றி'' என்று கைகூப்பினான்.



வக்கீல்: எழுதப் படிக்கத் தெரியாது என்கிறீர்கள். ஆனால் புத்திசாலித்தனமாகப் பதில் சொல்கிறீரே?

வாதி: இன்னும் நல்லாப் பதில் சொல்லுவேனுங்க, கேட்கிறபடி கேட்டால்!

வசந்தன் ஹாஸ்டலுக்குள் நுழையத் திரும்பியபோது எதிர்ச் சாரியிலிருந்த பெண்கள் விடுதியின் விளக்கு ஒளி தெரிந்தது. சட்டெனக் குற்றம் புரிந்த மனப்பான்மை அவனிடம் கவிந்தது. சீலியா குழலியின் காரில் அவன் வந்ததைக் கண்டால் என்ன நினைப்பாள்? சீலியாவுக்குத் துரோகம் புரிந்து விட்டது போல் படபடப்பு ஏற்பட்டது. 'உம்! அவள்தான் விட்டுக் கொடுத்துவிட்டாளே! என்ன நினைக்கப் போகிறாள்?'

''என்னடா பரமஹம்ஸா! யார் காரில் வந்து இறங்கினாய்? உன்னோடிருந்தது யார்? இருளில் புலப்படவில்லை. அப்புறம் இப்படிப் பெண்கள் விடுதிப் பக்கம் பார்த்துக் கொண்டு ஏக்கமாக நிற்கிறாயே, என்னடா சமாசாரம்?'' என்றவாறே தோள்களை அழுத்தி அணைக்க முயன்றான் அரட்டைச் சங்கரன். அவனுக்கு எந்த விதமான பதிலும் கூறாமல் தன் அறைக்கு வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அடைபட்டிருந்த எண்ணங்கள் எல்லாம் பிரளயமாகச் சீறி வந்தன. ஒரு புறம் சீலியாவின் நினைவு முகம், மறு புறம் அன்னையின் அன்பு முகம். அவன் அம்மா தன் அந்திம நேரத்தில் குழலியைப் பற்றிப் பேசியதெல்லாம் நினைவுக்கு வந்தது. அவளுடைய மரணம் மட்டும் நிகழவில்லை என்றால் ஒருகால், அவன் பொருட்டு, அவன் உணர்ச்சிகளை ஏந்தி ஆதரவு காட்டும் பொருட்டு, அவன் வழிக்கே அன்னை சம்மதம் தெரிவித்திருக்கக் கூடும். இப்போது கடைசி வாக்காகவும், கடைசி ஆசையாகவும் அவள் கொண்டிருந்த அபிலாஷைகளை நிறைவேற்றுவது அவன் கடமையாகி விட்டது. நினைக்க நினைக்க நெஞ்சின் நடுவே ஒரு கணம் கடினப்பட்ட வைராக்கியம் இளகி மிருதுவாகி விட்டதுபோலத் தோன்றியது. இனி அதை மாற்றி எந்த வடிவத்திலும் திருத்தியமைக்கலாம் என்றும் தோன்றியது.

விடியற்காலைப் போதின் குளிர்ச்சி மிதப்பில் கண் விழித்த போது வசந்தனின் தலை கனத்துக் கிடந்தது. வசந்தன் பிரயாசையோடு எழுந்தான். கண்கள் வீங்கி, முகம் பளபளப்பில் மின்னியது. உடம்பு இலேசாகச் சுடுவதுபோலுமிருந்தது. போர்வைக்குள் உடம்பு தூக்கிப் போட்டவாறே நடுங்கியது. அவன் அறைத் தோழர்கள் இருவரும் அவனை உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். நல்ல ஜுர வேகத்தில் வசந்தன் தன்னிலை உணராது கிடந்தான். அவனும் சீலியாவும் போஸ்ட் மாறி அடுத்ததாக வந்திருக்க வேண்டிய வார்டு அது. அதே நாளும் அது. வசந்தனோ ஜுரத்துக்குச் சிகிச்சை பெறும் நோயாளியாக அவ்விடம் வந்திருந்தான். சீலியாவோ பதவிக் கடமையில் அவ்விடம் வந்திருந்தாள்.

கையில் சுருக்கெனத் தைத்த நோவை அடுத்துச் சூடாக உள்ளே புகும் இஞ்செக்ஷன் மருந்து. உள் மயக்கத்தைத் தெளிவித்து. வெளி மயக்கத்தை ஊட்டும் விழிப் பார்வை. வசந்தன் மெல்லக் கண் திறந்தான். விரசமற்ற, தூய்மையான அந்த முகம் சீலியாவுக்குச் சொந்தமில்லையா? இதோ பஞ்சினால் ஊசி போட்ட இடத்தை 'ஸ்பிரிட்' கொண்டு அழுந்தத் தேய்ப்பது அவள் கரங்கள்தானே? அவளது கருணைக்காக ஏங்கும் அவனுக்காக, அவள் கடினப்படுத்திக் கொண்ட மன மூடி கழன்று கொண்டதா? ஆ!... அவள் முகத்தில்தான் எத்தனை கருணை! எத்தனை அருள்!... வசந்தன் விழித்துக்



மங்கையருக்கு
மகிழ்ச்சிகரமான வார்த்தை

பாம்பே டையிங் இப்பொழுது புடவைகளையும் வழங்குகிறார்கள்!

பூப் போல் மென்மையான புதிய

ஸ்விஸ் வாயில் புடவைகளையும்,

நேர்த்தியாக நெய்யப்பட்ட வாட்ரீன் ('டெரீன்'/காட்டன்) புடவைகளையும் கடையில் சென்று காணுங்கள்!



எங்களுடைய ஸ்விஸ் வாயில் புடவை மிகவும் மென்மையானது, கண்கவர் மெருகுடன் கூடியது. அது உடல் மீது பொருத்தமாகப் படிவதுடன் சுருக்கங்கள் விழுவதைத் தடுக்கும் குணமும் பெற்றுள்ளது. எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் அது நாள் முழுவதும் புதுமையுடன் இருக்கும். மேலும், அது 'டெபிலேஸ்' செய்யப்பட்டது.

☐ வாட்ரீன் ('டெரீன்'/காட்டன்) புடவைக்கு இஸ்திரி அவசியமில்லை. அதைத் துவைத்து கட்டிக் கொள்ளலாம். அது எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற புடவை. காரியாலயத்திற்குப் போகும்பொழுதும் அல்லது விருந்துக்கோ விசேஷங்களுக்கோ போகும் பொழுதும் கட்டிக் கொள்ளச் சிறந்தது. எவ்வளவு கவனக் குறைவாக உபயோகித்தாலும் அதற்கு சுருக்கங்கள் விழாது.

☐ இந்தப் புடவைகள் கவர்ச்சிகரமான டிசைன்கள் கொண்டவை. அழகான நிறங்களில் ஒவ்வொரு மாதமும் பன்னிரண்டு புது டிசைன்கள் வெளி வருகின்றன. எப்பொழுதும் பாம்பே டையிங்கின் புத்தம் புது புடவை அணிந்து கவர்ச்சியுடன் திகழுங்கள்!

காற்றைப் போல் லேசான சுருக்கங்கள் விழாத இந்தப் புடவைகளை இன்றே வாங்குங்கள்!

பாம்பே டையிங்

RD-7481

கொண்டு தன்னைப் பார்க்கிறான் என்பதை உணராததால் அவள் போர்த்திக் கொண்டிருந்த போலிக் கடுமைத் திரையை இப்போது காணோம். முன்னைக் காட்டிலும் கொஞ்சம் இளைத்து விட்டாள். முகத்தில் உண்மையான சோக பாவம். சீலியா 'சிரிஞ்சை'க் கைமாற்றிவிட்டு வசந்தனை ஒரு முறை திரும்பி நோக்கினாள். அவன் பட்டெனக் கண்களை மூடிக் கொண்டான். மறுபடியும் அவன் இமைகளை மெதுவாக விரித்தபோது சீலியாவின் முதுகுப்புறம் தெரிந்தது. கழுத்து மணியின் மணிக் குஞ்சலம் 'ப்ளௌஸி'ன் கீழ்த் தெரிந்த முதுகைத் தழுவி வருடிக் கொண்டிருக்க, அவள் சிற்றடிகள் முன்னோக்கி நடந்தன. அறை வாசற்படியின் பச்சைத் திரைகள் அவள் உருவை ஏந்தி விழுங்கி விட்டது போல் உருவம் மறைந்து விட்டது. தட்டென அந்த அறையே சூனியம் படர்ந்தாற்போல் ஆகிவிட்டது.

சாளரத்தின் கண்ணாடியில் கொடுமையான சூரிய கிரணங்கள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. கண்ணுக்கு உயரே மின் விசிறிப்படபடத்துச் சுழன்று கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையே ஸ்தம்பித்து வெறித்தாற்போல் ஒரே அமைதி. கையை அசைக்க முடியாமல் வலி எடுத்தது வசந்தனுக்கு. நெற்றியில் பொறி பறக்கும் சூடு. நாவறட்சி வேறு. நொந்த உள்ளத்தில் தாயின் நினைவு சுடர் விட்டது. இரு மெல்லிய குளிர்ச்சியான கரங்கள் அவன் தலையைப் பிடிப்பது போலிருந்தது. விழித்த பார்வை தலைமாட்டுக்குப் பின்னால் தாவியபோது ஒரு கணம் திகைத்து மீண்டது. அவன் நெற்றி மீது வைக்கப்பட்டிருந்த ஐஸ் பையின் இரு பக்கங்களைப் பற்றிய இரு கரங்களுக்குத்தான் எத்தனை மென்மை? வசந்தன் கண்களை மூடிக் கொண்டான். அந்த இதத்தில் தூக்கமே வந்துவிட்டது. மாலை, கண் விழிப்பு வந்தபோது அவன் வாயில் தர்மாமீட்டரைச் செருகிக் கொண்டிருந்தாள் சீலியா.

"நீங்கள் ...ஏன்... இங்கேயே இன்னும்...?" என்று பேச்சைத் தொடர முடியாமல் நிறுத்தினவன், "வார்டு நர்ஸ் வரவில்லையா?" என்று எப்படியோ தட்டுத் தடுமாறிக் கேட்டு வைத்தான்.

"நானாகத்தான் முன் வந்தேன்" என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

டெம்பரேச்சரைப் பார்த்து விட்டு அவனை நேரடியாகப் பார்க்காமல், "உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள். போய் அனுப்புகிறேன். ஆனால் நீங்கள் அதிகம் பேசக் கூடாது" என்று எச்சரிக்கும் குரலோடு கூறிவிட்டு வெளியேறினாள்.

வசந்தனுக்கு விந்தையாக இருந்தது. யார் வரப் போகிறார்கள்? அவனது நண்பர்களானால் கட்டுப்பாடும் எச்சரிக்கையும் தேவையில்லையே! வாயிலோரம் கண்கள் நாடின. ஆஜானுபாகுவான உருவில் மீனாட்சிசுந்தரம் வந்தார். அவரைத் தொடர்ந்து குழலி! வசந்தன் மெல்லச் சிரிக்க முயன்றான். சீலியா படுக்கையின் இரு புறங்களிலும் இரும்பு ஸ்டூல்களைத் தள்ளி அவர்கள் இருவரையும் உட்காரச் சொன்னாள். மீனாட்சிசுந்தரத்தின் கையிலிருந்த பிஸ்கெட்டைப் பார்த்ததும், "ஆ! அது கொடுக்கக் கூடாது பெரியப்பா! வேண்டுமானால் ஆரஞ்சு ஜூஸ் தரலாம்" என்றாள்.



"கடைசி முறையா கேக்கறேன். திருடிய நகைகளை எங்கே ஒளிச்சு வச்சிருக்கே!"

"அப்படியா? நான் போய் வாங்கி வந்துவிடுகிறேன். குழலி இங்கேயே இரம்மா" என்று மீனாட்சிசுந்தரம் எழுந்தார்.

குழலி வசந்தனைப் பார்த்துவிட்டு, சீலியாவை நோக்கினாள். சீலியா அவுன்ஸ் கிளாஸில் இருந்த மருந்தை எடுத்து வசந்தனின் வாயில் ஊற்றினாள். பிறகு குழலியிடம் கூறுவதுபோல், "டைபாய்ட் இல்லை. வெறும் ஃப்ளூதான். இரண்டு மூன்று தினங்களில் சரியாகிவிடும்" என்றாள். அதைக் கூறிய சுருக்கிலேயே அந்த இடத்தை விட்டும் அகன்றாள்.

வசந்தன் நெஞ்சைப் பொருமி வந்த பெருமூச்சை அடக்கப் பெரும் பாடு பட்டான். அறுகம் புல்லைப் போலவே வேரோடிக் கிடந்த நினைவு வேர்கள். பழைய கற்பனை முடிச்சுக்களை அசைவித்தன. அந்தச் சீலியாவுக்கும் இந்தச்



'ஆபீஸிலிருந்து வருகிறபோது பூ வாங்கிடு வரச் சொன்னியே பிரேமா! இந்தா வாழைப் பூ! ராத்திரி சாப்பாட்டுக்கு உசிலி பண்ணிடு.''

சீலியாவுக்கும்தான் எத்தனை வித்தியாசம்! எத்தனை வேற்றுமை! உள்ளத்தில் ஏதோ பிசிறு தட்டியது. இதயத்தில் ஒரு மெதுவான உரசல். அதி முக்கியமல்லாத ஒன்றுக்கா அவன் ஏங்கிப் போனான்? அவனுக்கு அநுசரணையான தவிப்பில்லாதவளிடம் கொண்ட ஈடுபாட்டையா அவனால் உதறமுடியவில்லை? ஏன்? அவன் மட்டும் என்னவாம்? எல்லாவற்றையும் வெறுத்துவிட்டானா, என்ன? அவனுக்குத் தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. அவளை அடையக் கண்ட கனவெல்லாம் சிதைந்தாலும் அந்தக் கொதிப்பின் தகிப்பில் இதயம் ஒன்றும் உருகி வடிந்து விடவில்லையே... இதோ அவன் அருகே குழலி வந்து உட்கார்ந்திருக்கிறாள். அதை ஏற்க முடியவில்லையென்றாலும் மறுக்க முடியவில்லை. இது எதைக் கொண்டு, எந்த அடிப்படை ரீதியில் வளர்கிறது என்பதும் புரிந்தேயிருக்கிறது. ஆயினும் மறுக்க முடியவில்லை. அதற்கு அவன் அன்னை நினைவும் ஒரு காரணமாகிக் காவல் நிற்கிறது. 'உம்!' என்று மனம் அலுத்த போது சட்டென்று ஓர் எண்ணம் மின்னியது. தனக்கு உடல்நிலை சரியில்லை என்று மீனாட்சிசுந்தரத்திடம் தெரிவித்தவர் யார்? அவரால் தாமாகத் தெரிந்து கொண்டு எப்படி வர முடிந்தது? அவன் குழலிக்காகக் கண் திறந்தான். இத்தனை நேரமும் வசந்தன் கண் மூடியே இருந்ததாலோ என்னவோ, குழலி ஜன்னலோரம் சென்று நின்று கொண்டிருந்தாள். அவளை எப்படி விளிப்பது? மனத்தின் கேள்வி ஆவலாகிக் கொண்டிருந்தது. எனவே வசந்தன் துணிந்து, ''குழலி!'' என்று குரல் கொடுத்தான்.

தோள்களில் புரண்ட கூந்தல் குலுங்க, மகிழ்ச்சி அதிரும் முகத்தோடு குழலி திரும்பிய கணமே, அதே அழைப்பைத் தான் ஏந்தினாற்போல் படபடப்போடு சீலியா அவனருகே நின்றாள். வசந்தன் திடுக்கிட்டான். அவனால் சீலியாவை நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது. அவனது விளிப்பை அவள் கேட்டுவிட்டது கண்களில் தெரிந்தது. அசையா மௌனத்தில் மோவாயின் நளினம் இறுகிவிட்டது தெரிந்தது. ஒரே கணம்தான். குனிந்திருந்த நெற்றியில் அவன் பார்வை ஓடிக் கூந்தலை நாடியது. நெற்றியை நேராகப் பிளந்தது போன்ற நீண்ட வெண்மையான வகிட்டுக் கோடு. வித்தாகக் கிடந்த அவனது ஆசையை ஊறவிட்டு முளைக்க வைத்த மழையானவள் இதோ ஒன்றும் உணராதவள் போல் போலித் திரையிட்டுக் கொண்டு நிற்கிறாள். புலர்ந்ததும், இருள் மடமை ஓடுவது போல் இப்படி அவள் உண்மை சொரூபத்தை அவன் கண்டுகொள்ளும் கணங்களிலெல்லாம் அவள் சட்டெனத் தன்னையே ஒடுக்கிக் கொள்ளுகிறாள். கவிதையாக உள்ளே ஊறும் அன்பை அணைத்து விட்ட ஞானியாகப் பாசாங்கு செய்கிறாள். இப்போது அவள் முகத்தில் பரபரப்பில்லை, வேதனை இல்லை. ஆயிரம் கோட்டைகளைக் கட்டி நசுக்க விட்ட பரிதாபமுமில்லை. இந்தச் சாகசமில்லாத சௌந்தரியத்துக்குத்தான் அவன் அடிமையாகி யிருந்தானா? அந்த இருவருக்குள்ளும் உண்டான பரவசம் மிஞ்சும் சடங்கையில் இப்படி ஒரு வெடிப்பா?

''இந்த மாத்திரையைச் சாப்பிடுங்கள்.'' சீலியா இதுவரை நின்று ஸ்தம்பித்த மாதிரியே பேசவில்லை. அப்போதே உள்ளே வந்தது போன்ற உடனடியாகத் தொடர்ந்த புதிய பேச்சாக இருந்தது.

வசந்தனின் வாயில் மாத்திரை நளினமாக விழுந்தது. விழுங்க நீரும் பொழிந்தது. அப்புறம் சீலியா வெளியேறிவிட்டாள். குழலி அவன் பக்கத்தில் வந்து அடக்க ஒடுக்கமாக அமர்ந்தாள். அவனது இரட்டைப் பின்னலுக்கும் அந்த அளவு கடந்த அடக்கத்துக்கும் என்ன சம்பந்தம்?

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உனக்கு என்றே சொல்லலாமே?''

அடேயப்பா! குழலிக்கு — இந்தச் சிறுமிக்கு இத்தனை சாமர்த்தியமா?... உரிமை கொடுப்பதாக எண்ணி உரிமையை எடுத்துக் கொள்கிறாளே! அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''நான் உன்னையும், உன் அப்பாவையும் சேர்த்து உங்களை என்றேன்...''

அவள் வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள்.

''நான் கேட்டதற்குப் பதில் கூறவில்லையே?''

''ஓ! சீலியாதான் அப்பாவுக்குப் போன் பண்ணினாள்.''

'சீலியா போன் பண்ணினாளா?' வசந்தன் யோசனையோடு தூரப் பார்த்தான். ஏன் அவள் மீனாட்சிசுந்தரத்துக்கு போன் பண்ண வேண்டும்? அவள் அப்படி முடிவு கட்டிவிட்டாளா? இவள் யார் இதை முடிவு கட்ட? எதற்காக இவள் இப்படியெல்லாம் செய்கிறாள்? எல்லைகள் அழிந்து, ஒன்றெனக் கண்ட பாவம் பிரமையாகி விட்டதா? மறுபடியும் இதோ இருவரையும் பிரிக்கும் எல்லைக் கோடு பனிச்சென்று குழலியின் ரூபத்தில் தெரிகிறதா? 'நீ வேறு நான் வேறுதானா?' என்று மனம் முணுமுணுக்கிறது. இப்போது மறைக்க முடியாத அப்பட்டமான பெருமூச்சு வெளிவந்தது. குழலி ஏமாற்றமான ஏக்கத்தோடு அவனைப் பார்த்தான். அவன் கண் மூடிக் கிடந்தான்.

இதமான தட்டல் முதுகை வருடியது. மீனாட்சிசுந்தரம் பரிவு பொங்க அவனைப் பார்த்தார். ''வசந்த்! புறப்படுங்கள். டாக்டரிடம் 'பர்மிஷன்' வாங்கிவிட்டேன். வீட்டுக்கே போய் விடலாம். குடும்ப டாக்டர் வந்து பார்த்துக் கொள்வார்.''

அவன் திடுக்கிட்டான். சீலியா அவன் அருகில் இருந்து பணி புரியும் சூழலிலிருந்து விடுபடுவதா? ''வேண்டாம். இது ஸ்பெஷல் வார்டுதானே? எல்லாம் சௌகரியமாகத்தான் இருக்கிறது.... வெறும் ஃப்ளுதானே...?'' என்றெல்லாம் வசந்தன் மறுப்பதை அவர் செவிமடுக்கவில்லை.

அவர் புறப்பட ஆயத்தங்கள் செய்தார். சீலியா உள்ளே வந்தபோது செய்தி தெரிந்து திடுக்கிட்டாள். ஊமை இடியாக அது அவளைத் தாக்கி விட்டது. ''நல்லதுதான் பெரியப்பா!'' என்று ஒப்புக்கு அவள் சொல்லி வைத்தாள். அந்தச் சொற்களே வசந்தனின் இதயத்தைக் கனக்க வைத்தது. வசந்தனைப் படுக்கையிலிருந்து காருக்கு அழைத்துப் போகச் சீலியா உதவ முன் வந்தாள். மீனாட்சிசுந்தரம் அதை மறுத்துவிட்டு, அவன் தோள்களைப் பற்றிக் கீழே அழைத்து வந்தார். காரில் அப்போதே வசந்தனுக்காக வாங்கிய 'ஏர் பில்லோ'க்கள் அவனை அணைத்தன. மீனாட்சிசுந்தரமும், குழலியும் இரு பக்கங்களிலும் அமர்ந்து கொண்டனர். வசந்தன் சீலியாவுக்காக வெளியே நோக்கினான்.

''வருகிறேன், அம்மா!'' என்று சீலியாவிடம் விடை பெற்றார் மீனாட்சிசுந்தரம்.

''வரட்டுமா?'' என்ற பாவனையில் குழலி தலையசைத்துக் கேட்டாள். அவளுக்கு வெற்றிப் பெருமிதம்!

இருவருக்குமாகத் தலையசைத்த பேதை சீலியா வசந்தனை உற்று நோக்கினாள். ஒருசில விநாடிகள் நேர் பார்வைகள் நிலைத்துப் பிரதிபலித்தன. முத்துக் கண்ணீர் ஒருவரையொருவருக்கு மனப்பூர்வமாகக் காட்டிக் கொடுத்தது. பல நாட்களுக்குப் பின் தைரியமான பார்வையின் சந்திப்பு அது. வசந்தன் கேட்காமலேயே அவளிடம் பெற்றுக் கொண்ட விடை அது. சீலியா உணராமலேயே தந்த விடை அது. காரின் வேகம் கால வேகமாக அவர்களைப் பிரித்தோடியது. (தொடரும்)



''நீ பூசிண்டிருக்கிற ஸெண்ட் எந்தக் கடையிலே விக்கறதுன்னு சொல்லேன்!''



ஷீலாவைக் காணோம்!

எஸ். பத்மாவதி

‘‘ஷீலா... ஷீலுக்குட்டி...!’’ சமையல் அறையிலிருந்து அம்மா அருமையாக அழைத்தாள். ஹாலில் உட்கார்ந்திருந்த அப்பா ஆத்திரத்துடன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

‘‘சரி, சரி. உன் ஷீலாவிடம் பிறகு கொஞ்சலாம். முதலில் காப்பியைக் கொண்டுவா’’ என்று கூச்சல் போட்டார்.

அம்மா இந்தக் கூச்சலைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

‘‘ஷீலா...! எங்கேம்மா போயிட்டே...?’’ என்று கூப்பிட்டுக் கொண்டே கையில் வெள்ளி டம்ளருடன் வேகமாகச் சமையல் அறையை விட்டு வெளியே வந்த அம்மாவைப் பார்த்து, அப்பா முகம் மலர, திரும்பவும் நாற்காலியில் அமர்ந்து ஆவலுடன் கையை நீட்டினார் காப்பி டம்ளருக்காக.

‘‘இது உங்களுக்கில்லே. ஷீலாவுக்கு!’’ என்று மொழிந்து கொண்டே அம்மா பரபரப்பாக நடந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு குனிந்து கட்டிலடியில் தேடினாள். பெரிய சரீரம். பெருமூச்சுடன் நிமிர்ந்தாள் அம்மா.

நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பா ஆத்திரத்துடன், ‘‘நன்றாகக் குனிந்து தேடு. இடுப்பாவது இளைக்கட்டும்!’’ என்று கூறிக் கொண்டே கீழே தொங்க விட்டிருந்த தம் கால்களையும் தூக்கி நாற்காலியில் வைத்துக் கொண்டு பற்களை நறநறவென்று கடித்தார்.

தினமும் காலையில் எங்கள் வீட்டில் காட்சி நம்பர் ஒன்று இப்படி ஆரம்பமாகும்.

கட்டிலில் படுத்திருந்த நான் மெதுவாகத் திரும்பிப் படுத்தேன். கால்களில் ஏதோ மெத்தென்று படவே, அலறிப் புடைத்துக் கொண்டு [எழுந்து உட்கார்ந்தேன்.

என் கால் ஓரத்தில் போர்வையின் அடியிலிருந்து ‘‘மியாவ்...’’ என்ற சத்தம் வரவே, ‘‘ஷீலும்மா! இங்கேயா இருக்கே...!’’ என்று கூவிக் கொண்டே அம்மா பால் டம்ளருடன் ஓடி வந்தாள்.

‘‘சீ...சனியன்! என் படுக்கையிலா படுத்திருக்கு!’’ நான் வெறுப்புடன் போர்வையை எடுத்துக் கீழே போட்டேன். கட்டிலில் படுத்தபடியே, சொகுசாக, கால்களை நீட்டிச் சோம்பல் முறித்த ஷீலா



வைத் தூக்கி மேலே எறியப் போனபோது, ''ஹேய்! ஜாக்கிரதை'' என்ற கூவலுடன் அம்மா அதைத் தாங்கிப்பிடித்துக் கொண்டார்.

ஷீலா மேலே விழுந்து கதறுவதை வேடிக்கை பார்க்க ஆவலுடன் காத்திருந்த அப்பாவின் முகத்தில் இப்பொழுது ஏமாற்றம் ஜொலித்தது.

''கர்மம், கர்மம்! கையிலே தாங்கிக்கோ'' என்று கூறி அப்பா தலையில் அடித்துக் கொண்டார்.

''ஷீலாக் கண்ணு! ராத்திரி நன்றாய்த் தூங்கினாயா? ...பசி. பாவம்! வா, வா! உனக்குத்தான் பால்'' என்று அம்மா ஏதேதோ கொஞ்சிப் பேசிக் கொண்டே பின் கட்டை நோக்கிப் போக, ஷீலா ''மியாவ்... மியாவ்'' என்று கத்திக் கொண்டே என்னையும் அப்பாவையும் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்துக் கொண்டே அங்கிருந்து மறைந்தது.

''டேய், மணி! இந்த ஷீலாவைத் தொலைத்தால்தான் வீடு உருப்படும்'' என்று அப்பா கத்த, நான் ''ஆமாம்பா'' என்று பின்பாட்டுப் பாடினேன்.

இரண்டு மாதக் குட்டியாக இருந்தபோது ஷீலா எப்படியோ எங்கள் வீட்டுக்குள் வந்து விட்டது. நாங்கள் மூலைக்கு ஒருவராக அதைத் துரத்த, அது மிரண்டு மேலே படுத்து இளைப்பாறிக் கொண்டிருந்த அம்மாவிடம் போய் ஒண்டிக் கொண்டு விட்டது.

அதற்கு முன்னால் பூனைகளைக் கண்டாலே அடியோடு வெறுத்து வந்த அம்மாவுக்கு அன்று அந்தப் பூனையை மிகவும் பிடித்து விட்டது.

''வீட்டில் இவ்வளவு பேர்கள் இருக்கும் போது என்னைத் தேடி வந்து அடைக்கலம் என்று கேட்கிறது'' என்று அது 'மியாவ்' என்று கத்தியதற்கு விளக்கம் கூறிய அம்மா அது மறுமுறை 'மியாவ்' என்று நீட்டி முழங்கியபோது ''பயப்படாதேடிம்மா! நான் உன்னைக் காப்பாத்தறேன்'' என்று உறுதி மொழி கூறிவிட்டாள்.

அன்றிலிருந்து அந்தப் பூனைக்குச் சுக்கிர தசையும் எங்களுக்குச் சனி தசையும் ஆரம்பமாகியது.

நான் பெண்ணாகப் பிறந்திருந்தால் 'ஷீலா' என்று பெயர் வைக்க வேண்டுமென்று எண்ணியிருந்த அம்மாவுக்கு நான் ஆணாகப் பிறந்ததனால் ஏற்பட்ட ஏமாற்றம் இப்போது நீங்கிப் போய் விட்டது.

பூனைக்கு அருமையாக 'ஷீலா' என்று நாமகரணம் இட்டதுமல்லாமல் நாங்களும் அதை அப்படியே அழைக்க வேண்டும் என்று வற்புறுத்தினாள்.

ஷீலாவுக்கு ஸ்பெஷல் பால், படுக்க ஸ்பெஷல் சாட்டின் மெத்தை, சாப்பிட ஸ்பெஷல் எவர்சில்வர் தட்டு—இப்படியாக வீட்டில் ஷீலாவின் ஆதிக்கம் ஓங்கிவிட்டது.

முன்பெல்லாம் மணிக் கணக்காகப் பூஜை அறையில் பாராயணத்தில் மூழ்கிக் கிடந்த அம்மா இப்பொழுது அடிக்கடி எழுந்து வெளியில் வந்து ''ஷீலா பால் சாப்பிட்டதா, பத்து மணிக்கு நெய் விட்டுப் பால் சாதம் போடலாமா?'' என்று அண்ணியிடம் கேட்டு அதை அதிக அக்கறையாகக் கவனிக்க ஆரம்பித்தாள்.

அம்மா ஷீலாவிடம் அதிக அக்கறை காட்டக் காட்ட நாங்கள் அதை அதிகம் அலட்சியம் செய்ய ஆரம்பித்தோம்.

முக்கியமாக அண்ணி ராதாவின் பாடு படுதிண்டாட்டமாகப் போய்விட்டது.

ஷீலா வந்து சேர்ந்ததிலிருந்து அதுவரையில் ஒற்றுமையாக இருந்த மாமியாரும், மாட்டுப் பெண்ணும் கருத்து வேறுபட ஆரம்பித்தனர்.

அம்மா இல்லாத சமயம் பார்த்து அண்ணி ராதா, ''இவ்வளவு நாட்களில்லாமல் எனக்கு ஒரு நல்ல நாத்தனார் வந்து சேர்ந்திருக்கிறாள்'' என்று முணு முணுப்பாள். அதற்கு ஏற்றாற்போல் ஷீலா, அண்ணி பால் விட்டால் சாப்பிடாது.

''என்னடியம்மா, ராதா! பாலைத் தண்ணீர் விடாமல் காய்ச்சினாயோ? ஷீலாவுக்குத் தண்ணீர் கலந்தால் பிடிக்காது!'' என்று அம்மா வேறு சந்தேகக் குரல் எழுப்புவாள்.

அப்பொழுது அண்ணியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

அண்ணா பாவம், அம்மாவையும் சொல்ல முடியாமல் அண்ணியையும் சமாதானப் படுத்த முடியாமல் தன் கோபம் முழுவதையும் ஷீலாவின் மேல் காட்டுவான்.

கிடைத்த சாமானைத் தூக்கி அதன்மேல் வீசுவான் — அம்மா இல்லாதபோதுதான்!

மாடியில் அண்ணாவின் அறையின் ஜன்னல் அருகில் மரக் கிளை படர்ந்திருக்கும். அதில் அணில்கள் குதித்து விளையாடும் காட்சியைப் பார்ப்பதற்கு ஷீலாவுக்கு மிகவும் பிடிக்கும். மத்தியான சாப்பாட்டுக்குப் பிறகு ஷீலா மெதுவாக மாடிக்குப் போய்விடும்.

அந்தச் சமயம் பார்த்து அண்ணி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள அறைக் கதவை இழுத்துச் சாத்திவிடுவாள்.

ஷீலா கதவைப் பிராண்டி உள்ளே போகத் துடிப்பதைப் பார்க்க அவளுக்கு மிகவும் திருப்தியாயிருந்தது.

அது கத்தும் சத்தம் கேட்டு அம்மா ஓடி வந்து பொரிக செய்ய, அண்ணி வேண்டா வெறுப்பாகக் கதவைத் திறப்பாள்.

''பாவம், ஷீலாவுக்குப் பொழுது போக வேண்டாமா? அணில்களை வேடிக்கை பார்க்கட்டுமே!'' என்று அம்மா பரிதாபப்படுவாள்.

அம்மாவுக்கு ஷீலா 'சைவம்' என்பதில் அசையாத நம்பிக்கை!

ஷீலாவும் மத்தியானம் அம்மா தூங்கும் நேரத்தில் தன் ஆவலைப் பூர்த்தி செய்து கொண்டு மற்ற வேளைகளில் 'சுத்த சைவ'மாகவே வேடம் போட்டது.

அம்மாவின் அதிகப் போஷாக்குக் காரணமாக ஷீலா நாளொரு மேனிக்குப் பதிலாக நாள் இரு மேனியாக வளர்ந்து விரைவில் கொழு கொழு என்று தலையணைக்குக் காலும் கையும் வைத்தது போலாகி விட்டது.

அதற்கு அம்மா விசேஷப் படுக்கை வைத்திருந்தாலும், பாதித் தூக்கத்துக்குப் பிறகு என் படுக்கையில் வந்து என் காலடியில் போர்வைக்குள் புகுந்து கொண்டு, காலையில் நான் எழுந்திருக்கும்போது 'மொக மொக'வென்று என் பாதத்தில் பட்டு என்னைத் துள்ளிக் குதிக்க வைத்துப் பார்ப்பதில் ஷீலாவுக்கு வெகு திருப்தி!

அப்பாவுக்கோ 'பெட் காப்பி' நின்றுவிட்டது. எழுந்து உட்கார்ந்து எதிர்பார்த்தாலும்

ஷீலாவுக்குத்தான் முதலில் காய்ச்சிய பால் போகும். அது அவருக்குச் சகிக்க முடியாத விஷயமாக இருந்தது.

வீட்டில் எல்லாப் பாலையும் ஷீலா உருட்டிக் குடித்துவிட்டால் கூட அம்மா, ''பாவம் பசிபோல இருக்கு! ராதா மத்யானம் சரியாகப் பால் விட்டிருக்க மாட்டாள்'' என்று அதற்குப் பரிந்து வருவதுடன், வீட்டுக்கு வரும் எல்லோரிடமும் ஷீலாவின் சமர்த்து, அது தூங்கும் அழகு, உட்காரும் நேர்த்தி, இப்படியாக ஒவ்வொன்றையும் புகழ ஆரம்பித்தாள்.

வீட்டுச் சுவர்களில் எல்லாம் ஷீலாவின் புகைப்படங்கள் பெரிய அளவில் தொங்க ஆரம்பித்தன.

இன்னும் சிறிது நாட்களில் அம்மாவுக்கு ''ஷீலா பைத்தியம் பிடித்துவிடுமோ!'' என்று நாங்கள் பயந்து விட்டோம். அம்மாவின் நலனில் அதிக அக்கறை கொண்ட நாங்கள் அதாவது ஷீலாவின் எதிரிகள்—கூடி ஒரு திட்டம் தயாரித்தோம்.

அதன்படி ஒரு நாள் அம்மா வீட்டில் இல்லாதபோது அப்பா ஷீலாவை நைசாகப் பிடித்து, ஒரு கோணிப் பையில் போட்டுக் கட்டி, அண்ணா காரில் வைக்க, அண்ணியும் நானும் குதூகலத்துடன், 'டாடா!' காட்ட, அண்ணா பெருமிதத்துடன் எங்களைப் பார்த்து ஒரு வீரப் புன்னகை வீசிவிட்டுக் காரைக் கன வேகமாக ஓட்டிச் சென்றான்.

மாலையில் அம்மா வீடு திரும்பியதும், வழக்கம் போல் மியாவ் என்ற சத்தம் தன்னை வரவேற்காததைக் கண்டு திடுக்கிடுவாள். ''எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று கையை விரிப்போம்'' என்று எல்லோரும் சேர்ந்து, கூட்டுச் சதி செய்து அன்று தாராளமாகப் பாலை விட்டுக் காப்பி போட்டுச் சாப்பிட்டுவிட்டுத் திருப்தியுடன் உட்கார்ந்திருந்தோம்.

மாலையில் அம்மா வீடு திரும்பிய போதே உடன் நாலைந்து சிநேகிதிகளை அழைத்து வந்து விட்டாள். அதனால் அவள் ஷீலா காணப்படாததைக் கவனிக்கவில்லை என்று எண்ணி நாங்கள் சிறிது நிம்மதி அடைந்தோம்.

அம்மா வந்த சிறிது நேரத்துக்குப் பிறகு அண்ணா சத்தம் செய்யாமல் காரைக் கொண்டு வந்து உள்ளே நிறுத்திவிட்டு ஷீலாவை வெகு தொலைவில் விட்டு வந்ததாக ரகசியக் குரலில் கூறினான்.

காலி கோணிப் பையைப் பார்த்துவிட்டு நாங்கள் சந்தோஷமாகச் சிரித்தது அம்மாவுக்குக் கேட்டிருக்க நியாயமில்லை. உள்ளே அம்மாவின் சிநேகிதிகள்தான் மூச்சு விடாமல், சள சளவென்று பேசிக் கொண்டிருந்தார்களே!

அப்பா மட்டும் குட்டி போட்ட பூனை போல நிலைகொள்ளாமல் தவித்தார். நாங்கள் மூவரும் எவ்வளவு சமாதானப்படுத்தியும் கேட்காமல், வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டு என்றுமில்லாத திருநாளாக மாலையில் உலவி வரக்கிளம்பினார்.

அண்ணி குஷியாகப் பாடிக்கொண்டு சமைத்துக் கொண்டிருந்தாள். பாவம்! வேண்டாத நாத்தனார் தொலைந்த சந்தோஷம் இருக்காதா?

அண்ணாவும் நானும் குதுகுதுத்த உள்ளத்துடன் ஹாலில் புத்தகங்களைப் புரட்டிப் படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்தோம்.

ஒரு வழியாக அம்மா எட்டு மணிக்கு வந்திருந்த சிநேகிதிகளுக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

அடுத்தது நாங்கள் எதிர்பார்த்தது நடந்து விட்டது!

அவர்கள் படி இறங்கியதும், முதல் காரியமாக அம்மா, ''ஷீலா... ஷீலுக்குட்டி...'' என்று குரல் கொடுத்தாள்.

சமையலறையில் பாடிக் கொண்டிருந்த அண்ணியின் குரல் சட்டென்று நின்றது.

அதைத் தொடர்ந்து நானும் அண்ணாவும் படபடவென்று புத்தகங்களை மூடிவிட்டு, ஒருவரை ஒருவர் பார்த்து ஆடு திருடிய இல்லை—இல்லை; பூனை திருடிய கள்ளர்கள் மாதிரி விழித்தோம்.

'இரவு எட்டு மணி யாகிவிட்டதே. இதற்குள் அம்மாவுக்கு விஷயம் தெரிந்து வீட்டின் நிலைமை சமாளிக்கும்படியாக மாறியிருக்கும்' என்ற தைரியத்தில் வெளியே சென்றிருந்த அப்பா, குஷியாக வீடு திரும்பி உள்ளே நுழைய, அப்போதுதான் அந்தப் பிரச்னை பூதாகாரமாக வெளிக் கிளம்பி யிருக்கிறது என்று அறிந்ததும், திடுக்கிட்டு வாசற்படியிலேயே சிலையாக நின்றுவிட்டார்.

அம்மா பரபரப்பாக, ''ஷீலு... ஷீலுக் குட்டி....'' என்று கூவிக் கொண்டே வாசலிலிருந்து கொல்லை வரை ஒரு நடை போய் வந்தவள், திரும்பவும் குரல் எழுப்பிக்கொண்டு ஹாலில் நுழைந்தபோது அண்ணாவும் நானும் பதறி எழுந்து, ''ஷீலு எங்கே? காணுமா? இதோ பார்க்கிறோம்...'' என்று உளறிக் கொண்டே தலையை மேஜைக்கடியில் நுழைத்துக் கொண்டோம்.

மேஜைத் துணியின் மறைவில் அண்ணா என்னைப் பார்த்து ''எல்லாம் உன் தூண்டு

பறந்து வரும் தொப்பி



ரஷ்யாவில் காஸக்ஸ்தான் என்ற இடத்தில் ஓர் அதிசயக் கிணறு இருக்கிறது. கால நிலையை முன்னதாக அறிவிக்கும் கிணறாக அது கொண்டாடப்படுகிறது. சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டுள்ள அது, மழை பெய்யும்பொழுது காற்றை உள்ளுக்கு இழுத்து வைத்துக் கொண்டு, வெயில் காயும்பொழுது வெளியே விடுகிறது. அப்பொழுது கிணற்றில் ஒரு தொப்பியைப் போட்டால், அது அமிழ்ந்து போகாமல் திரும்பி நம்மிடமே பறந்து வரும்...!

ஆதாரம்: 'ஸ்புட்னிக் ஜூனியர்' தகவல்: கற்பூரம்

தல்...'' என்று பல்லைக் கடிக்க, ''ஐயய்யோ! அப்பாதான் அண்ணா முதலில் சொன்னார்'' என்று நான் தவிப்புடன் கூறினேன்.

இதற்குள், ''ஷீலு...கண்ணம்மா...... வாம்மா! எங்கே இருக்கே?'' என்று தடுமாறிய குரலில் அப்பா கூவிக்கொண்டே வந்தவர், சட்டென்று குனிந்து தானும் மேஜைக்கடியில் தலையை நுழைத்துக் கொண்டார்.

''டேய், எல்லாம் உங்களாலே வந்த வினை. இப்ப என்ன செய்யறது?'' என்று அவர் அடித்தொண்டையில் உறுமிவிட்டு, பற்களை நறநற வென்று கடிக்க, நானும் அண்ணாவும் ஒரு கணம் மலைத்திருந்து, மறு கணம் ''ஆய்'' என்று கூச்சல் போட்டோம்.

காரணம், எங்கள் இருவர் தலைக்கும் நடுவில் இருட்டில் வேறொரு தலை முளைத்தது தான்!

அதற்குச் சொந்தக்காரியான அண்ணி, ''ஐயய்யோ! இப்பொழுது என்ன செய்யறது! அத்தைகிட்டே யார் சொல்றது?'' என்று கேட்கவே, எல்லோரும் பரிதாபமாக ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்தோம்.

''எல்லோரும் மேஜைக்கடியில் என்ன செய்யறீங்க?'' என்ற வியப்புக் குரலுடன் அம்மா நுழையவே, நாங்கள் திடுக்கிட்டு, ஒவ்வொருவராக, 'ஷீலு!... ஷீலுக்குட்டி! ஷீ'லுக் கண்ணு...!'' என்று உளறிக் கொண்டே மெதுவாகத் தலையை வெளியே எடுத்த அதே சமயம், 'மியாவ்' என்று வாசற்படியில் குரல் கேட்டது.

''ஷீலா.. எங்கேயம்மா போயிருந்தே...!'' என்று உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே அம்மா ஓடிச் சென்று ஷீலாவைத் தூக்கி அணைத்துக் கொள்ள, நாங்கள் நால்வரும் பேயறைந்தவர்கள் போலத் திகைத்துத் தரையிலேயே உட்கார்ந்திருந்தோம்.

அம்மா, தன் கைப் பையைத் திறந்து அழகான பட்டு ரிப்பன் ஒன்றை எடுத்து ஷீலாவின் கழுத்தில் கட்டிக் கொண்டே கொஞ்சலாக, ''ஷீலுக் குட்டி எங்கே இருந்தே இவ்வளவு நேரம்?'' என்று வினவவே ஷீலா சொல்லிவிடுமோ என்ற பயப்பட்டவர் போல அப்பா, ''ஷீலாதான் வந்தாச்சே, என்ன கேள்வி அதுக்கிட்ட? எங்கே போயிருந்தேன்னு?'' என்று கடுகடுக்கவே, நாங்கள் நிலைமையைச் சமாளிக்க, ''ஷீலாவுக்கு இந்த ரிப்பன் ரொம்ப அழகாக இருக்கே...!'' என்று புகழ்ந்து பேசியதைக் கேட்ட அதிசயத்துடன் நிமிர்ந்து, சந்தேகக் கண் கொண்டு எங்களைப் பார்த்தாள்.

இது நடந்து இரண்டு மாதங்கள் கழித்து, எங்கள் பிரயாசை இன்றியே ஷீலா ஒரு நாள் காணாமற்போய்விட்டாள்.

அம்மா துக்கத்தில் துடிதுடித்துப் போக, நாங்கள் சந்தோஷத்தில் பூரித்துப் போனோம்.

இனிமேலாவது வீட்டில் எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்று எதிர்பார்த்த எங்களுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது.

''எல்லாரும் கரிச்சுக் கொட்டினீங்க. ஷீலா ரொம்ப மானி. ஓடிப் போயிடுத்து...'' என்று அம்மா வாய்க்கு வாய், அலப்பிக் கொண்டு கண்ணீர் விட ஆரம்பிக்கவே, ஷீலாவை மறப்பதற்குப் பதில் நாங்களும் அது இல்லாத குறையை உணர ஆரம்பித்தோம்.

''என் ஷீலா கண்டிப்பாக வந்தே தீரும்'' என்று ஒரே பிடிவாதமான நம்பிக்கையுடன் அம்மா தினமும், காலையில் பாலைக் காய்ச்சி, கையில் வைத்துக் கொண்டு வழக்கம்போல் ''ஷீலா... ஷீலாக்குட்டி! வாம்மா!'' என்று குரல் கொடுப்பதைப் பார்த்து அப்பா கையிலிருக்கும் காப்பியையும் குடிக்க மறந்து பிரமித்து உட்கார்ந்து விடுவார்.

அண்ணி மாடி ஜன்னலையும், மாமரத்துக் கிளையையும் வெறித்து நோக்க ஆரம்பித்தது போலவே, நானும் படுக்கையில் என் காலடியில் ஷீலா படுக்காததைக் கண்டு ஒரு பெரிய குறையாக உணர ஆரம்பித்தேன்.

மொத்தத்தில் ஷீலா திரும்பி வராதா என்று நாங்கள் அனைவரும் ஏங்க ஆரம்பித்தோம்.

ஒரு நாள் காலையில் பால் டம்ளருடன் ''ஷீலா, ஷீலா...'' என்று குரல் கொடுத்த அம்மா, 'மியாவ்' என்ற பதில் குரலைக் கேட்டு, ''வாங்கோ, வாங்கோ...! ஷீலா வந்துடுத்து. ஷீலாக் குட்டி வந்துடுத்து'' என்று பரவசத்துடன் கூவவே, நாங்கள் அனைவரும் குதூகலத்துடன் ஓடி வந்தோம்.

அங்கு நாங்கள் கண்ட காட்சி எங்களை மெய்சிலிர்க்க வைத்தது.

அம்மா ஆனந்த பரவசத்துடன் மலைத்து உட்கார்ந்திருக்க, ஷீலா, உரிமையுடன் சொகுசாக, தன் உடல் முழுவதையும் அம்மாமேல் உரசி, 'மியாவ்' பாஷையில் ஏதோ சமாதானக் கதை சொல்லிக் கொண்டிருந்தது.

அம்மா தழுதழுத்த குரலில், ''இவ்வளவு நாள் எங்கேம்மா போயிருந்தே? ஷீலாக் குட்டி.... ஷீலாக்குட்டி...'' என்று புலம்பவே, ஷீலா வெளியில் ஓடி, ஒவ்வொன்றாக, மூன்று குட்டிகளை வாயில் கௌவிக் கொண்டு வந்து அம்மா முன் விட்டது.

அம்மா நான்காவது முறை 'ஷீலாக் குட்டி' என்று கூறுவதற்கு முன் நாங்கள் அனைவரும் ''ஸ்டாப், ஸ்டாப்'' என்று கத்தவே, ஷீலா எங்களைப் பார்த்து ஒரு செல்ல உறுமல் உறுமிவிட்டு, சொகுசாக வாலை ஆட்டிக் கொண்டு வெளியே சென்று வெறும் வாயுடன் திரும்பி வந்தபோதுதான் எங்களுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

குட்டிகள் ஷீலாவைப் போலவே, வெளுப்பாக, வெகு அழகாக இருந்தன.

அன்று எங்கள் வீட்டில் வடை பாயசத்துடன் விருந்து அமர்க்களப்பட்டது.

அப்பா, ஷீலாவைக் கரித்துக் கொட்டியதற்குப் பிராயச்சித்தமாக ஷீலா, அண்ட் பார்ட்டிக்குப் பால் சப்ளை செய்வதற்காக ஒரு சீமைப் பசுவை வாங்கிக் கட்டிவிட்டார்.

அண்ணியும், அண்ணாவும் தங்கள் பங்குக்கு அவர்களுடைய மாடி அறையை ஷீலா குடும்பத்துக்கு ஒழித்து விட்டு விட்டு வேறு அறைக்குச் சென்றுவிட்டனர்.

நான் என் சக்திக்கேற்ப, ஷீலாக்குட்டி நம்பர் 1, நம்பர் 2, நம்பர் 3க்கு மூன்று எவர் சில்வர் தட்டுக்கள் வாங்கி ஷீலாவின் தட்டைச் சுற்றி வைத்துவிட்டேன்.

இப்பொழுது எங்கள் வீட்டில் ஆனந்தக் குரல் 'மியாவ்', 'மியாவ்' என்று எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது!


SHILPI SOM 8/68 TAM.
White
det
whitens while it washes clean
டெட் சலவையின் மேன்மை,
வெண்மையுடன் தூய்மை
டெட் பவுடரினால் மட்டும்தான் உங்கள்
வெள்ளைத் துணிகளை பளிச்சிடும் வெண்மையுடனும்
வண்ணத் துணிகளை துப்புரவாகவும்
சலவை செய்ய முடியும்.
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்.,
பம்பாய்

பொன்னிவனத்துப் பூங்குயில்



கொத்தமங்கலம் சுப்பு

முன்கதைச் சுருக்கம்

தஞ்சையை மகாராஷ்டிர மன்னர்கள் ஆண்டுவந்த காலம். மன்னர் துக்கோஜியின் புதல்வன் பாவாஜி பெருங் கோழை. அவனுக்கு வரும் ஆபத்தைப் பிரதாபசிம்மர் களைய முன் வருகிறார். பாவாஜியின் மனைவிக்குப் பிரதாபசிம்மரின் செல்வாக்கு அச்சத்தைத் தருகிறது. துக்கோஜி மன்னர் பிரதாபசிம்மருக்குக் காட்டும் மரியாதையோ அவள் உள்ளத்தில் மேலும் கிலியை வளர்க்கிறது.

மராட்டிய மன்னர்களுக்கு எதிராக முல்லை வேந்தன் என்பவன் சூழ்ச்சிகள் பல செய்கிறான். அவனைப் பிடிக்கும் முயற்சியில் பிரதாபசிம்மர் மாறுவேடம் தாங்கி ஈடுபடுகிறார்.

குயிலி ஒரு தனிப்பிறவி: குழந்தை மனம் படைத்தவள். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவள். யாருக்கும் உதவுபவள். ஒருநாள் துக்கோஜி மன்னரின் பட்டணப் பிரவேசம் நடைபெறுகிறது. அதைக் காண வந்தவளின் கண்களில் குதிரை மீது ஆரோகணித்து வந்த பிரதாபசிம்மர் படுகிறார்; அவள் உள்ளத்திலும் இடம் பெறுகிறார்.

ஆனால் அவள் மாமன் வெள்ளைவாரணமோ, அவளுக்கு மாறான குணம் படைத்தவன். அவளைத் தன்னலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறான், அவளைக் கொண்டு பணம் சுட்டலாம் என்று கனவு காண்கிறான். ஆனால் குயிலி அவன் சொற்படி நடக்க விரும்பவில்லை.

இந்த நிலையில்தான் ஓவியர் ரங்கமன்னாரின் கண்களில் படுகிறாள் குயிலி. அவர் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று நல்லாடைகள் அளிக்கிறார். குயிலியின் அழகு பன்மடங்கு பரிமளிக்கிறது.

ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் தமிழ் நாட்டில் அடி எடுத்து வைத்த காலம் அது. மதுரையை நாயக பரம்பரையைச் சேர்ந்த மீனாட்சி தேவி ஆண்ட காலமும் அதுவே. அவள் ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்கச் சென்ற பொழுது பங்காரு திருமலையின் மகன் விஜயகுமாரனுக்குப் பட்டம் கட்டச் சதி நடக்கிறது. இந்தச் சதியைத் தவிர்க்க ராணி மீனாட்சி தேவி மராட்டிய மன்னர்களின் உதவியை நாடுகிறாள்.

இந்தச் சதித் திட்டத்துக்குத் தனது இரு அமைச்சர்களுமே உடந்தையாயிருந்ததை அறிந்த மீனாட்சி தேவி அதிர்ச்சியால் மயக்கமுறுகிறாள். மூர்ச்சையைத் தெளிவிக்க அவள் வளர்ப்பு மகள் நீலவேணி, தன் பியானோ மாஸ்டர் பீட்டர் துரையின் உதவியை நாடுகிறாள். பலன், நீலவேணிக்கு மோஹன மோகம் அதிகரித்து விடுகிறது!

மீனாட்சி தேவியாரின் வளர்ப்புப் பெண் நீலவேணிக்குப் பிரதாப சிம்மனை மணம் செய்து வைத்துவிட முயற்சிகள் நடக்கின்றன. அவள் எப்படியிருக்கிறாள் என்பதை அறிய சங்கீத கோஷ்டியுடன் திருச்சிக்கு வருகிறார் 'மோகனம் முத்துரங்கம்!'

அத்தியாயம் 37

மோகன ராகமா? மோகன உருவமா?

"ஏந்தாண்களா! உங்கள் பெயர்களைச் சொல்லுங்கள்."

"என் பேர் பைரவி."

"என் பேர் கல்யாணி."

"நான் காம்போதி."

"நான் ஸஹானா."

இப்படித் தங்கள் பெயர்களைக் கூறின அத்தூண்கள். ஆம்! சங்கீதம். அங்கு நூறு கால்களுடன் வேரூன்றி நிற்கிறது. அந்த நாத சங்கீதப் பொன் மணி மண்டபம்தான் திருச்சியில் உள்ள நூற்றுக் கால் மண்டபம்.

அந்த மாமண்டபத்தில் நடக்கும் கச்சேரிகள் எல்லாமே மணி மண்டபக் கச்சேரி என்றால் மோகனம் முத்துரங்கம் சும்மாவா விடுவார்!

பீடத்தின் நடுவே அவர் அமர்ந்திருந்தார். சியாமா ராவ் சாரங்கி, சீனிப் புலவர் மிருதங்கம், குழலும், கஞ்சிராவும் வாசிப்பவர் இருவர். தம்பூராக்கள் இரண்டு. அவர் தம்பூராவை எடுத்து மடியில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது தன் மகன் பாடுவதைக் கேட்கத் தாயார் அருகில் அமர்ந்திருப்பதுபோல் தோன்றியது.

தன் மைந்தனுக்கு முன்னோடியாக இருந்து வழிகாட்டும் தந்தையைப் போல், 'தந்தை மகற்கு ஆற்றும்



உதவி அவையத்து முந்தி இருப்பச் செயல்' என்பதற்குச் சான்றாக இசை மகளை அவையை நோக்கி அமரச் செய்து, அவளை நோக்கிய வண்ணம் இசையின் தந்தையாகிய லயம் அங்கு மிருதங்க வடிவத்தில் அமர்ந்திருந்தது. சாரங்கம் என்னும் வில்லில் இருந்து புறப்படும் அம்புகள் எவ்வாறு இலக்குத் தவறாது விளங்குமோ, அவ்வாறே சாரங்கியின் நாணில் இருந்து அம்புகள் புறப்பட்டன. அவை கமகம் குழைவு, கனம், லயம், இவற்றோடு அனுசுரங்களையும் இணைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தன. சாரங்கியில் தோல் பொருத்தப்பட்டிருந்தமையால் கட்டைச் சத்தமோ, கமகம் இல்லாத சுரங்களோ வெளிவராமல், ஒவ்வொரு சுரமும் அதன் பூரண அழகுடன் கண், காதுகளுடன் கூடிய திருமுகம்போல் வந்து கொண்டிருந்தன. மேடையின் நடுவே கருகருவென்று சிறிதே வளர்ந்த அரும்பு மீசையும் இளம் தாடியும் அழகு செய்ய அமர்ந்திருந்தார் மோகன முத்தண்ணா. அவர் அணிந்திருந்த மகமல் சட்டையும், அதன்மேல் தொங்கிய நவரத்தின மாலையும் இரு கைகளிலும் அஸ்த கடகங்களும், வைர மோதிரங்களும் பளீர் பளீரென்று ஒளி வீசிக் கொண்டிருந்தன. நெற்றியின் நடுவிலே புருவத்துக்குச் சிறிதே உயரத்தில் ஆனைக் குந்துமணி அகலத்தில் கமகமவென்று மைசூர் ஜவ்வாதுப் பொட்டு வைத்துக் கொண்டிருந்தார். கலைஞனின் மனம்சுருதியில் லயிப்பது போல் கலந்த பரிமளத்திலும்கலந்திருக்க வேண்டும். ஆதலால் அவருடைய உடைகளில் கதம்ப அத்தரை அளவோடு பூசியிருந்தார். பாடும் பொழுது தலைமயிர் முகத்தில் வந்து மறைக்காமல், அதை இலேசாக வாரி, பூப்பந்து போல் முடிந்திருந்தார். என் வழியாகத் தானே உனக்கு இசைச் செல்வத்தை அளித்தேன். 'ஏ குரலே! குரலே! உனக்கு மட்டும் என் இத்தனை ரவை ஜாதிகள்?' என்று அவர் செவிகள் கேட்டனவோ என்னவோ? கேள்விச் செல்வமே! நீ இல்லையென்றால் என் ஞானம் காற்றுப் படாத கனியைப் போலத்தான் இருந்திருக்கும். கல்வி ஞானம் வேர் போன்றது. கேள்வி ஞானம் காற்றும் சூரிய கிரணமும் போன்றது. இரண்டும் கலந்தால்தான் கலைக் கனியில் சுவை இருக்கும். ஆதலால் என் அருமைக் காதுகளே! நீங்களும் ரவை ஜாதிகளை அள்ளி வீசுங்கள்!'' என்று காதுகளுக்கு வைரக் கடுக்கன்களைப் போட்டது குரல்.

சங்கீத வித்வானுக்குக் காதுகள்தான் முதல் பக்க வாத்தியம். பிடில், மிருதங்கம் எல்லாம் பிறகுதான். வித்வான் காதைப் பொத்திக்கொண்டு பாடினால் ரசிகர்கள் காதைப் பொத்திக் கொண்டு போய் விடுவார்கள். கள்ளமற்ற காதுகளுக்கு நல்ல வித்வான்கள் வெள்ளைக் கடுக்கன்களைப் போடுவது இதனால்தான். விருப்பு, வெறுப்பு இரண்டுமின்றி, எவர் பாடினாலும் கேட்க வேண்

டும். பிறகு அதில் நன்றிது தேர்ந்திடல் வேண்டும். இந்த ஞானம் வந்தால் இசை ஞானமும் கூடவே வந்துவிடும். மோகன முத்தண்ணா பல பெரும் பாட்டுக்களைக் கேட்டவராதலால் அன்று மேடையில் மிகப் பெரிய அஸ்திவாரத்துடன் பாட ஆரம்பித்தார். இடம், பொருள், ஏவல் மூன்றையும் பார்க்க வேண்டுமல்லவா? அந்த இடமே சத்தியம், சிவம், சுந்தரம் மூன்றுக்கும் உறைவிடம். சரளி வரிசை, ஜண்டை வரிசை கீதம், வர்ண கீர்த்தனம், ராகம், தானம், பல்லவி என்று படிப்படிகளாக ஏறி வருவது தான் இசை, வித்தை என்பதை மலை வாசலிலிருந்து ஏறி வரும் படிக்கட்டுகள் அவருக்கு எடுத்துக் காட்டின. கச்சேரி மேடைக்கு மேலும் படிகள் உயர்ந்து சென்றன. ''உன் வித்தை கச்சேரியோடு முடிந்து விடவில்லை. வித்வானுக்குக் கச்சேரி மேடை ஒரு தங்குமிடம்தான். இங்கிருந்து நீ இசையால் உயர்ந்து, இறைவனைப் பாடி, ஞானப் படிகளில் ஏறி, இறைவனை அடைவதே உன் லட்சியம் என்று கூறுவதுபோல் கீழ்ப் படிகள் வித்தையையும் மேற் படிகள் ஞானத்தையும் போதித்துக் கொண்டிருந்தன. அன்றைய மோகன ராகம் ஜகன் மோகனமாக வெளி வந்து கொண்டிருந்தது. அன்று ஒரு மோகினி அமுதத்தைப் பரிமாறினாள். இன்று இந்த மோகனம் அமுத மழையையே பொழிந்தது. ராக ஆலாபனை முடிந்து அவர் பாட ஆரம்பித்ததும் சபையோர் எல்லோரும் நிமிர்ந்து அமர்ந்தார்கள்.

ஆஹா, ராகம் என்பது யாகம், யோகம், தியாகம், மோகம் ஆய நான்குக்கும் முதல் படி என்று சொல்லிய மகான்கள் அன்று அவதரிக்கவில்லை. ஆயினும் முத்தண்ணாவுக்கு இதைச் சொல்லத் தெரியாவிட்டாலும் அவர் பாடிய பாட்டில் அவை நான்கும் அமைந்திருந்தன.

ராக சங்கீதத்தைப் பருகும் அனைவரும் உருகிய பெருமையை என்னவென்பது? மண் உருகியது, மரம் உருகியது. பெண் உருகினாள். ஆண் உருகினான். பேதா பேதமற்று ஜீவராசிகள் யாவும் உருகின. அதைப் படைத்த இறைவன் உருகினான் என்று சொல்வதைக் காட்டிலும் உண்மையாகவே நடந்த ஒன்றைச் சொல்லலாம். அவர் பாடிக் கொண்டிருக்கும்போதே மலைக் கோட்டை மேலே உள்ள திருமஞ்சன வீதியில் ஓர் அழகிய வண்டியில் இருந்த ஒரு பெண் இந்த இசையில் உருகிக் கொண்டேதான் இருந்தாள். அவளோ இசையை அறிந்தவள். அவள் உருகியது ஆச்சரியமில்லை. அவளது வண்டியில் பூட்டிய குதிரைகளும் உருகித்தான் நின்றன. வாலை ஆட்டாமல், வாயை அசைக்காமல், அங்கு நின்ற குதிரை போலவே அந்த வனிதாமணியும் தன் முகத்தில் வியர்வை அரும்புவதையும் பாராமல் திறந்த வாய் மூடாமல், தேன் பருகிய வண்டுபோல் இருந்தாள். அடிக்கடி அவள் தலை சிறிது ஆடுவதையும், தனக்குத்தானே 'உத்க, உத்க' என்று ரசிப்பதையும் யாரேனும் கண்டிருந்தால் அவளுக்குப் பைத்தியமோ என்று எண்ணியிருப்பார்கள். ஆம்! சங்கீதமே ஒரு வகைப் பைத்தியம்தான்! தெளியவே தெளியாத பைத்தியம். அதை யாரேனும் தெளிய வைக்க முயன்றால் அந்தப் பித்தர்கள் ஒருகாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இளவரசிதான். ஆயினும் அவளும் மனுஷிதானே! உள்ளே செல்லலாமே என்று துடித்தாள். ஆனால் 'அவள் சென்றால் இசை முடிவை அடையாமல் நின்றுவிடுமே!' என்று அஞ்சினாள். அந்தப் பாடகர் பாடும் போது தாரஸ்தாயியில் சிம்மக் குரலும் உச்சஸ்தாயியில் வண்டு போலவும் சாரீரம் இழைகிறது. அது ஒரு பூக்காடு. அவளோ ஒரு தும்பி ஆனாள். மனம் லயித்து விட்டது. உடல் வண்டியை விட்டு இறங்கியது.

மெல்லப் படிகளில் இறங்கினாள். இசை படிப்படியாக அவள் காதுக்குள் ஏறியது.

அவள் வந்தவுடன் கூட்டம் அடக்கமாக விலகி வழி விட்டது. 'உய்' என்று சீட்டி யடிக்கவில்லை. எழுந்து விடவில்லை. அவளைப் பார்க்க, அவள் அருகே ஓடி விடவில்லை. அழகிய பெண்ணைக் கண்டவுடன் பாட்டுக்காரர், ''அம்போ'' என்று பாட்டை விட்டு விடவில்லை. ''சபாஷ் திருச்சி'' என்று பிரமித்தார் வித்வான். அவர் பாடல் மேலும் உயர்ந்தது. ஆம்! பார்வையும் உயர்ந்தது. அவள் அருகே வரவே வித்வான் ஆவலுடன் கடைக் கண்ணால் அவளைப் பார்த்தார். அந்தோ! பரிதாபம். அவளைச் சுற்றிலும் ஒரு பட்டுப் படுதா. அதன் நடுவில் தரையில் பட்டும் படாமலும் இரண்டு கால்கள். அவற்றில் தங்கச் சதங்கைகள் இட்ட பாதசரம்! இதைத்தான் கண்டார் அவர்.

மோகனாங்கி வந்தாள் முழுநிலவே
வந்து முறுவல் செய்தது போலே
கோகனப் பாதம் குலுங்க
நடை நடந்து...

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் வழங்கும்

வள்ளி பிலிம்ஸ்


கணவன்

கதை: எம்.ஜி.ஆர்

தயாரிப்பு **சடையப்பன்** டைரக்ஷன் **ப. நீலகண்டன்**



வசனம்: சொர்ணம் பாடல்கள்: வாலி, ஆலங்குடி இசை: M.S. விஸ்வநாதன் ஒளிப்பதிவு: V. ராமமூர்த்தி



உங்களுக்கும்
உங்கள் நண்பர்களுக்கும்

மகிழ்ச்சி அளிப்பது......
நீடித்த நறுமணம் வீசுவது



Priya
PERFUME
பிரியா
வாசனை

புத்தம் புதிய மலர்களின்
வாசனைக்கு ஒப்பானது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா ■ பம்பாய் ■ கான்பூர் ■ டெல்லி

டெலிபோன் எண்: 76103   த. பெ. எண்: 2010   தந்தி: செந்தில்

இந்தோ மெர்கண்டைல் பண்ட் பிரைவேட் லிட்.

(ரிஜிஸ்டர்ட்: இந்தியன் கம்பெனி சட்டம் 1956க்கு உட்பட்டது)

25, சுந்தரேஸ்வரர் தெரு - மயிலாப்பூர், சென்னை - 4

மேற்காணும் சீட்டு குரூப்புகளுக்கு, 1961-ம் வருடத்திய 24-ம் நம்பர் மதராஸ் சீட்டு பண்டுகள் சட்டத்தின் கீழ் நாங்கள் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வகுப்பு சீரிஸ் சீட்டு நெ.	சீட்டுத் தொகை	மாதத் தவணை	டிக்கெட்டுகள் எண்ணிக்கை	மொத்த காலம்
		தினசரி சீட்டு		
A	ரூ. 9,000	ரூ. 20 தினசரி	80	450 நாட்கள்
B	ரூ. 4,500	ரூ. 10 ,,	30	450 ,,
C	ரூ. 2,000	ரூ. 5 ,,	40	400 ,,
D	ரூ. 800	ரூ. 2 ,,	40	400 ,,
E	ரூ. 400	ரூ. 1 ,,	40	400 ,,
		மாதாந்திர S. T.		
A	ரூ. 6,000	ரூ. 200 மாதத்துக்கு	30	30 மாதங்கள்
B	ரூ. 3,000	ரூ. 100 ,,	30	30 ,,
C	ரூ. 1,500	ரூ. 50 ,,	30	30 ,,
D	ரூ. 750	ரூ. 25 ,,	30	30 ,,
E	ரூ. 600	ரூ. 20 ,,	30	30 ,,
F	ரூ. 450	ரூ. 15 ,,	30	30 ,,
		மாதாந்திர L. T.		
A	ரூ. 30,000	ரூ. 500 மாதத்துக்கு	60	60 மாதங்கள்
B	ரூ. 15,000	ரூ. 250 ,,	60	60 ,,
C	ரூ. 7,500	ரூ. 125 ,,	60	60 ,,
D	ரூ. 3,600	ரூ. 60 ,,	60	60 ,,
E	ரூ. 1,800	ரூ. 30 ,,	60	60 ,,
F	ரூ. 1,200	ரூ. 20 ,,	60	60 ,,

இதர விவரங்களுக்குத் தேவையான குரூப்பை குறிப்பிட்டு எழுதவும்:

கிளை: 1, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1
டெலிபோன் எண்: 21941

M. V. சுப்ரமணியம்
மேனேஜிங் டைரக்டர்

SOBHAGYA - IMFL-1

என்ற வரிகள் வரும் போதுதானு அவளது பாதச் சிலம்பு தெரிய வேண்டும்? அவள் வெட்டி அடியெடுத்து வைக்கும் போது காலில் சிலம்பு ஒலிப்பதையும் அவள் சிங்கார நடை நடப்பதையும் திரை மறைத்தது.


முல்லை மலர் போலே மெல்லிய வெண் திரைக்குள் போன திரைக் கடல் அலைபோல் காற்றில் அசைந்த திரையில் மெல்ல மெல்லக் காட்சியைக் கண்டார். அவள் மேனி மூடி மறைக்கும் காட்சியைக் கண்டார். வஞ்சி அடியின் அழகுக்கே அஞ்சித் திரை ஆடுகின்றதோ என்று எல்லோரும் வியக்க அரசிளங்குமரி அடி யெடுத்து வைத்தாள். அங்குள்ள சன்னதியில் அவள் சற்று நேரம் நின்றாள்.

சன்னதி அருகில் இருப்பதால் ஸ்வாமி தரிசனத்துக்காகத் திரையை விலக்கி விடுவார்கள். நாம் அவளைத் தரிசிக்கலாம். அந்தச் சந்திர முகம் தெரியும் என்று வித்வான் எண்ணினார். பழக்கம் தடுத்தது. சன்னதிக்கும் அவருக்கும் இடையே இருந்த திரை விலகியது... ஆனால்... ஆனால்... வித்வான் திகைத்தார். அந்த நேரத்தில் அவள் அங்கே நிற்பது தெரிந்தது.

அவள் ஒரு ரசிகையாக இருந்தால் திரையை விட்டு வெளியே வரட்டுமே என்று வித்வான் நினைத்தார். ஆனால் அந்த நங்கை தன் கழுத்தில் கையை வைத்து ஓர் அழகிய முத்து மாலையை எடுத்தாள். பட்டுத் திரையில் மாலை சிறிது தெரிந்தது.

''வித்வான் அவர்களே! இளவரசியார் உமது பாட்டை மெச்சுகிறார்கள்'' என்று தோழியின் குரல் கேட்டது. இளவரசி அந்த மாலையை அவர் மேல் விட்டெறிந்தாள்.

சியாமாவின் கையிலிருந்த சாரங்கி வில் கண நேரத்தில் அவர் கைக்கு வந்தது. வில் நுனி அந்த மாலையை ஏந்தியது. அடுத்த கணத்தில் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் அது பறந்து சென்று அவள் கழுத்திலேயே விழுந்தது.



''என் பால்காரர் பசு மாட்டுக்கு வைக்கோல் கன்றுக் குட்டியைக் காட்டியே பால் கறந்து விடுகிறார்.''

''இது என்ன அதிசயம்! எங்க பால்காரர் வைக்கோல் மாட்டிலேயே பால் கறக்கிறாரே!''

''சபாஷ்!'' என்றாள் இளவரசி. கூடவே, கர கோஷம் எழுந்தது.

பாட்டு நின்றது.

''ஏன், நடக்கட்டும்!'' என்றாள் அவள்.

''திரை விலகட்டுமே!'' என்றார் வித்வான்.

''வழக்கமில்லை.''

''நமக்கும் மதியாதார் மரியாதையில் பழக்கமில்லை'' என்றார் வித்வான். சீனி மிருதங்கத்தில் இருந்த ரவையை எடுத்தான். வித்வான் மேடையை விட்டு இறங்கினார். ''வணக்கம்'' என்று நடந்தார்.

நடுக் கச்சேரியில் அவர் எழுந்தவுடன் சிலர், ''அரசிளங்குமரியே இப்படித்தான்!'' என்றார்கள்.

''அவள் வந்தால் இவர் நிறுத்த வேண்டுமோ?''

''பின்னே என்ன ஐயா வித்வானுக்கு எதிரில் திரை என்ன? தெய்வமாக இருந்தாலும் திரை போடக் கூடாது'' என்றார் ஒருவர்.

இளவரசியோ, ''அதிகப் பிரசங்கி! அழகாக இருந்தால் இத்தனை கர்வமா? மோகனம் பாடிய உடனே திரையை விலக்கிவிட்டு முன்னால் போய் உட்கார வேண்டுமோ?'' என்றாள்.

தோழியோ, ''அவர் எங்கே தங்கி இருக்கிறார் என்று விசாரிக்கவா?'' என்று கேட்டாள்.

''நான் 'அப்படி உத்தரவிட்டேனா?''

''பெரிய இடங்களிலே உள்ளம் வேறு உத்தரவு வேறாயிருக்கும். உதட்டுக்கும் மனத்துக்கும் நடுவே கள்ளன் இருப்பான்....''

''போதும். வாயை மூடு.''

''அது முடியும் அம்மா. முடியும். மனத்தைத்தான் மூட முடியாது'' என்றாள் தோழி.

இளவரசி கோபத்துடன் தோழியை ஒரு பார்வை பார்த்தாள்.

''என்ன சீனி! மூட்டையைக் கட்டிவிட்டாயா?''

''என்னடா அவசரம்?''

''மதிக்காத இடத்திலே நீங்கள் கால் மிதிக்க மாட்டீர்களே! இப்பவே

பாதத்தைப் பார்க்கப் பத்து நாட்கள் ஆகியிருக்கு. முகத்தைப் பார்க்க முப்பது நாளாகலாம். தரிசனத்திலேயே தவணை முடிந்து போகும். அப்புறம் குணம், பேச்சு, ஆடல், பாடல், இதெல்லாம் தெரிஞ்சுக்க ஆறு மாசம் ஆகணும். உங்களுக்கென்ன, குதிரை இருக்கு. ஏறிக் கொண்டு ஜம்முனு தஞ்சாவூருக்குப் போய் விடுவீர்கள். காவேரி வற்றிவிட்டால் வீணையையும் பானையையும் தூக்கிக் கொண்டு நாங்கள் கொதிக்கிற மணலிலே அல்லவா நடந்து போகணும்?''

''முதல்லே கதவைச் சாத்து. காவேரிக் காற்று சிலுசிலுன்னு அடிக்குது'' என்றார் வித்வான்.

மிருதங்கக்காரர் கதவைச் சாத்தி விட்டு வந்தார். ''சர்க்கரை! எனக்கு என்னவோ அவள் என்னைத் தேடிக் கொண்டு இங்கே வருவாள் என்று தோன்றுகிறது.''

சர்க்கரை சிரித்தான். ''ஆண் பிள்ளைகள் எல்லோருக்குமே அப்படித் தான் தோன்றும். அதிலும் அரசன் வீட்டுப் பிள்ளைக்கு அவசியம் தோன்றும். அவன்தான் மாலையைக் கழற்றி முகத்தில் எறிந்து, போதும் பாடினது என்று புகன்றுவிட்டாள். இளவரசே! நீங்கள் அந்த மாலையைத் திருப்பிக் கொடுத்தது தவறு. ஏதோ மங்கை கிடைக்காவிட்டாலும் மாலையாவது கிடைத்ததே என்று இதில் எல்லாம் திருப்திப்பட வேண்டும்.''

''சர்க்கரை! உனக்கு இந்தக் காதல் விவகாரமே தெரியாது.''

''அவ்விடத்திலும் அப்படித்தான். காம்போதியில் வேண்டுமானால் வித்வான் ஆகிவிடலாம். காதல் விஷயத்திலே இது அது சியாமா எல்லாமே பிரமச்சாரிகள்தான்.''

''சரி, சரி. சமையலே நல்ல தஞ்சாவூர் சமையலா சமைக்கச் சொல்லுங்க'' என்றார் இளவரசர்.

''என்ன பிரமாதமாகப் பாடிவிட்டாரோ! அப்பன் பாடின பாட்டையே பிள்ளை பாடுகிறான். பாட்டன் பாடிய பல்லவியையே பேரன் பாடுகிறான். சமையல் மாறினாலும் மாறும், இவர்களுடைய சங்கீதம் மாறவே மாறாது.''

''கர்நாடக சங்கீதம் என்றால் அப்படித்தான் அம்மா.''

''ஆமாமாம். நீ சொல்லுவதுதான் உண்மை. ஒரே கர்நாடகம். மரம்கூடப் பழைய சருகு உதிர்த்துப் புதிய தளிரை விடுகிறது. பல்கூடச் சிறு பருவத்தில் விழுந்து முளைக்கிறது. இவர்கள் பாட்டு மாத்திரம் எழுதியவன் எழுதி வைத்த மாதிரியே பாசி படர்ந்த குட்டையாகக் கிடக்கிறது. ஏனடி, நமது தெப்பக்குளத்தில் போக்குமடையும் வரத்து மடையும் இல்லாவிட்டால் தண்ணீர் என்ன ஆவது?''

''பச்சையாகும். படிகளில் பாசி பிடித்து வழுக்கும்.''

''அதே நிலைதான் உங்க கர்நாடக சங்கீதத்துக்கும். ஒரே சரிகம, சரிகம. இனிமை உண்டா? மெலடி உண்டா? ஹார்மனி உண்டா! நினைத்த ஆக்டேவ் சஞ்சாரம் உண்டா?''

''இது தமிழிசைதானே அம்மா. இதிலே எப்படி இங்கிலீசு மலடி, ஹார மோனி, ஆக்டேவ் எல்லாம் வரும்?''

''இசையிலே என்னடி இங்கிலீஷும் தமிழும் வேண்டியிருக்கு? மெலடி என்றால் நயம். ஆக்டேவ் என்றால் ஸ்தானம். ஹார்மனி என்றால் படிப்படியாக ஒரே சீரான அமைப்பு.''

''ஏனம்மா இது மூணும்தான் தம் பூரிலேயே இருக்கே.''

''நான் வாத்தியத்தைப் பத்திக் கேக்கல்லே. குரலைப் பத்திக் கேட்டேன்.''

''என்னம்மா இப்படிக் கேக்கறீங்க? கனம், நயம், ஜாரு, பிடி, நிரவல், ஸர்வ லகுஸ்வரம், ராகம், தானம் என்று...''

''போதும். அடுக்காதே. நீ சொன்னவை அத்தனையும் நூலில் இருக்கலாம். யாராவது பாடுகிறார்களா?''

''ஏன்? இன்றைக்குப் பாடினவர் அப்படித்தான் பாடினார்.''

''அவன் பாட்டை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். என்னடி, மோகன ராகத்தை முக்கால் மணி நேரம் பாடினால், யார் கேட்பது?''

''அதுதான் உட்கார்ந்து கேட்டார்களே, நூற்றுக்கால் மண்டபம் கொள்ளாமல்.''

''அவர்களுக்கும் வேலை இல்லை. இவனுக்கும் வேலை இல்லை. அதிகப்பிரசங்கி. மரியாதை தெரியாதவன்.''

''இந்த வித்வான்களே இப்படித் தான் அம்மா. 'மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ? உன்னை அறிந்தோ பாட்டை ஓதினேன்?' என்று மேல் துண்டை உதறிக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள்.''

''வித்வானாக இருந்தால் என்ன? அவனுக்கும் ஓர் அடக்கம் வேண்டும்.''

''ஏனம்மா, நான் ஒன்று கேட்கிறேன். பாட்டு முடிந்து நான்கு நாழிகை ஆகிறது. உணவைக்கூட மறந்து நீங்கள் அதையே பேசிக் கொண்டிருக்கிறீர்களே!''

''ஏன் அதனால் என்ன? காலிலே காயம் பட்டால் நாள் முழுதும் அதைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.''

''அது வேறே, இது வேறே. அந்த மோகன ரூபத்திலே உங்கள் மனம் நிரம்பியிருக்கிறது. அதனால்தான் பசியையும் மறந்து பேசுகிறீர்கள்.''

''என்ன? ராகத்திலா, ரூபத்திலா? அவன் அப்படி ஒன்றும் அழகனல்ல. அவனைப் பார்த்து மயங்கி விடவில்லை. நானும் அழகில் குறைந்தவள் அல்ல'' என்று கோபத்துடன் இளவரசி கூறினாள். ஆனால் அவள் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்புவதையும் காரணமின்றிக் கன்னங்கள் சிவப்பதையும், அவளது கண்களில் செவ்வரிகள் படருவதையும் கண்டாள் தோழி. உள்ளூற நகைத்துக் கொண்டாள்.

தோழியின் முக பாவத்தில் ஏற்பட்ட மாறுதலை அரசிளங்குமரியும் உணர்ந்தாள். இரவு முழுதும் அரசிளங்குமரி நித்திரை கொள்ளாமல் படுக்கையில் புரண்டு படுத்தாள். மோகன ராகத்தையே முனகினாள். தன்னை இவ்வளவு தூரம் துன்புறுத்துவது மோகன ராகமா, மோகன ரூபமா என்று அவளுக்கே தெரியவில்லை.

மறுநாள் மாலை. வசந்த மாளிகையைச் சூழ்ந்த இள மரத் தோப்புக்குள் இரு பெண்மணிகள், மைனா, குருவிகள் போல் உல்லாசமாகப் பேசிக் கொண்டே வந்தனர். இருவரும் அரண்மனைத் தோழிகளைப் போல் ஆடை அணிந்திருந்தார்கள். அதன் நடுவே உள்ள கலை இல்லத்தருகில் வந்தவுடன், ஒரு பெண் மற்றொருத்தியிடம், ''அதோ அதுதான்'' என்று மோகன முத்தண்ணா இறங்கியிருக்கும் பகுதியைச் சுட்டிக் காட்டினாள். ''நீ போ'' என்றாள் மற்றொருத்தி. 'நீங்கள் வந்துவிடுவீர்கள் அல்லவா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

''வெற்றியோடு வருவேன்.''

''ஜாக்கிரதை. கர்நாடக சங்கீதம் பாசிக் குளம். வழுக்கிவிடப் போகிறது!'' என்று சொல்லி விட்டுப் பதிலை எதிர்பாராமல் நடந்தாள் அவள்.

''வாருங்கள். தாங்கள் யார்?'' என்றார் மிருதங்கக்காரர்.

''நேற்று நூற்றுக்கால் மண்டபத்திலே பாடினார்களே, அந்த வித்துவான் இங்கேதானே இருக்கிறார்?''

''இடம் தெரியாமலா இவ்வளவு தூரம் வந்தீர்கள்? வந்த விஷயம்?''

''நேற்று அவருடைய பாட்டைக் கேட்டேன். அவரோடு சங்கீத விஷயமாகப் பேசலாம் என்று வந்தேன்.''



''அம்மா! இந்தக் கண்ணில்லாத பரதேசியைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்களேன்; கண்ணாலே கொஞ்சம் பாருங்களேன்!''

''பாட்டு எப்படி?'' என்றான் சீனி.

''ஒரே தவறு. சரியாகப் பழக்கப் படுத்திக் கொள்ளாமல் கச்சேரி மேடை ஏறக்கூடாது'' என்றாள் அவள்.

பக்கவாத்தியக்காரர்களின் முகங்கள் உடனே வாடின. ''அவரைப் பார்த்தா இப்படிச் சொல்கிறீர்கள்? அவர் யார் தெரியுமா?'' என்றார் சியாமா ராவ்.

''ஓய் சாரங்கிக்காரரே! ஏன் பதறுகிறீர்? பாட்டே நன்றாக இல்லை என்றால் பக்கவாத்தியத்தைப் பற்றிய பேச்சேது? உங்கள் வித்வானிடம் பாடினது போதும், ஊருக்குப் புறப்படு என்று சொல்லுங்கள். நான் வருகிறேன்'' என்று திரும்பினாள் அவள்.

சர்க்கரை இடுக்கிட்டான். வேகமாக அவள் இறங்கும்போது அவள் காலில் இருந்த தங்கப் பாதசரங்களைக் கண்டார்.

''அம்மா! கொஞ்சம் இருங்கள். நாங்கள் அவரிடம் சொல்கிறோம்'' என்று சொல்லிவிட்டு, சர்க்கரை உப்பரிகைக்குச் சென்றான்.

வித்வானிடம் ரகசியமாக எதையோ கூறினான். ''நீ பார்த்தாயா?'' என்று அக்கறையுடன் கேட்டார் அவர்.

''நான்தான் இந்த விஷயங்களில் இலட்சுமணன் ஆயிற்றே!. பாதத்தைப் பாராமல் முகத்தையா பார்ப்பேன்?'' என்றான் அவன்.

மோகன முத்தண்ணா தம் கையாலேயே அங்கிருந்த ஓர் ஆசனத்தைச் சற்று இழுத்து சாளரத்துக்கருகில் போட்டார். ''வரச்சொல்.''

''டேய்; ஒருவரும் நின்று ஒட்டுக் கேட்காதீர்கள்'' என்று உரைத்தார்.

அவள் உள்ளே நுழைந்தாள். (தொடரும்)

ஓவல்டின்

புரதப்
பொருள், வைட்டமின்கள்,
ஃபாஸ்பேட்டைடுகள், எடுகட்டிய
புத்தம்புதிய பால், முதிர்ந்த
பார்லி மால்ட் ஆகியவை
வளப்பமாக அடங்கியது.

உடல்நலமும், வலிமையும், தெம்பும்
உருப்பெற இவை யாவும் உங்களுக்குத் தேவை



உடல்நலமும், வலிமையும், தெம்பும் உருப்பெற உங்களுக்கு இன்றியமையாத எல்லா சத்துப்பொருள்களும் செறிந்தது ஓவல்டின். பாலுடன் ஓவல்டின் சேர்க்கும்போது, நீங்கள் சேர்ப்பது இன்சுவை மட்டுமல்ல—உடல்நலம், வலிமை, தெம்பு.

அருந்துங்கள்
இன்சுவைமிக்க **ஓவல்டின்**
இன்றும்.. நாளையும்... என்றும்!



ASP/J/22 Tam

[illegible]

காக்கா அல்ல கேக்கே!



விருந்து ஒன்றுக்குப் போய் விட்டு வந்த மானேஜர் அங்கு நடந்த நிகழ்ச்சிகளைச் சக ஊழியர்களிடம் விவரித்துக் கொண்டிருந்தார். எல்லோரும் அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஒரே ஒரு குமாஸ்தா மட்டும் சிரிக்காமல் இருந்தார்.

"நீர் ஏன் சிரிக்கவில்லை? உமக்குச் சிரிப்பு வரவில்லையா?" என்று அவரிடம் குத்தலாகக் கேட்டார் மானேஜர்.

"நான் சிரிக்க வேண்டிய அவசியமில்லை; நான்தான் நாளை மாற்றலாகிப் போய் விடுகிறேனே!" என்று பதிலளித்தார் அவர்.

கி. குருமூர்த்தி.

அது என்ன?

திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் வேலை தேடிப் போனான் என் தம்பி. 'இன்டர்வியூ' நடந்த அறைக்குள் அவன் நுழைந்ததும் எந்த ஒரு பொருளையும் சுட்டிக்



காட்டாமலேயே, "அது என்ன?" என்ற கேள்வியைப் போட்டார்கள். வேறு பலரைப் போல் என் தம்பி விழிக்கவில்லை. "அது என்பது ஒரு வார்த்தை!" என்றான்.

- ஜயலட்சுமி.

பெரிய ஸ்டேஷன்!

மருமகள்: அடடா! என்ன பண்ணுகிறீர்கள்! புது ரேடியோவை அப்படியும் இப்படியும் திருப்பினால் கெட்டு விடும்!


மாமியார்: ஒண்ணும் பண்ணலே நான்! எந்த ஸ்டேஷனும் எடுக்கும்னு ராமு சொன்னானே எங்க வத்தலகுண்டு ஸ்டேஷனும் பெரிசு தானே.... எடுக்கிறதான்னு பார்த்தேன்!

- லயோர்



அதிசய மீன்

ஜெல்லி பிஷ் எனப்படும் ஒருவகை மீனினம் ஒலியை உணரும் கூர்ந்த புலனைப் பெற்றுள்ளது. புயல் வருவதை முன்கூட்டியே கேட்டு அறிந்து கொள்கிறது. மீனின் இந்த உறுப்பினை அடிப்படையாகக் கொண்டு



புயல் வருவதைக் கண்டுபிடிக்கும் புதிய எலெக்ட்ரானிக் கருவியொன்றை அமைத்திருக்கிறார்கள் மாஸ்கோ விஞ்ஞானிகள். இதனால் புயல் வீசப் போகிறதென்பதைப் பதினைந்து மணி நேரம் முன்னதாகவே அறிந்து கொள்ளலாம்!

ஆதாரம்: 'ஸ்புட்னிக்'
தகவல்: "எறும்பு"

லேடி 'ஸ்டெனோ!'

வீட்டில் பெண்களே இடைவிடாமல் சொல்லிக் கொண்டிருக்க, அதைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு ஆளான அப்பாவி மனிதர் ஒருவர் இட்ட சாபம்தான், அலுவலகத்தில் ஆண்களே சொல்லிக் கொண்டிருக்க, அதைப் பெண்கள் வாய்மூடிக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதன்றிச் சுருக்கெழுத்திலும் அதைக் குறித்துக் கொள்ள வேண்டும் என்ற 'லேடி ஸ்டெனோ' பதவி உண்டாயிற்று!

- தமிழ்முகன்



பகல் சுமார் பன்னிரண்டு மணி இருக்கும்: கடுமையான வெய்யில். பெரிய குளத்திலிருந்து கோடைக்கானலுக்குச் செல்லும் காட்டுப் பாதையில் காளியம்மாள் வந்துகொண்டிருந்தாள். தலையிலிருந்த கூடை ஒரு குடைபோல் வெய்யிலின் தீவிரத்தைச் சற்றுத் தணித்தபோதிலும், நெற்றியில் வியர்வைத் துளிகள் படர்ந்து கொண்டே இருந்தன. அவற்றை அடிக்கடி துடைத்துக் கொண்டே வந்தாள். பெரிய குளத்திலிருந்து மூன்று கல் வந்திருப்பாள். அப்பொழுது பாதையின் ஒரு திருப்பத்தில் பாறை ஒன்றின்மீது மீசைக்காரன் ஒருவன் உட்கார்ந்திருப்பதை அவள் கண்டாள். திடுக்கிட்டாள். அவன் அவளுடைய போக்குவரத்தைச் சில காலமாகக் கவனித்து வருவதாக அவளுக்குத் தெரிந்தது. அவளுக்கு வயது இருபதுக்குள்ளாகவே இருக்கும். நல்ல உயரம். உயரத்துக்கேற்ற பருமன். வெட்ட வெளியில் அலைந்து திரிந்து கொண்டிருந்த போதிலும் மேனியின் பளபளப்புக் குன்றவில்லை. அவளுடைய பெரிய விழிகள் முகத்துக்கு அலாதியான அழகைக் கொடுத்தன.

தன் மனக் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் அவள் கம்பீரமாக நடந்து வந்தாள். நெருங்க, நெருங்க மீசைக்காரன் முகத்தில் ஒரு புன்முறுவல் மலர்ந்திருப்பதை அவள் கண்டாள்.

''எங்கே அம்மா, இந்த உச்சி வேளையிலே புறப்பட்டுப் போகிறாய்?'' என்று கேட்டான் மீசைக்காரன்.

''எங்க ஊருக்குப் போகிறேன். இரண்டு மைலுக்கு அப்பாலே மூங்கில் புதர்னு இருக்கே தெரியுமா?''

''கேள்விப் பட்டிருக்கிறேன். பத்து வீடுகள் இருக்குமா?''

''பத்து என்ன, பதினோரு இருக்குது. நாங்க வேலை செய்து பிளைக்கிறவங்க ஐயா. காலங் காத்தாலே மூணு பலாக்காய் பெரிய குளத்துக்குக் கொண்டு போய், கொத்திச் சுளைகளை வித்துட்டு ஊருக்குத் திரும்பிக்கிட்டிருக்கேன்.''

''அப்படியா? இந்தக் காட்டுலே ஒண்டியாய்ப் போக வேணுமின்னால் நீ ரொம்பத் துணிச்சல்காரியாய்த்தான் இருக்க வேணும். கழுத்துலே தாலியையும் காணோம்...''

''சீ! வாயை மூடு! உனக்கென்ன என் கலியாணத்தைப் பற்றிக் கவலை? நீ ஒரு ஆண் பிள்ளையா? உனக்கு மகள் இல்லே? தங்கச்சி இல்லே? பெண் பிள்ளைங்களோடு உனக்கு என்னத்துக்கு வம்பு?''

''வம்பு பேசுவது என் பிழைப்பாச்சே?'' என்ருன் மீசைக்காரன்.

''எங்க அப்பா இதைக் கேட்டால், உன் குடலைப் பிடுங்கிப் போட்டிடுவாரு.''

''அது இருக்கட்டும். நீ பாண்டியனைச் சேர்ந்தவளா, அல்லது கடலைமுத்துவைச் சேர்ந்தவளா?''

''என்ன சொன்னே? — சேர்ந்தவளா? இதோ சொல்கிறேன்'' என்று கூடையைக் கீழே போட்டாள். அதிலிருந்த பெரிய அரிவாளை எடுத்துக் கொண்டு மீசைக்காரன்மீது பாய்ந்தாள்.

அவன் நடுநடுங்கி, சரேலென்று ஒரு சிறிய புளியமரத்தின் மறைவில் நின்று கொண்டு தன் கால் சட்டைப் பையிலிருந்த சின்னஞ் சிறிய துப்பாக்கியை எடுத்துக் குறிவைத்தான்.

''இதோ பார்! நீ என்னை வெட்டலாம். நான் சாக மாட்டேன். ஆனல் ஒரே ஒரு குண்டு உன்னைப் பிணமாக்கிவிடும். தெரியுமா?''

''கடடா! ஊம், சாவுக்கு நானும் பயப்படவில்லே, என் கடலையும் பயப்படவில்லே. துரோகிப் பயலே! கடலையைப் போல ஆயிரக் கணக்குலே வயசுப் பிள்ளைங்க, வீடு, மாடு, ஆடு, நிலம் எல்லாத்தையும் விட்டு விட்டுச் சாவுக்குத் துணிஞ்சு ஏன் புரட்சி செய்யருங்க? உன்னைப் போல் வெள்ளையன் அரசாங்கத்திலே பிச்சை வாங்கித் திங்கவா?''

''ரொம்ப ரொம்பப் பேசறயே, பின்னே! உனக்கு எல்லாம் தெரிஞ்சுட்டுதா?''

''எனக்கு எல்லாம் தெரியும். முத்து ஒண்ணு விடாதே, எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்திட்டுது. இது நம்ப தாய் நாடு. தாயின் விடுதலைக்காகப் பாடுபடறவங்களைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கிறியே, இது ஒரு பிழைப்பா? இதைவிட இந்தக் காட்டிலே இருக்கிற இலையையும் கொடியையும் தின்னு பிழைக்கக் கூடாது?''

''நீ கைதேர்ந்தவள்தான். இதுக்கு என்ன சொல்லறே? — தண்டவாளங்களைப் பிரித்துப் போட்டால், ரயில் வண்டி கவுந்து எத்தனைபேர் சாவாங்க? இது நியாயமா? ஒரு பாவமும் செய்யாதவங்களை மடிய வைக்கலாமா? காந்தி மகான் இப்படியா செய்யச் சொன்னர்?''

''அந்தப் பெரியவர் பேரை ஏன் இழுக்கிறே? ரயிலிலே ஏற வேண்டாமின்னுதான் எச்சரிக்கை செய்துக்கிட்டே இருக்காங்களே. புரட்சி செய்யறவங்க நாலையும் செஞ்சு தான் வெள்ளைக்காரனை ஊரை விட்டுத் துரத்தவேணும். மகாத்மா காந்திக்கு வலது கை, இடது கையாய் இருந்தவங்க கூட வெள்ளையனை ஓடச் செய்ய எதையும் செய்யலாம் இங்கிறாங்களே!''

''அப்படியா? சமயத்துக்குத் தக்கபடி கொள்கையை மாத்திக்கலாம் போலிருக்கு!''

''வாயை மூடு! ரொம்பக் கொள்கையைக் கண்டுட்டே நீ! தேசத் தொண்டுக்காக உயிரைவிடறதும் ஒண்ணுதான், அந்தத் தொண்டருங்களைக் காட்டிக் கொடுத்துத் துட்டுச் சம்பாதிக்கிறதும் ஒண்ணுதான்! இல்லையா? உனக்கு வெட்கம் இல்லே? உன்னைப் பத்தி எங்களுக்கு எல்லாம் தெரியும். நினைச்சுக்கோ.''



எது கடமை!

சங்கரராம்

"வேங்கை வீராசாமியைப் பத்தித் தெரியாதவங்களும் இருப்பாங்களா?"

"வேங்கை! எத்தனை நாளாடா உனக்கு இந்தப் பட்டம்? இருபது, இருபத்தஞ்சு வருசத்துக்கு முந்தி, வீரமங்கலத்துச் சந்தையிலே ரத்த பேதியிலே காதும் கையும் துவண்டு நீ விழுந்து கிடந்தபோது ஒரு பெரியவர் உன்னை முதுகிலே ஆண்டிப்பட்டி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போய், உன்னைப் பிழைக்க வச்சாரே? நினைப்பு இருக்குதா?"

"நான் அதை எப்படி மறப்பேன்? ஆனால் சில மாதங்களுக்கு அப்புறம் நான் பட்டாளத்துலே சேர்ந்து வட நாட்டுக்குப் போயிட்டேன். இப்போதானே திரும்பி வந்தேன். வந்ததும் கறுப்பையாவைப் பத்தி விசாரிச்சேன். பாவம், அவர் இறந்துட்டாரின்னு சொன்னாங்க."

"உனக்குப் பாவம் வேறையா? உனக்கு உயிரைக் கொடுத்த கறுப்பையாவின் மகனைத் தான் இப்ப நீ கொல்லப் பார்க்கிறே."

"என்னுது?"

"ஆமாம். கடலைமுத்து கறுப்பையாவின் மகன். நான் கறுப்பையாவின் தங்கச்சி மகள்!"

"அப்படியா! அப்படியா!" என்று சொல்லும்போதே வேங்கை வீராசாமியின் முகம் குன்றியது. உடலில் ஒரு பதற்றம் ஏற்பட்டது. ரிவால்வரைக் கால் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். "இதென்ன தரும சங்கடம் குழந்தை! உன் பேரை நீ சொல்லவில்லையே!"

"காளியம்மா."

அவ்வளவு சங்கடத்திலும் வேங்கை வீராசாமிக்கு ஒரு புன்முறுவல் தோன்றிமறைந்தது.

"சரியான பேராத்தான் வைச்சாங்க. அம்மா, நான் யோசிக்காத பல விசயங்களை உங்கிட்டே இருந்து கற்றுக் கொண்டேன். இப்போ, இப்போ, கடலையை நான் ஒரு தடவையாவது பார்க்கணுமின்னு ஆசையாயிருக்குதே. பயப்படாதே! இந்தத் துப்பாக்கியை நீயே வைத்துக்கொள்" என்று அவன் காளியம்மாவின் கைகளில் அதை வைத்தான்.

"ரொம்பத் தொலைவிலே இருக்கானோ?"

"இல்லே. இல்லே. எலே மறைவுலேதான் இருக்கும். நான் குரல் கொடுத்தால் வந்து விடும்."

"அப்போ, கூப்பிடு அம்மா, கூப்பிடு."

காளியம்மா "அக்கோ" பறவை போல் கூவினாள். இரண்டு நிமிடங்களுக்குள் ஒரு சிறிய சட்டியுடன் கடலைமுத்து அங்கே வந்து விட்டான்.

"சட்டியைக் கீழே போடு. மாமன் பயப்படப் போகுது!" என்றாள் காளியம்மாள்.

வேங்கை வீராசாமி, அவனை அணுகி, "குழந்தை! உன்னைப் பார்த்தால் கறுப்பையாவைப் பார்க்கிறாப் போலவே இருக்குது, அப்பா. கடவுள் உன் பக்கம் இருக்கிறார். காளியம்மாவை இலேசுன்னு நினைச்சுடாதே. அவள் பெரிய அறிவாளி. உன் உயிர்த் துணை. அப்புறம், அப்புறம்" என்று பெருமூச்செறிந்தான். "இனி மறைந்திருக்க வேறு இடத்தைத் தேடிக்கோ. ஆண்டவன் உன்னைக் காப்பாற்றுவார்" என்று கடலைமுத்துவின் மார்பைத் தட்டினான்.

மேலும் கூறினான்: "என்னைச் சேர்ந்தவங்க ரெண்டு ஆளுங்க பின்னாலே வந்துகிட்டே இருக்காங்க. அவங்க கண்ணுலே நீ படக் கூடாது. சட்டுன்னு போயிடு, தம்பி! இன்னும் ஒரு விஷயம். துப்பாக்கியின் வெடிச் சத்தம் கேட்டாலும் பயப்படாதே: காளியம்மாளுக்கு ஒரு தீங்கும் வராது. சத்தியம் செய்கிறேன்" என்று கடலையின் கையில் அடித்தான். "இனி நிக்காதே, போயிடு, போயிடு" என்று கடலைமுத்துவைத் துரத்தாக் குறையாய் அனுப்பி வைத்தான்.

கடலைமுத்துவின் தலை மறைந்ததும், வேங்கை வீராசாமி காளியம்மாவை நோக்கினான்.

"குழந்தை! நீ துணிச்சல்காரியின்னு எனக்குத் தெரியும். இருந்தாலும், நான் எதிர் பார்க்கிறவகையில் உனக்குத் தைரியம் இருக்குமா வென்று சந்தேகப்படுகிறேன்."

"உனக்கு என்னத்துக்குச் சந்தேகம் மாமா? நீ எது சொன்னாலும் கேக்கறேன். மெய்யாலும் உன்னை ஏசிப் பேசினதுக்குத்தான் வருத்தப் படறேன்."

"அப்படியா? அது கிடக்கட்டும். இதைக் கேள். இப்போ, வெள்ளை அரசாங்கம் நான் புரட்சிக்காரங்களை வேட்டையாடுவதிலே சாமர்த்தியக்காரன்னு கண்டுக்கிட்டாங்க. அதனாலே இந்த வேலையிலிருந்து என்னை நீக்க மாட்டாங்க. இது எவ்வளவு பாதகமானதுன்னு உன் வாயாலே கேட்க வேண்டியிருந்தது. அப்புறம் துட்டுக் கொடுக்கிற வெள்ளையர் அரசாங்கத்தின் விருப்பப்படி, கடலையை அழிப்பதா, விட்டுவிடுவதா? எது என் கடமை? நீயே சொல்லு."

"உனக்குத் தெரியாதா மாமா?"

"எனக்குத் தெரியுமோ, தெரியாதோ, கடலைமுத்து வழிக்கு இனி நான் போக மாட்டேன், காளியம்மா! இப்போ நான் சொல்லப்போறதைத்தான் நீ நல்லாக் கவனிக்கணும். வெகு சீக்கிரத்திலே என் கீழே வேலை செய்யறவங்க இரண்டு ஆளுங்க இங்கே வருவாங்க. அவங்ககிட்ட நான் சொல்வதை அப்படியே பாடம் ஒப்பிக்க வேணும். 'நான் அந்த உயரமான பாறையின் மேலே உட்கார்ந்திருந்தேன். எக்கச்சக்கமாய்த் தவறிக் கீழே உருண்டு விழுந்து விட்டேன். உருளும் போது ஒன்னு மேலே ஒன்னு மோதி, ரிவால்வரில் ஒரு குண்டு வெடித்து, என் இடது முழங்காலில் பாய்ந்து விட்டதுன்னு சொல்லணும்" என்று கூறிக் கொண்டே வலது கால் சட்டையிலிருந்த துப்பாக்கியை வலது கையால் எடுத்து இடது முழங்காலின் மீது சுட்டுக் கொண்டான்.

"ஐயோ, மாமா!" என்று காளியம்மாள் கதறினாள்.

கீழே விழுந்த வேங்கை வீராசாமியின் உடல் துடித்தது. மெதுவாக, அவன் தன் வலது கையை வெளியே நீட்டி, இரு கைகளாலும் இடது தொடையைப் பிடித்துக் கொண்டான்.

"என்ன வேலை செஞ்சே, மாமா! நான் என்ன செய்வேன்? இங்கே யாரும் இல்லையே! கடலையைக் கூப்பிடட்டுமா?"

"வேண்டாம்!" என்று வேங்கை வீராசாமி கர்ஜித்தான். காளியம்மாவால் அந்த இரத்த வெள்ளத்தைக் கண்டு சகிக்க முடிய

வில்லை: ''என்ன செய்யட்டும், மாமா!'' என்று கெஞ்சினான். மௌனமாய் இருக்கும்படி சமிக்ஞை செய்தான் வீராசாமி.

வெடிச் சத்தத்தைக் கேட்ட அவன் நண்பர்கள் ஓடோடி வந்தார்கள். ''யார் சுட்டது?'' என்ற கேள்விக்கு வேங்கை வீராசாமி காளியம்மாவை நோக்கி, ''சொல்லம்மா'' என்று பெருமூச்செறிந்தான்.

காளியம்மாவும் பாடத்தை ஒப்புவித்தாள். ''அவர் பிழைப்பாரா?'' என்று அவள் கேட்டதற்கு, ''உயிருக்கு ஒரு பயமும் இல்லை. ஆனால், கால் போனது போனதுதான். அடபாவி! உன் ஆட்டமும் ஓட்டமும் அடியோடு போச்சே!'' என்று அவன் நண்பன் சின்னத்தம்பி வருந்தினான்.

''வலி பொறுக்க முடியவில்லை. என்னைப் பெரியகுளம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்களேன்'' என்றுகெஞ்சினான் வீராசாமி.

''இதோ கொண்டு போகிறோம். அம்மா, அவர் உனக்குச் சொந்தமா?''

''ஆமாங்க.''

''எங்களுக்கு ஒரு ஏணி வேணுமே; இல்லாவிட்டால் அவருக்கு நோவில்லாமல் சுமந்து போக முடியாதே!''

''பக்கத்துப் பலாத் தோப்பிலே நாலஞ்சு இருக்குது. வாங்க'' என்று காளியம்மாள் அழைத்துக் கொண்டு ஓடினாள். பிறகு அகலமான ஏணி ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன் மீது துணிமணிகளைப் போட்டு, வேங்கை வீராசாமியைப் படுக்க வைத்தார்கள்.

''நானும் ஆஸ்பத்திரிக்கு வரேன், மாமா!'' என்று கேட்டுக் கொண்டதற்கு வேண்டாமென்றும், வீட்டுக்குப் போகும்படியும் வேங்கை வீராசாமி சமிக்ஞை செய்தான். மெதுவாக நண்பர்கள் தன்னைத் தூக்கிக் கொண்டு போகும்போது வீராசாமி மௌனமாகக் கொடுமையான வலியைச் சகித்துக் கொண்ட போதிலும் அவனுடைய உதடுகள் மட்டும் ஓசைப் படாமல் ''எது கடமை? எது கடமை?'' என்று கேட்டுக் கொண்டேயிருந்தன.

படித்துப் பாருங்கள்!

Bhavan's Journal (Annual Number)

பிரதி ஆகஸ்ட் மாதமும் வெளியாகும் பவன் சஞ்சிகை ஆண்டு மலர் அறிஞர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் வெளியீடு என்பது மிகையல்ல. அந்த ஆவல் எவ்வளவு நியாயமானது என்பதை ஆண்டு மலர் நிரூபிப்பது வழக்கம். அந்த வழக்கம் இவ்வருடமும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதிசங்கரரும், வேதாந்த தேசிகனும், ராமகிருஷ்ணரும், ரமணரும், காந்தியும், பாரதியும் இம்மலர் மூலம் நம்மிடம் பேசுகின்றனர். காஞ்சி, சிருங்ககிரி, துவாரகா ஆசாரியர்கள் நம்மை உத்தம கதியில் ஈடுபடுத்துகிறார்கள். ஆண்டவனை மறந்துவிட்ட கல்வி போதனையின் உற்பாதத்தை உணர்ச்சியுடன் விவரிக்கிறார் ராஜாஜி. உலகம் முழுவதையும் தழுவும் சமய உணர்வை வலியுறுத்துகிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். சம்ஸ்கிருதத்தின் பெருமை பற்றி கே. எம். பணிக்கரும், தமிழகத்தில் தொன்மைக் காலத்திலேயே காணப்படும் வட நாட்டுப் பழக்கங்கள் பற்றியும் டாக்டர் சங்காலியாவும், வடவர், தென்னவர் இருவரும் வணங்கும் அகஸ்தியர் பற்றி டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜியும் எழுதியுள்ள கட்டுரைகள் குறிப்பாக நம் சிந்தனையைக் கிளறிவிடுகின்றன. தேச ஐக்கியம் குறித்து டாக்டர் கஜேந்திர கட்கர் எழுதியுள்ள கட்டுரையில் ஹிந்தி வெறியர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எப்படி உலை வைக்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்பெறுகிறது. பாரதப் பெண் மரபை நவயுக நாரீமணிக்குப் பளிச்சென்று விளக்குகிறார் ஸ்ரீமதி கெ. சாவித்திரி அம்மாள்.

கஜுராஹோவின் அமரச் சிற்பங்கள் உட்படக் கலையம்சங்களும் மலரில் இடம் பெற்றுள்ளன.

(Publishers : Bharatiya Vidya Bhavan, Chaupatty, Bombay - 7; Re. 1.)

மக்கள் தலைவர் ம. பொ. சி.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, டாக்டர் ஹாண்டே, கே. பாலசுப்பிரமணிய அய்யர், அகிலன், கொத்தமங்கலம் சுப்பு, டாக்டர் கே. எம். முன்ஷி, தெ. பொ. மீ. கேரள முதல்வர் ஈ. எம். எஸ். இப்படிப் பல வேறுபட்டவர்கள் ம. பொ. சி.யைப் பாராட்டி எழுதியுள்ளவற்றின் தொகுப்பு இந் நூல். இவற்றைப் படிக்கும்போது பட்டை தீட்டிய வைரம் ஜொலிப்பது போல் ம.பொ.சி. ஜொலிக்கிறார். இப்படிப்பட்டவர் நம்மிடையே வாழவும், அவரைக் காணவும், அவர் பேச்சைக் கேட்கவும் நாம் கொடுத்து வைத்திருக்கிறோம்; பாக்கியசாலிகள் என்ற நினைவு எழுகிறது. இப்படிப்பட்ட நூலைத் தொகுத்து வெளியிட்டவர்கள் பாராட்டுக்குரியவராகிறார்கள்.

பதிப்பாளர்: விஜயஸ் பதிப்பகம், 39, நாகப்பய்யர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5; விலை: ரூ. 1.25.


சுவையான நிகழ்ச்சிகள்

சுகமான ராகங்களை ஆலாபனை செய்து நாலு கீர்த்தனைகளைப் பாடிய பிறகு கடைசியில் சில துக்கடாக்களைப் பாடினால் சிலர் மிகவும் ரசிப்பார்கள். வேறுசிலர் மெல்லிசையை மட்டுமே கேட்டு ரசிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள். பொழுதுபோக்குக்காகப் படிப்பவர்களிலும் இப்படி இரண்டு வகை உண்டு. இரண்டாவது ரகமான துக்கடாப் பிரியர்களுக்காக ஏற்பட்ட நூல் இது. சில துணுக்குகள் முணுக்கென்றிருந்தாலும் பல துணுக்குகள் பளிச்சென்றிருக்கின்றன.

சுவையான நிகழ்ச்சிகள்; ஆசிரியர்; அன்புப் பழம்நீ; கிடைக்குமிடம்: பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை — 1; விலை : ரூபாய் ஒன்று.

மேட்டூர் ஸ்ரீ S. சந்தப்ப அய்ய ரின் பௌத்திரியும் ஸ்ரீ C. சுப்ப ராவின் சிரேஷ்டப் புத்திரியுமான சௌ. சாரதாதேவிக்கும் ஸ்ரீ வெங்கட்ரமண ஆச்சாரியின் குமாரர் சிரஞ்சீவி வி. ராம சந்திரன் B. A. க்கும் சென்னை தர்மபிரகாஷில் சமீபத்தில் வெகு விமரிசையாக விவாஹம் நடந் தேறியது.

வாழ்க மணமக்கள்



அவனுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படத்தான் இல்லை. சபிதா எப்படி மாறியிருக்கிறாள்! அவளை இன்னும் பழைய பட்டிக் காட்டுப் பெண்ணாக அவன் எதிர்பார்க்கவில்லைதான். சாவித்திரி என்ற அவள் பெயர் சபிதா என மாறிய உடனேயே புரியவில்லையா, புது வாழ்வின் கோணம் எத்தனை டிகிரி என்று! சாவித்திரிக்குப் பத்துப் பதினைந்து வயதாக இருக்கும்போதே அவள் பெற்றோர் பம்பாயில் வந்து குடியேறிவிட்டனர். அங்கேயே கொஞ்சம் கொஞ்சமாகப் 'பகடி' தந்து ஒரு சிறிய 'ப்ளாட்'டுக்கு அவர்கள் முதலில் உடைமைக்காரர்களாக இருந்தனர். கீழே ஒருவருக்குச் சொந்தம்; மேலே இன்னொருவருக்குச் சொந்தம்; இடையில் திரிசங்கு சொர்க்கமாய் அமைந்த வாழ்வு!

அந்தச் சிறிய இடத்தில்தான் சாவித்திரி சபிதாவாக மாறினாள். பிறகு அதிர்ஷ்ட தேவதையின் அருளால் அவள் அண்ணனின் வியாபாரம் பெருகவே ஒரு பெரிய 'பிளாட்'டிற்குப் போயினர். காலத்தின் நெடிய சுழற்சிக்குப்பின் இப்போதுதான் அவன் அவர்களைப் பார்க்க வந்திருக்கிறான். உறவென்று நெருக்கமாய் ஒட்டிக் கொள்ள ஒன்றுமில்லை என்றாலும் ஏதோ தூரத்து உறவு.

ஒரே இடத்தில் நிற்காமல் ஊர் சுற்றும் வேலை அவனுடையது. பரபரப்பான சூழ்நிலையிலேயே உருவான அவனுக்கு அது புதிதல்ல. ஆனால் அதே சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டுவிட்ட சபிதாவைக் காணத்தான் அவனுக்கு வியப்பாக இருந்தது.

ரயிலைக் கண்டால்கூட உலக அதிசயமாகப் பார்த்து நின்ற அந்தப் பழைய சாவித்திரிதானா அவள்? கிராமப் பள்ளியில் எட்டாவது படிக்கும் போது அவளை அவன் சந்தித்திருக்கிறான். ஒற்றைப் பின்னலைக் கடைசிவரை விடாமல் பின்னி உல்லன் நூல் வைத்துக் குஞ்சம் கட்டி, சீட்டிப் பாவாடை, வாயில் தாவணியுடன் கன்னம் குழியச் சிரித்து வருவாளே அதே சாவித்திரிதானா இவள்?


வசதிகள் அதிகமாக ஆக வாழ்வின் அழகும், தேவைகளும் அதிகமாகி விட்டன போலும்.

தலகிரிக்கு ஒரே ஆச்சரியம். பருவம் ஒன்று மட்டும்தானா ஒரு பெண்ணை வளமாக்குகிறது? பணமும்தானே? நதியின் சரளமான நீரோட்டம் போல் சபிதாவின் 'கலகல' வென்ற சிரிப்பொலி கேட்டது.

ஓ! 'கிளப்'பிலிருந்து திரும்பிவிட்டாளோ?

அவள் காலடி ஓசையைவிட அவன் இதயத்தின் ஓசைதான் மிக அதிகமாகக் கேட்டது.





''ஹலோ, தலகிரி ! இன்னுமா இங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று அவன் வியப்புடன் கூவினன்.

டென்னிஸ் உடையில் வெள்ளே அரைக்கைச் சட்டை, நிஜார், காலில் வெள்ளே கான்வாஸ்ஷூவும் சாக்ஸுமாக, கையில் டென்னிஸ் மட்டையுடன் காட்சியளித்தான். காற்று அவன் தலேயுடன் கொஞ்சியதற்கு அடையாளமாகக் கலேந்த கேசங்கள், ஓடி விளேயாடிய உடல் தன் சிரமத்தைப் பறைசாற்றும் விதமாய்ப் பெரு மூச்சுக்களே வெளி விட்டுக் கொண்டிருந்தது.

'ஷூ'வைக் கழற்றி ஒரு மூலேயில் சுழற்றி எறிந்தான் அவன்.

''ஒரு நிமிஷம் தலகிரி. 'டிரஸ்' மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன். வெளியில் போகலாம்.''

'பாம்பே டையிங்' டவலே எடுத்தபடி அவன் குளியலறை நோக்கி ஓடியபோது அவன் எண்ணங்களும் எங்கோ ஓடின.

சாவித்திரியின் தந்தை கிராமத்தில் பெரிய பட்டாமணியக்காரர். தினம் தினம் கிராமச் சண்டையைத் தீர்த்து வைப்பதும், பஞ்சாயத்துக் கூட்டுவதுமான வாழ்வு.

படித்துப் பட்டம் பெற்ற பையன் இந்தக் கிராம வாழ்வு பிடிக்காமல் பட்டணம் போனன். பட்டணம் போனவன் பம்பாய் போனன். உயர உயரமான கட்டடங்களேயும், அகல அகலமான சுத்தமான தார் ரோடுகளேயும், மின்ரயில்களும், 'ப்ளே ஓவரில்' கார்களுமாகப் பறக்கப் பட்டாம் பூச்சி வண்ணத்தில் பகட்டுக் காட்டும் பம்பாயை அவனுக்குப் பிடித்து விட்டது. மூச்சுவிடக்கூட முடியாதபடி, இப்புறமும், அப்புறமுமாய்ச் சாலேயை ஆக்கிரமித்து வண்ணம் வரிசை வரிசையாகப் பறக்கும் பெரிய பெரிய 'கார்'களேயும், அதன் சொந்தக்காரர்களேயும் கண்டானே இல்லேயோ, அவனுக்குப் புரிந்து விட்டது. இது வியாபார ஸ்தலம் என்று. திறமை உள்ளவர்களுக்கு எங்கும் இடமுண்டு!

ஒருவர் சொல்வதை மற்றவர் நின்று கேட்க முடியாத அவசரம், பிறர் கருத்துக்களே ஏற்றுக் கொள்ள முடியாத தெளிவின்மை, ஆழ்ந்து சிந்திக்க அவகாசமில்லாத சூழ்நிலே..... இது பெரிய பெரிய பட்டணங்களுக்கே உரிய இயல்பு. இதுபோன்ற பரபரப்பில்தான் வியாபாரமும் செழிக்கும். அவன் தன் கால்களே மெல்ல ஊன்றிய பின் தந்தைக்கும் கடிதம் போட்டான் வரச் சொல்லி.

உழைத்த உடல் ஓய்வு கேட்கும் வேளே அது. கிராமத்தின் அந்த இனிய, எளிய சூழ்நிலேயிலேயே அவர் இருந்துவிட நினேத்தார். ஆனல் முடியவில்லே !

தலேயெடுக்கும் மகனுக்கும், ஆசைக் கனவுகளேத் தேக்கி வைத்திருக்கும் அருமை மகளுக்கும், அற்ப ஆசைகளுடன் வாழ விரும்பும் தம் அன்பு மனேவிக்கும் இடையில் அவர் அற்பமானர் ! இத்தனே பேர்களே



இந்தக் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியே இவ்விதழின் அட்டைப்படமாகத் திகழ்கிறது.

மின்மினி

விமலா ரமணி

யும் பார்த்த போது தன் துயரம் அப்படி ஒன்றும் பெரிதில்லை என்பது போல் அவர் உடனே கிளம்பச் சம்மதித்துவிட்டார். மகனின் வியாபாரத்துக்காக வீட்டையும், இருந்த கொஞ்ச நிலபுலன்களையும் விற்க வேண்டிய அவசியம் நேரிட்டுவிட்ட போது இனி அவருக்கு மட்டும் என்ன இருக்கிறது கிராமத்தில் ?

அவர் கிளம்பி விட்டார். எதையும் பிரிகிறோமே, விட்டுச் செல்கிறோமே என்கிற சலனம் அவருக்கு இல்லவே இல்லை.

துருப்பிடித்துத் தேய்வதைவிட உழைத்துத் தேய்வது மேல் அல்லவா ? அவர் எங்கும் உழைக்கத் தயாராகி விட்டார். 'பம்பாய் மெயிலில் அவர்கள் ஏறியபோது தமிழ்நாட்டையே துறந்து போகிறோம் என்கிற ஆதங்கமும், வேதனையும் அவர்கள் உள்ளத்தில் எழாமல் இல்லை.

இரண்டு நாட்கள் பயணத்துக்குப் பிறகு... இதுதான் பம்பாயா?

ரயில் மெதுவாகச் செல்ல ஆரம்பித்தது. தானும் பம்பாயின் கோலாகலத்தைப் பார்க்க விரும்பியது போல். உயர உயரமான கட்டடங்கள். அதன் காலடியில் அதன் உயரத்தை எடுத்துக் காட்டுவதற்கென்றே அமைக்கப்பட்டது போன்ற சின்னஞ்சிறு குடிசைகள்! ஒவ்வொரு மாடியின் பால்கனியிலும் ஒவ்வொரு நிறமான துணிகள் உலர்ந்து கொண்டிருந்தன ! அந்தத் துணிகளின் விதம் விதமான வண்ணங்களிலிருந்தே அங்குள்ள குடித்தனங்களின் எண்ணிக்கை புரிந்தது.

சிறுமி சாவித்திரி வியப்புடன் பார்த்து வந்த காலம் அது ! பிறகு....?

அவர்கள் பம்பாய்வாசிகள் ஆயினர். தமிழ்நாடு தெற்கோடு முடிந்துவிடவில்லை. இங்கும் தமிழ்நாடு இருக்கிறது. தமிழின் இனிய பேச்சொலிகள் கேட்கின்றன! கிட்டத்தட்ட தமிழகத்தின் இனிய சூழ்நிலை தங்களைச் சுற்றிலும் இருக்கிறதென்று புரிந்து கொண்டு தமிழர் பண்பாடுகளைக் காப்பது போல்.... ஏன் அதைவிடத் தீவிரமாய் இங்கும் அங்கும் இருந்தபடி ஒரு சமுதாயம் வாழ்கிறதென்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். எல்லைக்கோடு எல்லாம் படத்தோடு சரி ! இதயத்துக்கும், பழகும் பண்பாட்டுக்கும்கூடவா எல்லை ? சாவித்திரி சபிதாவாக மாறினள் என்றால் அண்ணன் சந்திரன் தந்த அபரிமிதமான செல்வம். அவள் நினைக்காத வாழ்வு அவளுக்குக் கிட்டியபோது அதை அவள் பரிபூரணமாக அநுபவித்துவிட வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு. சிறிய வீட்டிலிருந்து பெரிய வீட்டுக்கு அவர்கள் ஜாகை மாறியதும் அவனால் இயன்ற அளவு தன் நண்பர்களை யெல்லாம் அழைத்துத் தன் நிலையைத் தம்பட்டம் அடித்துக் கொண்டான் !

அப்படி அழைக்கப்பட்ட ஒருவன்தான் தலகிரி ! அவர்கள் கிராமத்தில் இருந்த போதே பழக்கம் உண்டு. பம்பாய்க்குத் தலகிரி வந்து ஒரு மாதம் தங்கப் போகிறான் என்று தெரிந்ததோ இல்லையோ, உடனே சந்திரன் அழைப்பு அனுப்பி விட்டான் — அந்த ஒரு மாதமும் தன்னுடன்தான் தங்க வேண்டும் என்று !

கடிகாரம் அதே மணியைத்தான் மாற்றி மாற்றிக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் தலகிரி வந்து இரண்டு முழு நாட்கள் ஆகி விட்டன !

அவனைத் தனிமை உணர்ச்சி பாதிக்கக் கூடாது என்பதற்காகத்தானோ என்னவோ, சபிதா அவனுக்கு இணையாக நின்றாள்.

''பாப்' செய்யப்பட்ட தலையும், கை இல்லாத ரவிக்கையும், உடலோடு ஒட்டி அமைந்த சேலையும், விதம் விதமான நாகரிகப் பூச்சுகளும் அவள் வாழ்வது பம்பாய் என்று கட்டியம் கூறிக் கொண்டிருந்தன.

''ஹலோ! இன்னும் என்ன சிந்தனை?'' சிரித்தபடி சபிதா வந்தாள்.

இப்போது அவள் வனதேவதை போல் அழகாக இருந்தாள். ஸல்வார் கமீஸ் அவள் உடலைத் தழுவியபடி அவள் அங்க அழகில் மறைந்தே போயின. இடையின் நெளிவுக்கு ஏற்றாற்போல் வெட்டப்பட்ட உடை மறைந்து இடை சிரித்தது! நடை கொஞ்சியது!

ஓ! அழகு இன்பமான கவர்ச்சி என்பது எத்தனை உண்மை!

ஒயிலாக அவள் காரில் ஏறி அமர்ந்தாள். அவன் இயந்திரமாகப் பின் தொடர்ந்தான். தன்னை இழந்த அந்த நிலையில் அவனுக்கு எதுவுமே புரியவில்லைதான்! 'ஸ்டீயரிங்'கில் தன் மென்மையான வெண் பட்டுக் கரங்களை அழுத்திய வண்ணம், ''எங்கே போகலாம்?'' என்றாள் அவள்.

'' உனக்கு எங்கே தோன்றுகிறதோ அங்கே.''

அவள் காரைக் கிளப்பினாள்.

மனத்தை மயக்கும் மாலை வேளை. மயக்கும் மோகினி போன்ற சபிதா அவன் அருகில். அவள் பூசிய வாசனைத் திரவியங்களின் மணம் அவன் மனத்தை மயக்கியது.

இப்படி ஊர் சுற்றிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலையே கிடையாதா அவனுக்கு? உண்மைதான். ஒரு மாதம் லீவு போட்டு விட்டுத்தான் வந்திருக்கிறான். அவன் வந்த சமயம் ரொம்ப நல்ல சமயம். க்ஷேத்திராடனம் செய்யச் சபிதாவின் பெற்றோர் போயிருக்கின்றனர். வீட்டில் அண்ணன், தங்கையைத் தவிர உறவினர் — தட்டிக் கேட்கும் உரிமை படைத்தவர் யாருமில்லை. அண்ணனுக்கோ 'பிஸினஸ்!' இரவு கோழி கூட்டில் அடைவது போல் இரவு நேரச் சாப்பாட்டுச் சமயங்களில் மட்டும் அவர்கள் ஒன்று சேருவார்கள். மற்ற நேரங்களில் எல்லாம் சபிதாவும், தலகிரியும்தான்!

எப்படிப்பட்ட சந்தர்ப்பம்! ஆனாலும் அவன் தயங்கினான். அவளை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''போன மாதம் என்ன ஆயிற்று, தெரியுமா? ஏதோ 'கான்பிரன்ஸாம்', ஏகப்பட்ட விருந்தினர்கள் வீட்டிலே. அண்ணாவுக்கோ வழக்கம்போல் 'பிஸினஸ்'. நான்தான் அத்தனை பேரையும் ஆரே பால் காலனி என்ன, எலி பெண்டா என்ன என்று அழைத்துக் கொண்டு போனேன்.''







"என்னம்மா இது? பெற வேண்டியவர் முகவரி எழுதவேண்டிய இடத்திலே அனுப்புகிறவர் முகவரியையும், அனுப்புகிறவர் முகவரி எழுதவேண்டிய இடத்தில் பெறவேண்டியவர் முகவரியையும் எழுதிட்டியே?"

"பூ! இவ்வளவுதானே? கம்பெனியை அங்கே மாத்திட்டா போச்சு. இந்த அல்ப விஷயத்துக்குப் போய் இப்படிக் கோவிச்சுக்கிறீங்களே, சார்?"

அவர்களோடும் இப்படித்தான் குஷியாய்ப் பேசிக் கொண்டு போயிருப்பாள். இவளைப் பற்றி என்ன இடமாய் மதிப்பிட முடியும்? சிறு வயதில் ஏற்பட்ட அறிமுகத்தை ஆதாரமாக வைத்து அவள் காதலைக் கேட்க அவனுக்கு மட்டும் என்ன உரிமை? அவள் பழைய சாவித்திரி அல்லவே! அவள் உலகம் முன்பு போலக் குறுகியதல்லவே? பரந்த இந்த உலகில் அவள் சந்தித்த எத்தனை எத்தனையோ நபர்களைப் போல் அவனும் ஒருவன்! இந்த ஒரு மாதத்திய இனிமையான கனவுகள் மறைந்த பின் அவள் யாரோ? அவன் யாரோ?

ஏன் கூடாது? விதைகள் ஒரு புதிய வாழ்வில் மறைந்து தங்களை இழந்துவிடுவதுபோல் அவனும் அவளிடம் தன்னை அர்ப்பணிக்கலாம் அல்லவா?

ஆனால்...? அவனுக்குத் துணிவில்லை.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

'விஹார் லேக்'கில் அவளுடன் இணையாய் நடந்தான்; 'கனேரி குகை'களில் அவளுடன் ஒட்டினாற்போல் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டான்; 'நேஷனல் பார்க்'கிலும், மகாத்மா 'டவரி'லும் அவர்கள் எத்தனையோ சம்பாஷணைகள் நடத்தினர். 'ஜுஹு' கடற்கரையிலும், 'மெரீன் டிரை'விலும் அவர்கள் ஜோடியாய் நடை பயின்றனர். 'லைட் ஹவுஸின்' உயரே ஏறி அந்த வளைய வளையமான இருண்ட படிகளில் அவன் தடுக்கி விழுந்த போது அவள் உதவிக்கு வந்தது உண்டு! அப்படியும் அவளை ஒரு வார்த்தை கேட்க அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை!

''நாளை எலிபெண்டா போகிறோம். அண்ணாவால் வர முடியாதாம். விசைப் படகுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்களும் நானும் மட்டும்தான்.''

அவள் வழக்கம்போல் சிரித்தபடிதான் சொன்னாள்.

'நீங்களும், நானும் மட்டும்தான்' என்ற அந்த வாசகம் அவனை அன்று முழுவதும் தூங்கவிடவில்லை.

மறு நாள்.

ஒரு பெரிய 'பிக்னிக்' போலவே அந்தப் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தாள் சபிதா. கையில் டிபன், காப்பி, டிரான்ஸிஸ்டர் இப்படி என்ன என்னவோ தடபுடலான ஏற்பாடுகள்...

விசைப் படகு நீரைக் கிழித்தபடி முன்னேறிக்கொண்டிருந்தது.

மேலே நீல வானம். கீழே நீலக் கடல். இந்தப் பின்னணியின் இடையில் அழகுச் சிற்பமாய்ச் சபிதா தோற்றமளித்தாள். தலகிரியின் நெஞ்சக் குழியில் பெரும் தடுமாற்றம். 'கூறிவிடு, கேட்டுவிடு' என்று பரபரத்த இதயத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை. விசைப் படகை ஒரு வேகத்தில் ஓடவைத்து விட்டு, அவள் அவன் எதிரே வந்து அமர்ந்தாள். அப்பொழுதாவது அவன் கேட்கலாம் அல்லவா? ஊஹூம், துணிவு ஏற்படவில்லை அவனுக்கு.

''ஸ்டியரிங்'கை விட்டு விட்டு வந்து....''

தனக்குத் தேவையில்லாத கேள்வியைக் கேட்கத்தான் அவனுக்குத் துணிவு ஏற்பட்டது.

''பரவாயில்லை, சரியாக விசையைப் பொருத்திவிட்டுத்தான் வந்திருக்கிறேன்!'' என்றாள் அவள் பெரிதாக இயந்திர நுட்பங்கள் அறிந்தவள் போல.

கரை சேர்ந்த படகு கரையை விலகி நின்றபோது அவன் படகிலிருந்து தரையில் குதிக்கத் தடுமாறினான். அப்பொழுதாவது அவன் தன் கரங்களை உதவிக்கு நீட்டியிருக்கலாம் அல்லவா? அதற்கு அவன் இதயம் எங்கே துணிந்தது?

நிலைதடுமாறிக் கீழே விழுந்தவள் மண்ணைத் தட்டியபடி எழுந்து நின்றாள்.

மீண்டும் அதே சிரிப்பு.

கரடு முரடான அந்த மலைப் பாறையில் எத்தனை துணிவோடு அவள் குதித்து ஓடினாள்! அவன் அச்சத்தோடு பின் தொடர்ந்தான்!

சிற்பங்களின் கலையழகில் தன்னை மறந்து ரசித்து அவளும் ஒரு சிலையாய் நின்றபொழுது அவன் அவளைப் பார்த்தான். ஆனால் அவள் அவனைப் பார்க்கும்போது சிற்பத்தைப் பார்த்தான். இதைப் பார்க்க வேண்டும், அதைப் பார்க்க வேண்டும் என ஓடி ஓடிக் காண்பித்த அவளுக்கு இணையாய் அவனால் ஓட முடியவில்லை.

அவன் கால்கள் வலித்தன. ஆனாலும்... காதல் எத்தனை பொறுமை தரவல்லது! அவளின் சந்தோஷத்துக்காக அவன் தன்னை வருத்திக் கொண்டான்.

அன்று இரவு படுக்கையில் வந்து விழுந்தது தான் தெரியும். கால்கள் கெஞ்சின.

மறு நாள்...

காலை ஐந்து மணிக்கே கதவு தட்டப்பட்டது. எரிச்சல் வந்தது. ஆனாலும் பல்லைக் கடித்துக் கொண்டு கதவைத் திறந்தான்.

''மார்னிங்'' என்றவள், ''சீக்கிரம் அரை மணியில் தயாராய் இருங்கள். வெளியே போக வேண்டும்''- என்றாள்.

அவனுக்கு அழுகைதான் வந்தது.



"'நான் வளர்த்த நாய்'ன்னு ஒரு கதைஎழுதினேன் அல்லவா? அந்தக் கதைக்கு அந்தப் பெயர் வைத்திருக்கக் கூடாதுன்னு இப்போதான் தோணுது."

"ஏன்?"

"அதை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பினாலும் திரும்பி என்கிட்டேயே வந்துடுதே."

இப்படி எத்தனை எத்தனையோ சம்பவங்கள்!

ஒரு நாள்...

'ரூஜ்' பூசப்பட்ட கன்னங்களும், 'லிப்ஸ்டிக்' தடவிய உதடுகளுமாய் அவள் நாகரிக வனிதையாய் நின்றிருந்தாள்.

"எப்படி?" என்று கேட்டபடி வந்தவள், "கிளம்புங்கள்" என்று உத்தரவிட்டாள்.

'எங்கே' என்றுகூடக் கேட்கவில்லை அவன். கிளம்பி விட்டான்.

சபிதா கன்னம் குழியக் கபடமற்ற சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

"ஐயோ... ஐயோ... 'பால்ரூம்' டான்ஸ் ஆடப் போகிறேன். நீங்களும் வாருங்கள். முதலில் இந்தத் தொளபுள உடையை மாற்றி 'டைட்ஸ்' அணிந்து 'போ' கட்டிக்கொண்டு வாருங்கள்.

அவளுக்கு இருந்த அவசரத்தில் அவன் சற்றுத் தாமதித்தாலும் அவளே அவனுக்கு உடைமாற்றி விடுவாள் போலிருந்தது.

அவன் உள்ளே ஓடினான்.

"நீங்கள் இவ்வளவு நன்றாக ஆடுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லையே!"—அவள் வியப்புடன் மெல்ல அவன் காதில் கிசுகிசுத்தாள்.

'ட்ராம்போன், பியானோ, கிதார்' போன்ற வாத்தியங்களின் மெல்லிய பின்னணியில் 'ஸ்லோ ஃபாக்ஸ் ஸ்டார்ட்'டில் அவர்கள் இணைந்தபடி ஆடிக் கொண்டிருந்தார்கள். அவள் கரங்கள் அவன் கரங்களுடன் இணைந்திருந்தன. அவன் முகத்துக்கு வெகு அருகே அவள் முகம் கனவுலக மென் கனவாய் நெருங்கி வந்தது. அவன் கால்களுடன் அவள் கால்கள் இணைந்தாற்போல் எழுந்து உரசி உரசி லாகவமாய் ஆடின. சுற்றிலும் இதே சூழ்நிலைதான்.

அவன் பேசச் சக்தியற்றவனாய் இயந்திரமாய் ஆடிக் கொண்டிருந்தான்.

அவளோ...?

"அதோ அவர்தான் மாஸ்டர் ஆஃப் தி செரிமனி. எம். ஸி." என்று யாரையோ சுட்டிக் காட்டினாள் ஆடியபடியே.

"அடுத்த ஐட்டம் 'போர் பீட் மியூஸிக்'. 'குவிக் ஸ்டெப்ஸ்.' கொஞ்சம் ஓய்வுக்குப் பிறகு மீண்டும் ஆடலாம்."

அவள் எவ்வித உணர்ச்சியும் இன்றிப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் மனம் அந்த இனிமையான சங்கீதத்திலும், அந்த 'ஸ்டெப்ஸ்'களிலுமே லயித்திருந்தது என்பதை அவன் புரிந்து கொண்டான். அவன் ஓர் இணை — அவ்வளவுதான்.

குழந்தைகள் விளையாடும் பொம்மைக் கல்யாணமாய் அவள் விளையாட்டுக்கு அவன் உயிரற்ற ஒரு பொம்மை! அவ்வளவுதானே?

"இப்போதாவது கேள்" என்று மனம் துடித்தது.

"போனமாதம் பாருங்கள் மிஸ்டர் தலகிரி, யாரோ இருவர் அண்ணாவின் விருந்தினராக வந்திருந்தார்கள். அவர்கள் உடையைப் பார்த்து ரொம்பப் பிரமாதமாக நினைத்தேன். இங்கு ஹாலுக்கு வந்து ஆடிப் பார்த்தால் அவர்களுக்கு ஆரம்ப ஸ்டெப்பே தெரியவில்லை! நான் ஒரு மோஷனில் திரும்ப அவர்கள் ஒரு பக்கம்கால் எடுத்து வைக்க.. ரொம்ப வேடிக்கை போங்கள்....." அவன் தோள்களில் கரம் பதித்து அவனை விலக்காமல் விலக்கிய வண்ணம் அவள் ஆடிக் கொண்டிருந்தாள். 'மியூஸிக் பீட்' முடிந்த பின்னும் கூட ஒரு நிமிடம் தன்னை மறந்து ஆடியபின்தான் நிறுத்தினான். அடுத்த நிகழ்ச்சி "ஸ்னோ பால்" என்று அறிவித்தார்கள். அவன் தன் நெற்றி வியர்வையைத் துடைத்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

யாரோ ஒருவன் அவள் அருகில் வந்து, "ப்ளீஸ்" என்றான். அவனுக்குப் 'பார்ட்டனர்' கிடைக்கவில்லை போலும்!

சிறிதுகூடத் தயக்கம் இன்றி அவள் கிளம்பிவிட்டாள். தலகிரி அமர்ந்தபடியே அவர்கள் ஆட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அதுவரையில் பல நிகழ்ச்சிகளை இதுபோன்று அவன் பார்த்திருக்கிறான்; ஆனால் மூன்றும் மனிதனாக! இன்று இதில் ஒன்றிப் பார்க்கும்போது ஏதோ ஒன்று இடறுகிறதே!

அவள் எப்போதும்போல் சிரித்தபடியே தான் அவனுக்கும் இணையாக ஆடிக்கொண்டிருந்தாள்.

"ஸெட் அண்ட் ஷேடோ", "சாசாசா" முதலிய நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன.

அவன் பிறகு எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை. அவளுக்குத்தான் ஏகப்பட்ட கிராக்கி! வந்து அமர அமர அவளை அழைத்துக் கொண்டே இருந்தனர். அவளும் சளைக்காமல் ஆடிக்கொண்டே இருந்தாள். சில சமயம் அவனையும் பார்த்தபடி ஆடினாள். ஒருவேளை அவன் முந்திக் கொண்டிருந்தால் அவனுடனேயே ஆடியிருப்பாளோ, என்னவோ? ஏனோ கேட்க அவனுக்குத் துணிவில்லை.

நிகழ்ச்சி முடிந்த பின் "என் ஆட்டம் எப்படி?" என்று கேட்டாள் சபிதா.

"பிரமாதம்" — ஒரே வரியில் அவன் பதில் அடங்கிப் போயிற்று.

இன்னும் அவன் ஊர் திரும்ப இரண்டே நாட்கள்தான் இருந்தன. அவனுக்கு எதிலும் உற்சாகம் இல்லை; பிடிப்பில்லை. தேடா

மல் கிடைத்த ஒன்றை வேண்டுமென்றே இழக்கும் உணர்வு.

அவன் போய்விடுவான்; அவளை விட்டு விலகிவிடுவான். ஆனால் அவன் மனத்தை விட்டு அவள் விலக மாட்டாள். அவனால் விலக்கவும் முடியாது. அவள் மீது அவன் கொண்டது கண்மூடித்தனமான காதல். ஆனால் துணிவில்லாத காதல்! அவனுக்கென்ன... அவனுடைய தனி உலகம் எப்போதும் அவனுக்கு உண்டு!

அவன்தான் அவளைப் பற்றி நினைத்து, நினைத்து வெந்து மடிவான். பகைமையான நினைவுகளுக்காகத் தன் இளமையைக் கருக்கிக் கொள்வான். ஊமையின் கனவாய் அவன் ஆசைகள் அவனுடனேயே சமாதி அடையும். கேட்டுவிடலாம்தான். ஆனால்... ஆனால்... கேட்டு அவள் ஏதாவது தாறுமாறாகப் பதிலளித்துவிட்டால்...? அவள் உலகம் தனி. அவளுக்கு முழு உரிமை உண்டு. அந்த உலகின் சுதந்திரப் பறவையாய் அவள் வாழ்கிறாள். இவன் குறுக்கிட்டால் அவளின் அந்த இனிய கனவு சலனப்படலாம்; ஏன்... இவன் ஏதாவது கேட்டு அதனால் அவள் மனம் உடைந்தால் இனி கைநீட்டிக் காத்திருக்கும் வாழ்வின் இனிமை அவளுக்குச் சுவைக்காமல் போகலாம். அவள் சந்தித்த மனிதர்கள் இதுவரையில் அவளைப் போலவே எந்த உணர்ச்சிக்கும் ஆளாகாத நாகரிக ஓட்டத்துக்குப் பலியானவர்களாக இருக்கலாம்.

அவன் அந்த இரண்டு நாட்களையும் மோனத்தில் கழிக்க நினைத்தான்.

அன்று...

தன்னை மறக்க ஒரு 'காக்டெயில்' விருந்துக்குப் போனான். அளவுக்கு மீறியே அவன் தன்னை 'மறந்த' நிலை அது.

அப்போது...?

அந்த இடத்தில் அவளைப் பார்த்தபோது அவனால் தாங்கவே முடியவில்லை.

யாரோ ஒருவனுடன் அவள் மெய் மறந்து சங்கீதத்தில் லயித்த வண்ணம் ஆடிக்கொண்டிருந்தாள்.

அவன் உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. அடங்கிக் கிடந்த, இல்லை அவன் அடக்கி வைத்திருந்த ஆவேசம் பீறிட்டுக் கிளம்பியது! தூங்கிக் கிடந்த துணிவு சிலிர்த்தெழுந்தது.

தடுமாறியபடி எழுந்து நின்றான். ''சபீதா'' என்று கூறிய அவன் அவள் அருகில் சென்றான்.

பாதி ஆடிக் கொண்டிருந்த 'பார்ட்னர்' திகைத்தான். அவனிடமிருந்து அவளைப் பிரித்துத் தன்னுடன் இணைத்து ஒரு நிமிடம் ஆடினான். ஒரே ஒரு நிமிடம்... மறு நிமிடம்—

யாரும் எதிர்பாராத நிலையில் அவள் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தான்.

''வா வீட்டுக்கு'' என்று கத்தியவன் அவளைத் தரதரவென்று இழுத்தபடி பிரமித்து நிற்கும் அந்த ஹாலைக் கடந்தான்.

சபீதா செயலிழந்தவளாய் அவன் பின்னே தொடர்ந்து கொண்டிருந்தாள்.

'**டே**பிள் லேட்' எரிந்து கொண்டிருந்தது.

வளையம் வளையமான சிகரெட் புகை சூழ அவன் பைத்தியக்காரனைப் போல் அமர்ந்திருந்தான். அவன் தலை கலைந்திருந்தது. தலை மட்டும்தானா?

என்ன காரியம் செய்து விட்டான்? எப்படிப்பட்ட அவமானத்துக்கு அவளை ஆளாக்கி விட்டான்! அவன் நாளை ஓடி விடலாம். ஆனால் அவள் இங்கு வாழப் போகிறவள், அல்லவா? அவள் அழைத்து வந்த விருந்தாளியைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?

'உணர்ச்சி என்பது உள்ளத்தின் குடிவெறி' என்பதை அவன் நிரூபித்துக் காட்டிவிட்டானா?

இன்னும் ஒரே ஒரு நாள்! அதற்குள் இப்படி ஒரு கலாட்டா! நாளை விடிந்தால் அவள் முகத்தில் எப்படி விழிப்பான்? தன்னை மறந்த நிலையில், எதுவும் புரியாத நிலையில் அப்படியே கிடந்திருக்கலாமோ? நினைவுகள் நெஞ்சின் முட்களாக உறுத்தின.

அவன் அமைதியின்றி எழுந்தான்.

அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். முறையாக விடை பெற்றுக்கொள்ளக்கூட அவனுக்குத் துணிவில்லை! பலமுறை கிழித்துக் கிழித்துக் கடைசியில் கஷ்டப்பட்டு எழுதிய அந்த நாலு வரிகளை மீண்டும் படித்தான்.

'அன்புள்ள சபீதா!

என்னை மன்னித்துவிடு. திடீரென உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். இப்படி ஒரு சம்பவம்

நீங்கள்தானா?

தன் பெயரிலிருந்த 'செக்'கைப் பணமாக்கிக் கொள்ள விரும்பிய ஒரு பெண், பாங்குக்குச் சென்று, பணம் கொடுக்கும் குமாஸ்தாவிடம் 'செக்'கைக் கொடுத்தாள்.

செக்கிலிருந்த பெயரைப் படித்த குமாஸ்தா, ''இது நீங்கள்தானா?'' என்று கேட்டார்.

உடனே அக்குமரி தன் கைப்பையைத் திறந்து அதிலிருந்த கண்ணாடியில் தன் முகத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டே, ''ஆம். இது நானேதான்!'' என்றாள்!



ஆதாரம்: ''காரனெட்''
தகவல்: எஸ். சம்பத்குமார்



பிரபலமான அமெரிக்க எழுத்தாளரான லூயிபிஷர் ஒரு சமயம் வார்தாவில் காந்திஜியுடன் தங்கியிருந்தார். ஆசிரம உணவையே அவரும் சாப்பிட்டார். ஒரு நாள் இருவரும் சேர்ந்து உண்டு வருந்தும்போது காந்திஜி பிஷரைப் பார்த்து "உங்களுக்குக் காய்கறிகள் பிடிக்கவில்லையா?" என்று கேட்டார். "ஆமாம், ருசி எனக்குப் பிடிக்கவில்லை" என்று பதிலிறுத்தார் பிஷர். "அப்படியானால் எலுமிச்சைப் பழமும் கொஞ்சம் உப்பும் சேர்த்துக் கொள்ளுங்களேன்" என்றார் காந்திஜி. "அது இருக்கும் ருசியையும் கொன்று விடுமே?" என்று பிஷர் வினவ, "இல்லை, இல்லை. ருசியை அதிகப்படுத் தந்தான்!" என்றார் அண்ணல். உடனே பிஷர், "ஓகோ, நீங்கள் அகிம்சாவாதியாயிற்றே! அதனால்தான் ருசியைக் கூடக் கொல்ல மாட்டீர்கள் போலிருக்கிறது!" என்று கூறிச் சிரித்தார். காந்திஜியும் விட வில்லை. 'மனிதர்கள் மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு இந்த ஒன்றைத் தான் கொல்வார்கள் என்றால் அதைப்பற்றி நான் கவலைப் படமாட்டேன்' என்றார்.

தகவல்: முத்து சந்திரசேகரன்

நிகழாமல் இருந்திருந்தால் உன்னிடம் முறையாக விடைபெற்றுச் சென்றிருப்பேன்'

இதற்குமேல் கடிதத்தை எப்படி முடிப்பதென்று புரியாமல் அமர்ந்திருந்தான்.

கதவு தட்டப்படும் ஒலி கேட்டது.

மெதுவாக எழுந்தான். யாராக இருக்கும்? திறக்கப்பட்ட கதவில் நுழைந்தது...?

சந்திரன்! இந்த நேரத்திலா?

அவன் முகத்தில் ஆழ்ந்த வேதனை சூழ்ந்திருந்தது. நண்பன் கூறியதைக் கேட்கக் கேட்க அவனுக்கு ஒரே வியப்பு!

சந்திரன் போய் வெகு நேரமாகியும் அந்த அதிர்ச்சி அவனை விடவில்லை. கடிதத்தை முடிக்கும் வழி தெரிந்து விட்டது! இனிக் கவலை இல்லை...

அவசரம் அவசரமாக அதில் ஏதோ கிறுக்கினான், தன் உடைமைகளை 'சூட் கேஸி'ல் திணித்தான், மெதுவாக, மெதுவாகக் கதவைத் திறந்தபோது...

சபிதா!

தலகிரியின் சப்த நாடிகளும் ஒடுங்கின.

"சபி...நீ...நீ..."

அவள் மெல்லச் சிரித்தாள்.

அந்த நீள் இரவின் கருமையில் பயங்கர அமைதியில் அந்தச் சிரிப்பு துல்லியமாக, மெய் சிலிர்க்க வைக்கும் இன்பக் காவியமாகக் கேட்டது. அவள் அணிந்திருந்த 'நைட் கவுனில்' புசுபுசுத்துக் கிடந்த மயிர்க் கற்றையில் ஓர் இன்பக் கவிதையே ஒளிந்து கண்ணாமூச்சி ஆடியது.

"பழையபடி கோழைத்தனம் தலைதூக்கி விட்டதா?"

மடித்து மேஜை மீது வைக்கப்பட்ட கடிதத்தை அலட்சியமாகச் சுட்டிக் காட்டியபடி அவள் கேட்டாள்: "கடிதம் எழுதி வைத்துவிட்டு ஓடுகிறீர்களா?"

அவளே தொடர்ந்தாள்:

"நீங்கள் என் கன்னத்தில் அறைந்தபோது எத்தனை மகிழ்ந்தேன், தெரியுமா?"

அவன் திகைத்தான். என்ன சொல்கிறாள் இவள்?


"சபி.... நீ சொல்வது....!"

"புரியாதுதான். கேளுங்கள், புரியும்."

அவள் பேச்சு ஒரு கதையாய் நீண்டது.

"தலகிரி... ஆண்களுக்குக் காதல் ஒரு விளையாட்டு. அது அவர்கள் வாழ்வின் ஒரு பகுதிதான். ஆனால் பெண்களுக்கு அதுதான் வாழ்வு! அதில்தான் முழுமை அடங்கியிருக்கிறது. எனது இந்த நாகரிக வேடத்தைப் புகழ்ந்தவர்கள் ஆயிரமாயிரம் பேர்கள். என்னோடு இணையாய் இணைந்தவர்கள் அதைவிட அதிகம். ஆனால் அழகு ரோஜா, கைபடாத ரோஜா கெட்டுப் போகிறதே என்று வருந்தியவர்கள் ஒருவர்கூடக் கிடையாது தலகிரி, ஒருவர்கூடக் கிடையாது. உங்களையும் முதலில் எல்லோரையும்போல் தான் நினைத்திருந்தேன். ஆனால் நீங்கள் எனக்காக, என் பெண்மைக்காக மனத்தில் அழுவது புரிந்தது. ஆனால் அதை வெளியிடும் துணிவில்லை உங்களுக்கு. எல்லை மீறிய துணிவை நான் வெறுக்கிறேன். ஆனால் உரிமையுள்ள துணிவை நான் ஆதரிக்கிறேன். நான் எதைச் செய்தாலும் எனக்காகப் 'பிரமாதம்' என்றீர்கள். நான் எப்படி உடை உடுத்தினாலும் என் மனம் நோகக் கூடாது என்பதற்காக ஆதரித்தீர்கள். நான் எங்கு அழைத்தாலும் என் விருப்புக்காக ஓடி வந்தீர்கள். தனக்கென்று தனிப்பட்ட அபிப்பிராயம் இருந்தும் அதை வெளியிடும் துணிவின்றி என்னுடன் இணைந்தீர்கள். நான் மற்றவருடன் நடனமாடிய போது மனத்துள் புழுங்கியவாறு அமர்ந்திருந்தீர்கள். ஏன்? அதை வெளியிடக் கூடாதா? 'உன்னை என் உரிமை ஆக்கிக் கொள்ளப் போகிறேன். நீ எனக்குத்தான் சொந்தம். இந்தக் கோமாளி உடையும், கோபுரக் கொண்டையும் வேண்டாம். கொண்டவன் போல் என் நிழலாய் வா!' என்று கூறுவீர்களெனக் காத்திருந்தேன்.

"மனத்தில் இந்த எண்ணமிருந்தாலும் வாக்கில் துணிவின்றி இருந்தீர்கள். என் இளமையையும், அழகையும் கொள்ளையிடக் காத்திருந்த கூட்டத்திலிருந்து நீங்கள் வேறுபட்டவராக இருந்ததால்தான் உங்களை மனப்பூர்வமாகக் காதலித்தேன். என் இந்த வேடத்தை உண்மை என்று நம்பிவிட்டீர்கள். பம்பாய் வந்த புதிதில் நான் விரும்பி ஏற்ற வேடம்தான் இது. ஆனால் இது நாளாக ஆக அண்ணனின் வியாபாரத்துக்குத் துணை புரியும் போலி வேடமாகப் போய்விட்டது! தன் வாடிக்கையாளர்களை வரவேற்கும் ஒரு "ரிஸப்ஷனிஸ்ட்"டாக அவன் என்னைக்



''என் காருக்கு ஒரு டிரைவர் தேவையென்று கேள்விப்பட்டு வந்தேன் என்று சொல்லிறியே. இதற்கு முன் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?''

'' கை வண்டி தள்ளிட்டு இருந்தேன்!''

கருத ஆரம்பித்தபோதுதான் இந்தப் போலிப் போர்வையைக் கிழித்தெறிந்துவிட்டு ஓடி வரத் துடித்தேன். நான் அறிந்த எத்தனை எத்தனையோ விசித்திர மனிதர்களிடம் இதயத்தை.... நான் விரும்பிய இதயத்தைத் தேடினேன். அத்தனை பேரும் கரைந்துவிடும் பனிக் கட்டிச் சிலையை இலட்சியமாகக் கொண்டு ஆடம்பரமாகப் பேசினார்கள். உண்மையில், உயர்ந்த இலட்சியத்துடன் உண்மையான முழு மனிதனை உங்களைத் தான் முதன் முதலில் சந்திக்கிறேன். ஆனால் நீங்கள் என்னைத் தலைகீழாய்ப் பார்த்தீர்கள். மாறுபட்ட காட்சிதான் அதில் தெரியும். உங்களிடம் நான் எதிர்பார்ப்பது துணிவு ஒன்றுதான். நீங்கள் மயங்கிய நிலையிலே என்னைப் பல பேர் முன்னிலையில் அடித்த போது எத்தனை மகிழ்ந்தேன், தெரியுமா? உங்களிடம் துணிவு இருக்கிறது. ஆனால் அது உறங்கிக் கிடக்கிறது. அதைச் சிலிர்த்தெழச்செய்ய வேண்டும், அவ்வளவுதான். மின்மினியான என் பகட்டில் மயங்கியவர்கள் பலர். ஆனால் மின்மினி மீது இரக்கம் கொண்டவர்கள் யாருமே இல்லை. அப்படி ஒருவரை எதிர்பார்த்து ஏமாந்து நின்ற நிலையில்தான் தாங்கள் எனக்குக் கிடைத்தீர்கள். கோழையின் தடுமாற்றமின்றி என் வாழ்க்கைப் பாதையில் தாங்கள் என்னுடன் நடக்கச் சம்மதித்தால் நாம் பழையபடி கிராமத்துக்கே போய் அந்த இனிய சூழலில் ஆடு புலி ஆட்டம் ஆடலாம்!''

நெடிய பேச்சுக்குப்பின் அவள் சற்று நிறுத்தினாள். படபடத்த அந்த உதடுகளையும், குறுகுறுத்த அந்தத் தூக்க விழிகளையும் உற்றுப் பார்த்தான் அவன். கரம் நீட்டத் துடிக்கும் அந்த அபலைப் பெண்ணின் கரங்களுக்கு இணையாக அவன் தன் கரங்களை உயர்த்தியபோது?

'சட்'டென ஒரு நினைவு!

புத்தம் புதிய ரோஜா மலர் ஒன்று மேஜை மீது கிடந்தது. நேற்று இரவு அவன் வீடு திரும்பும்போது வீட்டின் வாசற்படியில் கிடந்தது. புத்தம் புதியது. தலையில் சூடிய அடையாளமோ, கைபட்டுக் கசங்கிய அடையாளமோ இல்லை. எப்படியோ கை நழுவிக் கீழே விழுந்திருக்கிறது. யார் காலிலும் அது பட்டுவிடக் கூடாதே என எண்ணி அந்த நிலையிலும் அதை அவன் உள்ளே எடுத்து வந்து மேஜை மீது போட்டிருந்தான்; ஆனாலும்....?

மலர் மெல்ல மெல்ல வாடிக் கொண்டிருந்தது.

பளபளத்த மின்மினி ஒன்று பறந்து கொண்டிருந்தது.

''தலைகிரி, இன்னுமா சிந்தனை?''

அவன் முகத்தைத் தன்புறம் திருப்பி அவள் அன்புடன் கேட்டாள்.

ஓ! எத்துணை இன்பமான நினைவு! அவன் எதிர்பார்த்த அந்த நேரம்.... அவன் துடிதுடித்துக் காத்திருந்த அந்தச் சந்தர்ப்பம்.... அவன் காலமெலாம் மறக்காமல் இந்தச் சுவையான அநுபவத்தின் இனிய நினைவிலேயே வாழலாம். வாழலாம்.... வாழ முடியும்.... அவள் அவனைக் காதலிக்கிறாள்! அது போதும்.... அவன் வெற்றி பெற்றவன். அவன் வெற்றி பெற்றவன். ஆனால்....

அவன் இன்னமும் கோழைதான்! துணிவற்றவன்தான்!

''சபி....! என்னை மன்னித்துவிடு....நான் மணமானவன். அந்தக் கடிதத்தில் விவரம் இருக்கிறது.....''

அவள் எதிர்பார்க்கவில்லைதான். 'பளார்' என்ற அந்த அறையை அடுத்து....

''போங்கள்.... எனக்குப் பைத்தியம் பிடிக்குமுன் போங்கள்.... போய்விடுங்கள், இங்கிருந்து....''

அவள் அலறினாள். அவன் தலை குனிந்தபடி வெளியே நடந்தான்.

பக்கத்து அறையில் இந்தச் சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''ஓ! என் உயிரினும் இனிய நண்பனே.... நீ வாழ்க.... என் நட்பைத் துறக்கும் துணிவின்றி, என் வேண்டுகோளுக்கிணங்கி, நான் கூறிய பொய்க் கதைகளை உண்மை என நம்பி என் தங்கையைத் துணிவோடு துறந்த என் அன்பு நண்பனே.... உனக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னைத்தான் தன் மணாளனைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் சபிதா இன்று மாலை தன் தோழி ஒருத்தியிடம் கூறியதைத் தற்செயலாகக் கேட்டதும் நல்லதுதான். நான் முந்திக் கொண்டேன். நீயும் விடைபெறும் கட்டம் நெருங்கிவிட்டது; நீ வாக்குத் தவறாமல் நடந்து கொண்டாய்! மகிழ்ச்சி.... சபிதா.... அவள் ஒரு மின்மினி. ஆம்; என்றும் அவள் மின்மினியாக எனக்கு..... என் சுயநலத்துக்குத்தான் வழி காட்ட வேண்டும்.....''


ஒரு நிமிட உணர்ச்சி வயப்பாட்டுக்குப்பின் மீண்டும் அவன் பழைய 'பிஸினஸ்மேன்' ஆனான்.

ஆனால் மின்மினியோ....

ஒளி இழந்து அழுது கொண்டிருந்தது.

தூரத்தில்....?

மின்மினியின் வெளிச்சமின்றி இருளில் ஒரு 'கோழை' தைரியமாய்த் துணிவுடன் நடந்து கொண்டிருந்தான்.



■ சினிமா சிந்தனை ■

பாலைத் தருவோம்;

படம்: மாடி வீட்டு மாப்பிள்ளை
பாடல்: கவிஞர் கண்ணதாசன்

காலாடை மறைந்தது
மேலாடை குறைந்தது
பாலாடை போன்ற மேனி திறந்தது
நாகரிக உலகத்திலே ரகசியமென்ன?
நாலுமுழம் கூந்தலுக்கு அவசியமென்ன?
அறுபதேழில் உடம்பைக்கூட மறைப்பது
என்ன?
ஆண்டவன்தான் இதைப் படைத்தான்
அதிசயமென்ன?

பல வருடங்களுக்கு முன் வெளியான தேவதாஸ், மிஸ்ஸியம்மா, பாச மலர், பாலும் பழமும் போன்ற படங்களின் பாடல்கள் இனிமையாக இருந்தன. இருந்தும் வருகின்றன. ஆனால் இன்று...? படப் பாட்டுக்களில் மிகவும் ஆபாசமான வரிகள் இடம்பெற்று வருகின்றன. கேட்கவே காது கூசும்படியாக இருக்கிறது.

இந்த நிலை மாறக் கவிஞர்களும், தயாரிப்பாளர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

—'பொம்மை'யில் ஸ்ரீமதி எம். எஸ். லீலா பொன்னமராவதியி லிருந்து வேதனைக் குரல் எழுப்புகிறார்.

இது பற்றித் திரு கண்ணதாசன் அவர்களைக் கேட்ட பொழுது அவர் தெரிவித்த கருத்து:

திரைப் பாடல்களில் ஆபாசமான கருத்துக்கள் வருவதாக ஒரு குரல் சில ஆண்டுகளாகவே எழுந்துள்ளது. இது பற்றிக் கவலை தெரிவிப்போரில் மாதர்கள் முதலிடம் வகிக்கிறார்கள்.

ஆபாசமான கருத்துக்கள் என்றால் என்ன?

பால் உணர்ச்சி பற்றிய உவமைகள் — அதிலும் கொஞ்சம் பச்சையான உவமைகள் — சமீப காலத் திரைப் பாடல்களில் வருகின்றன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

நமது இலக்கியங்களில் இல்லாத எதையும் நானோ, பிறரோ சொல்லி விடவில்லை. அந்த இலக்கியங்களை அதிகம்பேர் படிக்கவில்லை. திரைப் பாடல்களை அதிகம் பேர்கள் கேட்கிறார்கள் என்பதைத் தவிர இரண்டுக்குமிடையே வேறு வித்தியாசங்களில்லை.

மருந்தும் கொடுப்போம்!

படம்: திருமால் பெருமை
பாடல்: கவிஞர் கண்ணதாசன்



மலர்களிலே பல நிறம் கண்டேன் - திரு
மாலவன் வடிவம் அதில் கண்டேன்
மலர்களிலே பல மணம் கண்டேன் - அதில்
மாதவன் கருணை மனம் கண்டேன்.

பரபரப்பான சமுதாய வாழ்க்கையில், பசியும், காமமுமே முதலிடம் வகிக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. பாடல்கள் மூலம்தான் சமூகம் கெட்டுப் போகிறது என்ப தில்லை.

தற்காலத் தமிழ்ப் படங்களில் வரும் குறைந்த ஆடையும், கட்டித் தழுவும் காத லும் காட்டாத ஆபாசத்தைத் திரைப் பாடல்கள் ஒன்றும் காட்டி விடவில்லை.

காதல் என்பதிலேயே மனக்கூறு, உடற் கூறு என்று இரண்டு கூறுகள்தான் உண்டு. அச்சம், நாணம், மடம் என்றெல்லாம் மனக் கூறுகளைச் சொல்லி, சொல்லி அலுத்தபின், உடற்கூறுகளைத்தான் கட்டிக் காட்டவேண்டி யிருக்கிறது.

மக்களின் ரசனையை வளர்ப்பது கலை!

இயற்கையாக அவர்களுக்கு உள்ள ரசனை யைத் திருப்திப்படுத்துவது தொழில்!

நாங்கள் ஒன்றும் கலைத் தாய்க்குச் சேவை செய்து கொண்டிருக்கவில்லை!

தொழில் நடத்துகிறோம்!

எதைப் போட்டால் படம் ஓடுகிறதோ, அதைப் போடுவோம்! அதைப் போடாவிட் டால் படம் ஓடாது; நாங்கள்தான் ஓட வேண்டியிருக்கும்.

தமிழர்களுடைய ரசனையே மிகவும் கீழான பால் உணர்ச்சியிலும், செயற்கைச் சண்டை களிலும்தானிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள நான் அஞ்சவில்லை.

அதற்காகச் சுவைக் குறைவான பாடல் களையே முழுக்க முழுக்கவும் எழுதுவதில்லை. பால் கொடுக்க வேண்டிய நேரத்தில் பால் கொடுக்கிறோம். மருந்து கொடுக்க வேண்டிய நேரத்தில் மருந்து கொடுக்கிறோம்.

காம உணர்ச்சியின் விகாரம் என்பது தவிர்க்க முடியாதது. அதனைக் கலை உணர்ச்சியோடுதான் பார்க்க வேண்டும். ஒழுக்கத்தைப் போதிக்கும் நீதி நூலாக ஒவ் வொரு பாடலும் விளங்க முடியாது.

ஒழுக்கக் கேட்டிலிருந்து ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளும் பண்பாடு நமது சமுதாயத்துக்கு இருக்கும்போது, இத்த கைய பாடல்கள் அவர்களை எப்படிக் கெடுத்துவிட முடியும்?

பேட்டி கண்டவர்: ''**திரைத் தருவி**''

டக் டக் ஒலியும் ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ தையலார் விரலும்

இன்று நவயுக நாரீமணிகளின் மென் விரல் பட்டு, எழுத்துக்களை உதிர்த்து வரும் தட்டெழுத்து இயந்திரம் தோன்றிய காலத் தில் குருடர்களுக்காக உபயோகப்பட்டு வந்தது.

1808ம் ஆண்டில் டாரி என்ற இத்தாலியர் பிறவிக் குருடியான இத்தாலியக் கோமகள் ஒருத்திக்காக, ஹென்றி மில் கண்டுபிடித்த தட்டெழுத்து இயந்திரத்திலிருந்த குறை பாடுகளை ஓரளவு நிவர்த்தி செய்து புது இயந்திரத்தை உருவாக்கினர். ஆனால் எழுத்துக்கள் பொருத்தப்பட்ட கம்பிகள் மை தடவிய நாடாவுடன் உராய்ந்து, காகி தத்தில் படியும்போது எழுத்துக்களைப் பிரதிபலிக்கும் விதத்தைச் சேவியர் பிரா கின்தான் கண்டு பிடித்தார்.

இதுவரை வெறு அதிசயமான பொரு ளாகக் கருதப்பட்டு வந்த இந்த இயந் திரத்தைப் பொதுஜனக் கண்காட்சியில் வைத்துப் பொதுஜன ஆதரவைப் பெற வேண்டும் என்று விரும்பினர் லண்டன் நகர வாசி ஒருவர்.

லண்டனைச் சேர்ந்த அச்சகத் தொழிலாளி கிரிஸ்டபர் ஹோல்ஸ் இந்த நூதன இயந் திரங்களின் நுணுக்கங்களை ஆராய்ந்து மேலும் எளிதான முறையில் இதனைக் கையாளும் விதங்களைக் கண்டறிந்தார். தன் சுய முயற்சி யால் அவர் உருவாக்கிய இயந்திரத்தின் பெயர் 'ரெமிங்டன்'.

தட்டெழுத்து இயந்திரங்கள் செல்வந்தர் களின் இன்றியமையாத சாதனங்களில் ஒன் ருகக் கருதப்படலாயின. மேலும் தட் டெழுத்தின் மூலம் செய்தி அனுப்புவது விநோதமான ஒன்றாகவும் பெருமை தரத் தக்கதெனவும் நம்பப்பட்டு வந்தது. பில டெல்பியாவில் 1875ல் நடந்த கண்காட்சி ஒன்றில் இந்த இயந்திரத்தின் உதவியால் வாழ்த்துச் செய்தி அனுப்ப 25 சென்ட் வீதம் வசூலிக்கப்பட்டதில் ஏராளமான தொகை வசூலாயிற்று.

ஆங்கில எழுத்துக்களைக் கோவையாக எழுத 'சிறிய' எழுத்துக்களும் 'பெரிய' எழுத் துக்களும் தேவைப்படுவதால் ஒரே கருவி யில் இவ்விரு எழுத்துக்களையும் பயன்படுத்த வழி கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று.

1878ல் 'ஷிப்ட் கீ ஸிஸ்டம்' என்ற முறை யில் உருவாக்கப்பட்ட இயந்திரத்தில் இக் குறை நிவர்த்தி செய்யப்பட்டது.


தட்டும் எழுத்துக்கள் யாவும் உருளையின் அடியில் உள்ள காகிதங்களில் விழுந்து வந்த தால் அவற்றை அவ்வப்போதே பார்த்து தவறுகளைத் திருத்தவோ, எழுத்துக்கள் சரியாக விழுகின்றனவா என்பதைக் கண்டு கொள்ளவோ இயலவில்லை. தட்டெழுத்து அடிக்கும்போதே காகிதத்தில் எழுத்துக்களை உட்கார்ந்தபடியே பார்க்கும்படி 1883ல் ஒரு கருவி உருவாக்கப்பட்டது.

1883ல் இங்கிலாந்தின் பிரதம மந்திரி யாக இருந்த கிளாட்ஸ்டன் இக்கருவியைப் பெரிதும் வெறுத்தார். தன் கைப்படக் கடி தம் எழுதாமல் இக்கருவி மூலம் கடிதங்கள் எழுதப்பட்டு வருவதை மரியாதைக் குறைவு என்று கருதித் தீவிர எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். இது ஓரளவு இக்கருவி உற்பத்தியைப் பாதித்ததில் வியப்பில்லை. கிளாட்ஸ்டன் மறைவுக்குப் பிறகு இக்கருவியின் மேலிருந்த துவேஷம் மறையலாயிற்று. பெண்கள் பலர் தட்டெழுத்துப் பயிற்சி பெற்று, ஆண்களுக்கு ஈடாக வேலை செய்ய ஸ்தாபனங்களுக்குக் கிளம்பிவிட்டனர்.

— ''**ஸ்வஸ்திகா**''

"லாபத்தை எதிர்பார்த்துச் செய்யும் தொழில்களில் விவசாயமே தலை சிறந்தது. உற்பத்தியைப் பலவகையில் பெருக்கவல்லது. ஆத்ம திருப்தியைக் கொடுப்பது. மேலும் சுதந்திர வாழ்விற்கு உகந்தது."

— சிசரோ



தேவைக்கேற்ற சேவை!

இதுவே சரியானது. யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குத் தனிப்பட்ட முறையில் உதவும் நிறுவனங்கள். சென்னை மாநில கூட்டுறவு வங்கியானது மாவட்டங்களிலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள், இதர கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவைகளின் மூலம் இம் மாநிலத்தின் விவசாய முன்னேற்றத்துக்காகச் சிறந்த பணியாற்றிவருகிறது. வேளாண்மை செழிக்கவும் அதன்காரணமாக இம்மாநில விவசாய நடவடிக்கைகள் சிறப்புற்று விளங்கவும் சென்னை மாநில கூட்டுறவு வங்கி, கண்ணுங் கருத்துமாய்ப் பாடுபட்டு வருகிறது. தான் புரியும் தொண்டு வெற்றி கண்டுள்ள காரணத்தால் இத்துறையில் ஏற்பட்டுவரும் நிறைவு குறித்து இந்த வங்கி பெருமகிழ்ச்சி கொள்ளுகிறது.

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள கூட்டுறவு மத்திய வங்கியில் விசாரிக்கவும்

உழவரின் உற்ற நண்பன்

சென்னை மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

271, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1

ஆர். கனகசபை M.L.A
தலைவர்

டி. வர்த்தமானன்
செயலாளர்

MSCB-107

தினம் ஒரு மணி நேரம்

குடும்பப் பிரச்னை

''உங்கள் பையனின் கல்வி குறித்து உங்களுடன் பேச விரும்புகிறோம். தயவு செய்து இவ் வாரம் ஒரு நாள் பள்ளிக்கு வரவும் — தலைமை ஆசிரியை'' இப்படிப் பெற்றோர்களுக்கு அடிக்கடி எழுதுகிறோம். ஆனால் பெற்றோர்கள் வருகிறார்களா? வருவதில்லை! தங்கள் பிள்ளைகளின் நலனில் பெற்றோர்களுக்கு அக்கறை இல்லையா? இல்லாமலில்லை. ஆனால் ஏதோ ஒரு விதமான அசிரத்தை. அவர்களுக்கு எவ்வளவு முக்கியமான அலுவல்களோ? ''உங்கள் மகன்.... பாடத்தில் போதிய திறமை காண்பிக்கவில்லை. விசேஷ கவனம் தேவை'' என்று நான் எழுதினால், ''நீங்களே ஒரு டியூஷனுக்கு ஏற்பாடு செய்யுங்களேன்'' என்று நேரில் வந்தோ டெலிபோன் மூலமாகவோ பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். 'டியூஷன்' ஏற்பாடு செய்வதன் மூலம் பிரச்னை தீர்ந்து விடுமா? பத்து மாதங்கள் பள்ளியில் பயின்று புரிந்துகொள்ள முடியாத பாடத்தைப் பரீட்சைக்கு ஒரு மாதம் இருக்கும்போது 'டியூஷன்' வைத்துச் சொல்லிக் கொடுத்துப் புரியவைத்துவிட முடியுமா? இது ஏனோ புரிவதில்லை, பெற்றோர்கள் பலருக்கு! மாதம் இருபது ரூபாய்க்குமேல் மகனின் படிப்புக்குச் செலவு செய்கிறோமே? அவன் பள்ளியில் என்ன கற்றுக் கொண்டான்? புரியாதவைகளை நாம் ஓரளவு கற்றுக் கொடுக்கலாமே என்று பெற்றோர்கள் எண்ணுவதில்லை. மகனின் அல்லது மகளின் பள்ளிப் படிப்பைப் பற்றித் தினமும் பெற்றோர்கள் விசாரிப்பதுடன், குறைந்தது ஒரு மணி நேரமாவது அவர்களிடம் கவனம் செலுத்தினால் எவ்வளவோ சிறந்த பலன் ஏற்படக் கூடுமே!'' என்று குறைப்பட்டுக் கொள்ளுகிறார், சென்னை வித்யா மந்திர் பள்ளியின் தலைமை ஆசிரியை. நியாயந்தானே?



குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்வரையில் பல இடங்களுக்கு ஓடியாடித் திரிந்து பல பேர்களிடம் சிபாரிசு தேடி, உடற்சோர்வையும், நேரத்தையும் பொருட்படுத்தாமல் பள்ளியில் இடம் பிடிக்க அரும்பாடு படும் பெற்றோர்கள், குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்த பிறகு தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதுவதும், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தாமல், 'ஏனோ தானோ' என்று இருப்பதும் விசித்திரம்தான்!

குழந்தைகளுக்கு மிகுதியான வீட்டுப் பாடங்களைத் தலையில் சுமத்துவதையும் விரும்பவில்லை வித்யா மந்திர் ஆசிரியைகள். முப்பது, நாற்பது கணக்குகளை வீட்டில் போட்டுக் கொண்டு வரும்படி கூறினால், மிகவும் புத்திசாலியான சிறுவர்கள் அதைச் செவ்வனே செய்து கொண்டு வருகிறார்கள். படிப்பில் சுமாராக உள்ள பிள்ளைகள், வீட்டுக் கணக்குகளைச் செய்ய வீட்டில் உள்ளவர்களின் உதவியையே நாடுகின்றனர். அல்லது முன்னதாகவே பள்ளிக்கு வந்து கெட்டிக்காரப் பிள்ளைகளின் கணக்கு நோட்டைப் பார்த்துக் 'காப்பி' அடித்து விடுகின்றனர். புரிந்து கொள்ளாமல் காப்பியடிப்பதில் பயனில்லையே?

பிள்ளைகளின் படிப்பில் கவனமே செலுத்தாத பெற்றோர்கள் ஒருவகை என்றால், தீவிர கவனம் செலுத்துவோர் இன்னொரு வகை. நாள் முழுதும் பள்ளியில் படித்துவிட்டு வீடு திரும்பும் சிறுவனை அதே பாடங்களை மீண்டும் வீட்டில் கற்பித்தும், கேள்விகள் கேட்டும் எழுதச் சொல்லியும் பெற்றோர் வற்புறுத்தினால் அது அவனுக்குக்



கசந்து விடுகிறது. படிப்பில் வெறுப்பு ஏற்படவும் இதுவே காரணமாக அமைந்து விடுவதும் உண்டு.

சிறுவர்களுக்கு வேறு எவ்வளவோ வகைகளில் பெற்றோர்கள் பயிற்சி அளிக்கலாமே? செய்தித் தாளைச் சிறுவ

விடம் கொடுத்துப் படிக்கச் சொல்லலாம். உலக விவகாரங்களை ஓரளவு அவர்கள் புரிந்து கொள்ள இது உதவலாம். நூலகங்களுக்கு அழைத்துச் செல்லலாம்.


''ஒழுங்கு மீறி நடந்து கொள்ளும் சிறுவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கிறீர்கள்? பிரம்பை உபயோகித்துப் பிள்ளைகளைத் திருத்துவது சரியான முறையா?'' என்று கேட்டதற்கு அவர் கூறும் பதில்: ''வகுப்பில் குறும்பு செய்யும் பிள்ளைகளை அடிப்பதில் பயனில்லை. பென்சில், ரப்பர் முதலிய பொருள்களைப் பக்கத்திலுள்ள சிறுவர்களிடமிருந்து அபகரிக்கும் சிறுவர்களையும் நாங்கள் அடிப்பதில்லை. பள்ளியில் மாலையில் ஒரு மணி நேரம் பிள்ளைகளின் விளையாட்டு நேரம். குறும்பு செய்யும் பிள்ளைகளை விளையாட்டு நேரத்தில் வகுப்பிலேயே தங்கியிருந்து பாடங்களை எழுதும்படி செய்து விடுவோம். மற்றவர்களெல்லாம் குதூகலத்துடன் விளையாடும்போது நாம் மட்டும் வகுப்பறையில் தனிமையில் பாடங்களை எழுதும்படியாயிற்றே என்று நினைத்து உள்ளூற வேதனைப்படுவார்கள். அதன்பிறகு நல்ல முறையில் நடந்து கொள்ளுகின்றனர். இதற்கு மாறாகப் பல சிறுவர்கள் முன்னிலையில் தவறு செய்த பிள்ளையை அடித்தாலோ கடுசொல் வீசினாலோ அவன் மனம் புண்படும். ஆசிரியரிடமும் வெறுப்புணர்ச்சி தோன்றும்.



''படிப்பில் சற்று மந்தமாக இருக்கும் சிறுவனைப் பெற்றோர்கள் பலர் முன்னிலையில் இழிவாகப் பேசுவது சரியல்ல. வீட்டிலுள்ள மற்ற கெட்டிக்காரப் பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பேசுவதும் நல்லதன்று. தாழ்வு மனப்பான்மை சிறுவர்களின் உள்ளத்தில் வளர இடம் தரலாகாது. படிப்பில் சற்றுப் பின்தங்கியிருக்கும் சிறுவர்கள் வேறு சில துறைகளில் சாமர்த்தியசாலிகளாக இருப்பதுண்டு. ஒரு பையன் வகுப்பிலேயே அதிகத் தேர்வு எண் பெற்றால் அவன் தன்னைப் பற்றி மிகவும் உயர்வாக எண்ணிக் கொள்ள இடம் ஏற்படும். அது அவனுடைய வளர்ச்சிக்கே தடையாக அமையக் கூடும். இதனால்தான் தனித் தனியே ஒவ்வொரு மாணவனின் தேர்வு எண்ணையும் வெளியிடுவதில்லை நாங்கள். குறிப்பிட்ட மதிப்பெண்ணுக்குமேல் வாங்கினால் 'ஏ' என்று பொதுவாகத் தரம் வழங்கி விடுகிறோம். வீடுகளில் கூட ஒரு குழந்தையிடம் பெற்றோர்கள் அதிகமாகக் கொஞ்சுவதோ, செல்வம் கொடுப்பதோ முறையாகாது.

''சிறுவர்கள் முன்னிலையில் பெற்றோர்கள் சண்டை பிடித்துக் கொள்வது விபரீத பலன்களை அளிக்கிறது. வாழ்க்கையில் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற எண்ணம் சிறார்களின் மனத்தில் தோன்ற இதுவே காரணமாகிவிடும். சிறார்களின் முன்னிலையில் பெற்றோர் விரசமான முறையில் நடந்து கொள்ளுவது, விரசமாகப் பேசுவது இவை தவிர்க்கப்பட வேண்டும். சிறுவன்தானே, இவனுக்கு என்ன தெரியும் என்று அலட்சியம் செய்யாமல் சிறுவனுக்குள்ள அந்தஸ்தைப் பெற்றோர்கள் வழங்குவதன் மூலம் அவனுடைய தன்னம்பிக்கை வளரும்.''

தன் மகனையே கடைக்கு அனுப்பிச் சிகரெட் வாங்கி வரச் சொல்லுவார் தகப்பனார். இதுகூடப் பரவாயில்லை. தான் சிகரெட் பிடிப்பது தவறு என்ற குற்ற உணர்ச்சியுடன் தன் மகனுக்குத் தெரியாமல் சிகரெட் பிடிப்பது இருக்கிறதே — அதுதான் பெரும் தவறு. 'ஏதோ, தெரியாத்தனமாக இந்தப் பழக்கத்



துக்கு அடிமையாகி விட்டேன்; இது இன்ன இன்ன வகைகளில் தீமை பயக்கும்' என்று தன் குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்லி, அதே சமயத்தில் தவற்றினையும் ஒப்புக் கொள்ளும் தகப்பனார் பிள்ளைக்கு நல்ல வழியினைக் காண்பித்தவராவார். — 'பாணன்'



வாண்டுமாமாவின் கதை

வாண்டுமாமாவின் கதையும், கதையின் அம்சத்துக்கேற்ப அமைந்த ரமணியின் சித்திரமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. கதை விறுவிறுப்புக் குறையாமல் வாரா வாரம் சென்று கொண்டிருந்தது. ஓநாய்க் கோட்டை சிறுவர்களை மட்டுமின்றி என் போன்ற பெரியோரையும் கவர்ந்தது.

சென்னை
16–8–68 சா. ஆனந்தன்

ஓநாய்க் கோட்டையின் போக்கில் விறு விறுப்பும் ரமணி அவர்களின் ஓவியங்களில் உயிரோட்டமும் காண்கிறேன்.

வேதாரண்யம்
5–8–68 கே. ஸ்ரீநிவாஸன்

சினிமா விமர்சனம்

அலுப்பு, சலிப்புத் தட்டி, பொறுமையைச் சோதிக்கும் 'சோப்பு, ¦சீப்பு, கண்ணாடி'யை நல்லதொரு நகைச்சுவைப் படம் என்று குறிப்பிட்டது வியப்பைத் தருகிறது.

தூத்துக்குடி–2
19–8–68 பார்வதி பிரியன்

சினிமா சிந்தனை நல்ல பயனுள்ள அம்சம். அதிலும் 18–8–68 இதழ் 'சேவைக்கு வேலையில்லையா?' என்ற பகுதி மிக பயனுள்ளதாய் அமைந்து விட்டிருக்கிறது. இதைப் போல் ஒவ்வொரு பகுதியையும் ஆராய வேண்டிய சூழ்நிலை இன்று தமிழ்ப் படத் துறையில் உள்ளது. தொடரட்டும் திரைத் துருவியின் துருவல் வேலை.

ஒரு பயனுள்ள இதழில் ஒரு பயனுமில்லாத படத்துக்கு இரு பக்க விமர்சனமா? சோப்பு சீப்பு கண்ணாடியைப் பாராட்டிய ஒரே தமிழ்ப் பத்திரிகை 'கல்கி' ஒன்றுதான் !

ஏன் இந்தப் பயனற்ற விமர்சனம்?

கும்பகோணம்
16–8–68 டி.எஸ். சீதாராமன்

(ரசிகர்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டிய விமர்சனம் அந்த ஒருவகையிலேனும் பயனுடையதுதானே ?)

எம். ஜி. ஆருக்கு வேண்டுகோள்

தரமான படங்களில் எம். ஜி. ஆர். நடிக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டு வேண்டுகோள் விடுத்த திரு மணியின் கடிதத்தைப் படித்தேன். தரமான தமிழ்ப் படங்களை யார் ரசித்து வரவேற்கின்றனர்? ''ஜின் ஜினுக்கடி'', ''எலந்தப்பயம்'', ''வா, வாத்தியாரே'' பாட்டுக்களும், கவர்ச்சி நடனங்களும் கொண்ட படங்களையே அதிகமாக ரசிக்கிறார்கள். தரமான படங்களை எடுத்து நஷ்டமடையப் படாதிபதிகள் தயங்குகின்றனரே ! திரு எம். ஜி. ஆர். ஒரு கூட்டத்தில், ''ரசிகர்கள் தரமான படங்களையே பார்ப்பார்களேயானால் நானும் நல்ல கருத்துள்ள கதை கொண்ட தரமான படங்களிலேயே நடிக்கிறேன்'' என்று கூறியுள்ளார்.

சென்னை – 21
8–8–68 கே. வீரராகவன்

தரமான கதை

லட்சணமான குடும்பக் கதையில் ஆத்மீகத்தையும் இழைத்து அற்புதமாகத் 'தரிசன'த்தைப் படைத்திருக்கிறார் திரு ரா. கணபதி. சிறுகதையுலகில் நல்ல கதையான இதைத் 'தரிசனம்' பண்ண 'கல்கி' உதவியமைக்காக மிக்க நன்றி.

போளூர்
9–8–68 வி. கிரிதரன்

ஜனாதிபதி பரிசு

சினிமா சிந்தனை படித்து வருகிறேன். இன்றைய சினிமாக் கதைகளின் நிலையையும் பத்து வருடங்களுக்கு முன்பு வந்த சில சினிமாக் கதைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பத்து வருடங்களுக்கு முன்பு வந்த படங்களே சிறந்தவை எனச் சொல்ல வேண்டும்.

பெண்ணின் பெருமை, மிஸ்ஸியம்மா, எங்கள் வீட்டு மகாலட்சுமி, குடும்ப கௌரவம், பதிபக்தி, கல்யாணப் பரிசு போன்ற வெற்றிப் படங்களில் ஆபாசக் காட்சிகள் இருந்தனவா ?

இன்றையப் படங்களைப் பார்க்கும்போது இவர்கள் எப்படி ஜனாதிபதியின் பரிசை வாங்க முடியும் என்றே தோன்றுகிறது.

நான் மலையாளம், கன்னடம், ஹிந்தி பல மொழிப் படங்களைப் பார்ப்பவன் மலையாளப் படத்தில் காணப்படும் கதை மதிப்பு, இயற்கைச் சூழ்நிலை நம் தமிழ்ப் படங்களில் இல்லை.

சென்னை–12 எல். சுப்பராஜ்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



இளமையின் எழில் ததும்பும் வதனம் பூவிலும் மென்மையான சருமம் பெறுங்கள்!

...அதற்கு உங்கள் சருமத்தின் இயற்கையான ஈரத் தன்மை மாறாமல் பாதுகாப்பது அவசியம்

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள பிரத்தியேகக் கலவை 'ஹ்யுமெக்டன்ட்' சருமத்தின் இயற்கையான ஈரத்தை உலராமல் காக்கிறது. இதனால் பருவகால மாறுதல்களாலோ, தூசு முதலியவற்றாலோ, சருமம் வறட்சியடையாமல் மிருதுவாக இருக்கிறது. துல்லிய வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் வதனத்திற்கு இளமை எழிலையும், மென்மை சோபையையும் அளிக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகப் பூசிக் கொண்டாலே உங்கள் முகம் பொலிவுடன் விளங்கும். அல்லது முகத்தில் முதலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவி அதன் மேல் பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து முகம் மாசு மறுவில்லாமல் திகழும்!



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—உலகத்து அழகிகளின் வதனத்தில் மிளிர்வது

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது)

P. 6990

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylo

